www.padippakam.com

# பெண்கள் மீதான தாக்குதலும் பெண்ணுரிமைப் போரும்



"காஸ்ட்ரோ"

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# "பெண்கள் மீதான தாக்குதலும் பெண்ணுரிமைப் போரும்"

— "காஸ்ட்ரோ"

"காஸ்ட்ரோ வெளியீடு"
11-F 8, மேலப்பாளையம்
செங்கம் — 606 701

முதல் பதிப்பு ஆகஸ்ட் — 1994
பதிப்புரிமை — ஆசிரியருக்கே.
விலை ரூ.10.00

தபாலில் பெற ரூ.12.00 மட்டும்
M.O செய்ய வேண்டிய முகவரி :-
" காஸ்ட்ரோ "
11-F8, மேலப்பாளையம்,
செங்கம் — 606 701
தி. ச. மாவட்டம்

---

இந்த புத்தகத்தை வெளியிட நிதி உதவி செய்த இந்தியன் வங்கிக்கு நன்றி !

---

கம்ப்யூட்டர் டைப் செட்டிங் &
ஆப்செட் பிரிண்டிங் :-
பாரதி கம்ப்யூட்டர் பிரிண்டிங்,
சேலம் — 636 015 & 68917

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

" பெண்ணுரிமைப் போர் ", " அரசு ஊழியர்களும், அடிப்படை உரிமைகளும், " " சிரிப்பு மருந்தும். சிந்தனை விருந்தும் " ஆகிய நூல்களுக்குப் பின் வெளிவருவது. " பெண்கள் மீதான தாக்குதலும், பெண்ணுரிமைப் போரும் " என்ற இந்த புரட்சிகர நூல்.

இதில் "கற்பழிப்பு", "பிள்ளைப் பேற்றில்", "சிசு கொலையில்" "கருச் சிதைவில்", "பால்ய விவாகத்தில்", "வரதட்சணையில்", "உடன்கட்டையில்," "விபசாரப் பெண்கள் வாழ்வில்" "வரலாற்றில்", "பழமொழியில்," "கவிதையில்", "சட்டங்களும் அமுலாக்கமும்", "உழைக்கும் மகளிர் பிரச்சினைகள்", "திருமணத்துக்கு முன்பே பிள்ளை பெற்று அனாதையான பெண்கள், அவர்கள் நிலமை", பல்வேறு வகையான தாக்குதல்கள், "மதத்தின் பங்கு," தீர்ப்புக்கள், காவல் நிலைய அத்துமீறல்கள் இவை அனைத்திலிருந்தும் பெண்களுக்குப் பாதுகாப்பளிக்க அரசும், சமுதாயமும் என்ன செய்ய வேண்டும் என்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலோசனைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பல புரட்சிகர கருத்துக்கள் சிந்திக்கத் தூண்டுகின்றன. உதாரணத்துக்குச் சில :-

" உங்கள் மனைவி வேலை செய்கிறாளா? " என்று கேட்டால் " இல்லை " என்கிறான். சமைப்பதும், வீட்டைப் பராமரிப்பதும், பிள்ளை வளர்ப்பதும், கணவனுக்குப் பணிவிடை செய்வதும் வேலையாகத் தெரிவதில்லை. அவள் சம்பளம் வாங்கினால்தான் அது வேலையாகத் தெரிகிறதா?"

" திருமணம் வேண்டாம் " என்று ஒரு பெண் தனியாக இருக்க முடிவு செய்து விட்டாலோ, உறவினர்களும், சுற்றுப் புறத்திலுள்ளோரும், அவளைப் பொதுச் சொத்தாகப் பார்க்கின்றனர்."

"தன்னைக் கெடுத்தவனைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து கொள்வதாகப் பல திரைப் படங்களில் பலாத்காரம் நியாயப்படுத்தப்படுகிறது."

"பெண் திருமணமானவள் என்பதைத் தெரிந்து கொள்ள தாலி, மெட்டி அணிவிக்கப்படுகிறது. ஆண் திருமணமானவன் என்பதை எப்படி தெரிந்து கொள்வது?"



படிப்பகம்

www.padippakam.com

"கணவன் இறந்தால் மனைவி நடை பிணமாகக்கப்பட வேண்டும். ஆனால் கணவன் மட்டும் உடனடியாக மறுமணம் செய்து கொள்ளலாம்."

"ஒரு வயது கூட நிரம்பாத 1515 விதவைகள் . 1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1,85,339 விதவைகள் 5 முதல் 10 வயதுக்குள். இவர்கள் வயதுக்கு வந்தவுடன் முதலில் அணிவதே விதவைக்குரிய வெள்ளைப் புடவை!

"விலை மாதுவின் பிள்ளையைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கும்போது தந்தை பெயர் என்ன சொல்வது? – இது பற்றிய தீர்ப்பு.

"விலை மாதுக்களிடம் வரும் வாடிக்கையாளர்கள் மத நல்லிணக்கமுள்ளவர்கள். இந்து வெறியர் இந்து பெண்ணையும், முஸ்லிம் வெறியர் முஸ்லிம் பெண்ணையும் தேடுவதில்லை. சுமாரான அழகுள்ள பெண்ணையே தேடுகின்றனர்."

"ஆண் கற்பழிக்கிறான். தப்பித்து விடுகிறான். அவனிடம் பொறி இல்லை. பெண்ணிடம் பொறி உள்ளதுக் கருவுறுகிறாள். விபசாரி ஆகி விடுகிறாள்."

இவை ஒரு துளியே ! உள்ளே ஏராளம் ! ஏராளம் !

வாங்கிப் படியுங்கள். புத்தகம் போட்டவரையும் ஊக்குவியுங்கள்.

தவறாமல் உங்கள் விமர்சனத்தையும் எழுது அனுப்புங்கள்.

அன்புடன் ஆதரவை நாடும்

செங்கம் — அன்பன்

1–7–94 — " காஸ்ட்ரோ "

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்


1. வரலாற்றிலும், நடைமுறையிலும், பெண்ணடிமைத் தனம்.
2. பெண்களை இழிவுபடுத்தும் பொன் (புண்) மொழிகளும், பழமொழிகளும்.
3. "சதி' ஒரு பெரும் 'சதி'.
4. பெண்ணுரிமைப் போரில் கவிஞர்களின் ஆவேசம்.
5. வர்தட்சணையும், அதன் காரணமாக கொலை வெறித் தாக்குதல்களும்.
6. பால்யவிவாகமும், விதவைக் கோலமும், விதவிதமான தாக்குதல்களும்.
7. பிள்ளைப் பேறும், அவப் பேரும், சிசு கொலையும்.
8. கற்பழிப்பு : ஆணுக்கு வீர விளையாட்டு, பெண்ணுக்கு?
9. விலைமாது! அவள் விரும்பி ஏற்ற தொழிலா? சமுதாயம் சுமத்திய தொழிலா?
10. பெண்ணடிமைத் தனத்தில் மதத்தின் பங்கு.
11. சட்டங்களும், அமுலாக்கமும், ஓட்டைகளும், சட்ட மீறலும்.
12. சவால்களைச் சந்தித்த வீராங்கனைகள்.
13. உழைக்கும் மகளிர் பிரச்சினைகள்.
14. சில கேள்வி – பதில்கள்.
15. எதிர்கால திட்டத்தில் : பல்வேறு ஆலோசனைகள் முடிவு.


படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றிலும், நடைமுறையிலும் பெண்ணடிமைத்தனம்

## பெண்கள் அடிமையான வரலாறு

மனிதகுலம் தோன்றி வளர்ந்த காலத்தில் இயற்கைக்கும், மிருகங்களுக்கும் பயந்த மனிதன் கூட்டமாக வாழ்ந்தான். கூட்டமாக உழைத்தான். மொத்தமாக சேமித்தான். கூட்டமாக உணவருந்தினான். அப்போது குடும்பம் ஏற்படவில்லை. ஆடு, மாடுகளைப் போல் வாழ்ந்தனர். கணவன், மனைவி என்ற வாழ்க்கை நெறி ஏற்படவில்லை ; வரையறையேதுமில்லை ; அவரவர் விருப்பம் போல் பலரிடம் உடலுறவு கொண்டனர்.

இந்த அமைப்பில் குழந்தைகளுக்கு தாய் யார் என்று தெரியும். தந்தை யார் என்று தெரியாது. இதனால் தாயின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. அவள் வைத்ததுதான் சட்டம். பெண் ஆட்சி நடைபெற்றது. தாய்க்கு மரியாதை தரப்பட்டது. தாயைக் கொலை செய்வது குற்றங்களிளெல்லாம் பெருங்குற்றமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இச் சமுதாயத்தில் உறவு என்பது தாய் வழி வந்ததால் இதற்கு தாய் வழிச் சமுதாயம் என்று பெயர்.

இச் சமுதாயத்தில் ஆண் உழைத்து தானியத்தை சேகரித்து வர வேண்டும். அவ்வாறு செய்யாத ஆண் கூட்டத் தலைவியால் அக்கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். அவன் வேறு ஒரு மனிதக் கூட்டத்தில் போய் சரணடைந்து விடுவான்.

மிருகங்களிடமிருந்தும், பிற மனித கூட்டங்களிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஆண்கள் அதிகம் தேவைப்பட்டனர். சண்டையில் பல ஆண்கள் இறந்ததால் ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஒரு ஆணுக்கு பல பெண்கள் என்ற நிலை ஏற்பட்டது. பெண்களின் சிறப்பு குறைய ஆரம்பித்து, அக்காலத்திலேயே பெண் கொலையும் ஆரம்பித்தது.

விவசாயம் வளர்ந்து, விவசாயக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அக்கருவிகளை தனிமனிதன் பயன்படுத்தவும், சேகரிக்கவும் ஆரம்பித்தான். ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் மிருகங்களிடம் பயம் குறைந்தது. எனவே இதுவரை பொதுவில் இருந்த நிலங்களுக்கு வரப்பு கட்டி தனி சொத்து ஆக்கினான்., நில உடமை ஏற்பட்டது.

ஆடுமாடுகளை வளர்க்கவும், அவற்றை இனப் பெருக்கம் செய்யவும் ஆரம்பித்தனர். இதனால் மக்கள் எண்ணிக்கையைக் காட்டிலும் ஆடு மாடுகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. பாத்திரங்கள் செய்வது, நெசவு, விவசாயம் என தொழில் அபிவிருத்தி அடைந்தது.

மனிதனுக்கு தனியாக ஆடு, மாடுகள், நிலம், தறி போன்றவை ஏற்பட்டதால் கூட்டுக் குடும்பம் உடைந்தது. தன் சொத்துக்கு தனி வாரிசு தேவைப்பட்டது. இதனால் தனியாக மனைவி, பிள்ளைகள் தோன்றினர் ; தனிக் குடும்பம் தோன்றியது. மதக் கருத்துக்கள் பரவி தனிக் குடும்பம், கற்பு நெறி, பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் போன்றவை வளர்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

ஆடு, மாடு, நிலம் போன்றவற்றிற்கு ஆண் உரிமையாளன் ஆனான். ஆணின் கை ஓங்கியது. பெண்ணுரிமை வீழ்ந்து நொறுங்கியது. ஆணின் வசதிக்காக ஆடு, மாடு, ஒட்டகம், வேலையாள் ஆகியோருடன் மனைவியும் வந்து சேர்ந்தாள். அவள் அடிமையானாள். அவளும் கடுமையாக உழைக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவள் வாரிசை உருவாக்கும் இயந்திரம் ஆனாள்.

நிலஉடமை ஏற்பட்ட பின் கூலி ஆட்களும் ஏற்பட்டனர். ஆண்டான் அடிமை என்ற வர்க்கங்கள் தோன்றின. சிலர் வசதிக்காக பலர் உழைக்கும் நிலை ஏற்பட்டது. நில உடைமையாளர் கை ஓங்கியது. இவ்வமைப்பில் கூலி ஆளுக்கு திருமணம் நடந்தவுடன் மணப்பெண்ணை முதலிரவுக்கு நில உரிமையாளர் மற்றும் மதத் தலைவரிடம் அனுப்பும் வழக்கம் இருந்தது. ஆண் வழி சொத்துரிமை ஏற்பட்டது. வீட்டிற்கு அவன் தலைவனானான். பெண் ஆணின் காமவெறியைத் தணிக்கும் கருவியானாள்.

ஆண் ஆதிக்கம் ஏற்பட்டவுடன் அவன் பல மனைவிகளை வைத்துக் கொள்வது, கூலி வேலைக்கு அழகிய பெண்களை வைத்துக் கொள்வது, அந்தப்புரங்களை ஏற்படுத்திக் கொள்வது என்று அவன் வசதியைப் பெருக்கிக் கொண்டான். தாயாண்மைக் காலத்து "பல நாயகர்கள் " 'ஒரு தாய்' என்ற வழக்கு ஒழிந்தது மட்டுமின்றி, அத்தகைய வழக்கம் இழிவுடையதாக கருதப்படலாயிற்று.

பெண்ணடிமைத்தனத்தின் மிகக் கொடுமையான அடக்குமுறைகள் (கற்பு நெறி வலியுறுத்தல்), விதவைகளை ஒதுக்கிவைத்தல், தலை மழித்தல், உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம் போன்றவை தலை தூக்கின.

அரசின் தோற்றத்திற்கு முந்தைய சமூகத்தில் பெண்களுக்கு அதிகாரம் இருந்ததால் புனிதமாகக் கூட மதிக்கப்பட்டனர். ஆண்வர்க்க ஆதிக்கம் நிலை பெற்றவுடன் தீவிர நடவடிக்கைகள் மூலம் பெண்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பெண்கள் கையில் அதிகாரம் ஆபத்தானது எனக் கருதப்பட்டது.

## ஸ்பார்ட்டகஸ்

மனித வரலாற்றில் உரிமைப் போருக்கான முதல் அத்தியாயத்தைப் படைத்தது. " ஸ்பார்ட்டகஸ் ". அந் நாட்டில் ஒரு சட்டம் இருந்தது.

" ஸ்பார்ட்டகஸின் பெண்ணே ! நீ வீரனையே பெற்றெடு. உன் சயன அறையில் வீரன் ஒருவனுக்குத்தான் உன் உடம்பை ஒப்படைக்க வேண்டும். உனது கணவன் வலிமையற்றவனாகவோ, நோயாளியாகவோ இருப்பானாகில் கர்ப்ப வாசலை அவனுக்கு அடைத்துவிடு. திரேக பலமில்லாதவனுக்கு மனைவியாகி விட்டாலும் தேசபக்தியுள்ள ஸ்பார்ட்டகஸின் பெண்ணே! உனது கணவனை ஒதுக்கித் தள்ளிவிடு. தேச நலனுக்காக அரசாங்க முத்திரை பெற்ற அபரிமிதமான பலசாலிகள் உன் இரவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அந்த வீரர்களையே நீ அணைக்க வேண்டும். அப்படியும் நீ பெற்ற குழந்தை பூஞ்சையாக இருப்பின், பலமற்றதாக தேசத்துக்கு பயன்படும் நிலையில் இல்லாமல் இருப்பின், அதை ஒலிம்பசுக்கு அப்பால் காட்டு மிருகங்களுக்கு இரையாக எறிந்து விடுவாயாக" என்பதே அது !



படிப்பகம்

www.padippakam.com

" ஈன்று புறந்தருதல்
தாய்க்கு கடனே "
என்பது கூட தாயின் விருப்பமல்ல
"அரச கட்டளை ".

ஸ்பார்டகஸ் சட்டத்துக்கும், சங்க இலக்கியப் பாடலுக்கும் எத்தனை நெருக்கம் பார்த்தீர்களா?

குப்தர்களின் காலம் 'பொற்காலம்' என்று பறை சாற்றப்படுகிறது. ஆனால் இவர்கள் காலத்தில் வேசிகள் இரண்டுநாள் வருமானத்தை அரசுக்கு வரியாக செலுத்த வேண்டும் என்ற சட்டம் இருந்தது.

கஜினி முகம்மது சோமநாதபுரம் / ஆலயத்தைக் கொள்ளையடித்தபோது அதில் 500 தாசிகளும், தஞ்சை கோயிலில் 400 தாசிகளும் இருந்ததாக குறிப்புக்கள் உள்ளன.

மன்னராட்சியில் பெண்கள் ஆடு, மாடுகளாக நடத்தப்பட்டனர்.

## பெண் சிசுக் கொலை

சில குடும்பங்களில் பெண் குழந்தைகள் நதிகளிலோ, கடலிலோ எறிந்து கொன்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு 19—ஆம் நூற்றாண்டில் மட்டும் ஜரிஜா இரஜபுத்திர இனத்திலிருந்து குறைந்த பட்சம் 20,000 பெண் குழந்தைகள் கங்கையில் எறிந்து கொன்றதாக வரலாறு காட்டுகிறது.

அக்பர், ஜஹாங்கீர் போன்ற மன்னர்கள் காலத்தில்கூட இது போன்ற பெண் சிசுக் கொலைகள் சர்வ சாதாரணமாக நடந்திருக்கின்றன. இததை தடுக்க முடியாமல் திணறியிருக்கிறார்கள்.

தெய்வங்களுக்கு பெண் குழந்தைகளைப் பலியிட்டால் செல்வமும், செல்வாக்கும், அதிர்ஷ்டமும், கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கோயில்களில் பெண் குழந்தைகள் பலி கொடுக்கப்பட்டன. இந்த பலிக்காக பெண் குழந்தைகள் ஆடு, மாடுகளைப் போல் விற்கப்பட்டிருக்கின்றன.

ஹூக்ளி நதி ஆரம்பத்தில் சாகர் என்னும் தீவில் பெண் குழந்தைகள் தெய்வத்தின் பெயரால் பலியிடப்படுவதை அறிந்த வெல்லெஸ்லி பிரபு அதைத் தடுக்க 1803 — ஆம் ஆண்டிலேயே ஓர் ஆணையைப் பிறப்பித்துள்ளார்.

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக் காலத்தில் ஆறு கோடி இந்தியர்கள் ; மக்கள் தொகையில் கால் பகுதியினர் ஆங்கில ஆட்சியாளர்களின் செலவுக்காக மட்டுமே உழைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் காம வெறியைத் தணிக்க லட்சக் கணக்கான பெண்கள் சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமாகவும் இருந்து வந்தனர்.

நான்காவது முகலாய சக்கரவர்த்தி ஜகாங்கீர் கி.பி. 1605 முதல் 1627 வரை நாட்டை ஆண்டார். அவருடைய அந்தப்புரத்தில் 300 மனைவிகளும், 5,000 அழகிய பெண்களும் இருந்தனர். அத்துடன் 12,000 யானைகளும் 10,000 எருதுகளும், 2,000 ஒட்டகங்களும், 4,000 நாய்களும், 10,000 அஞ்சல் புறாக்களும், அவரால் வளர்க்கப்பட்டன.

விஜயநகரத்தை ஆண்ட இரண்டாவது அரிகரனுக்கு 12,000 மனைவிகள் இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

அண்டை நாட்டு அழகிமீது ஆசைப்பட்டு பிரோஷா துக்ளக் மீது படையெடுத்து தோற்கடிக்கப்பட்டு இறந்தான். 2,000 மனைவிகள் அவனுடன் உடன்கட்டை ஏறினார்கள்.

## CHASITY BELT

பதிமூன்றாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் போருக்குப் போகும் கணவன் தன் மனைவி அடுத்தவனிடம் சென்று உடலுறவு கொண்டுவிடக் கூடாதே என்பதற்காக அணியப்பட்டது CHASITY Belt. கணவன் மாட்டி விட்டுப் போவான். கற்பு பெல்ட் என்றால் ஏதோ இடுப்பு பெல்ட் போலச் சுலபமாகப் போட்டு அவிழ்க்கும் விஷயமல்ல ..... முற்றிலும் இரும்பால் ஆன கவசம் ! இடுப்பிலிருந்து தொடை வரை நீளும் இநத இரும்புக் கவசத்துக்குப் பூட்டு உண்டு. அதன் ஒரே சாவி, போர்க்களத்தில் ஆணவமாய்த் தொங்கிக் கொண்டிருக்கும் !

பாத்ரூம் போகும் போதும் தீட்டுப் போன்ற சமயங்களிலும் அந்தக் கவசத்தால் பெண்கள் எத்தனை தூரம் கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ! கவசத்தை வருடக் கணக்கில் அணிவதால், துருப்பிடிப்பதால் கவசம் அந்த இடங்களில் புண்கள் ஏற்படுவதும் சர்வ சகஜமாய் இருந்தது.

மொத்தத்தில், இதுவும் ஒரு வகை பெண்ணடிமைத்தனமே !

சங்க காலத்தில் திருமணத்திற்கு பெண்ணுக்கு 12 வயதும், ஆணுக்கு 16 வயதும் ஆகியிருக்க வேண்டும். கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு நோற்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

நெய் கலவாத சோறு, கீரைக் குழம்பு, கற்படுக்கை ஆகியவை இவர்களுக்கு துணை ஆயின. மறுமணம் அனுமதிக்கப்படவில்லை. பிறர் மனம் புகா கற்பு வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் " தேவதாசி " முறையை வலியுறுத்திய சத்தியமூர்த்தி ஐயரை நோக்கி, " உங்கள் வீட்டுப் பெண்கள் பொட்டு கட்டி தேவரடியாராக இருக்கட்டுமே " என்று கேட்டார் தமிழ்நாட்டின் முதல் பெண் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்.

## பெண் உறுதியற்றவள்

இவ்வுலகில் மனவுறுதி படைத்த எத்தனையோ பெண்களை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். வைராக்கியத்தோடு தங்கள் கொள்கையைக் கடைப்பிடித்துப் போராடும் பெண்களையும் சந்திக்கிறோம். இப்படிப்பட்ட பெண்கள் முந்தைய காலத்திலும் வாழ்ந்தே இருப்பர். ஆனால் திருவள்ளுவர் பெண்களின் மனத்தை நிலையில்லாதது – உறுதி இல்லாதது என்று கூறுகிறார். 'கூடா நட்பு' என்ற அதிகாரத்தில் ஒருவனுக்கு உற்றார் போன்று விளங்கி, ஆனால் உண்மையில் உற்றாராக இல்லாதவரிடத்து கொண்ட நட்பு நிலையில்லாதது – தடுமாறக் கூடியது என்று சொல்ல வந்த திருவள்ளுவர் – அத்தகையாரிடம் கொண்ட நட்பு பெண்களின் மனம் போல வேறுபடும் என்று கூறுகிறார். பெண்ணின் மனம் உறுதியுடையதாக இருக்காது என்று கூறுவது பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பதாகுமா?



படிப்பகம்

www.padippakam.com

## வரைவின் மகளிர்

கணிகையர் பற்றி திருவள்ளுவர் கடுமையாகப் பேசுகிறார். 'வரைவின் மகளிர் ' என்று ஓர் அதிகாரமே படைக்கிறார். அதாவது, ஒழுக்கத்தில் வரையில்லாத பெண்கள் என்று மிகக் கடுமையாக, அவர்களை அன்பை விரும்பாத, பொருளை விரும்புபவர் என்றும் கிடைக்கக் கூடிய பயனை அளந்து பார்த்து அதற்கு ஏற்றவாறு இனிய சொல் கூறுகின்ற பண்பற்ற பெண்கள் என்றும், நெஞ்சத்தை நிறுத்தியாளும் ஆற்றல் இல்லாதவர் என்றும், மாய மகளிர் என்றும் ஒழுக்க வரையறையில்லாதவர் என்றும், இருவகைப் பட்ட மனத்தை உடையவர்கள் என்றும் சாடுகின்றார்.

இந்த அளவிற்குக் கடுமையாகச் சாடும் திருவள்ளுவர், அவர்களை நாடும் ஆண்களை இந்த அளவிற்குச் சாடவில்லை, என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அக்காலக் கட்டத்தில் நிலவிவந்த பெண்ணடிமைத்தனக் கருத்துக்கள்தாம் வள்ளுவரின் எழுத்துக்களிலும் பிரதிபலிக்கின்றன. ஆகவே, அவர் கூறிய அனைதது விஷயங்களையும் இன்றுள்ள சூழ்நிலையில் பொருத்திப் பார்ப்பது சரியல்ல, இதைப் புரிந்து கொள்ளாமல் வள்ளுவன் ஒரு யுகத்திற்கு மட்டும் உரியவன் அல்லன் ; அவன் எல்லா யுகங்களுக்கும் உரியவன் என்று பொதுப்படையாகக் கூறுவது, அவன் கூறும் பெண் பற்றிய இலக்கணத்தையும் சேர்த்து ஒத்துக் கொள்வதாகவே அமையும்.

## அவள் நிலை

காவிரிபூம்பட்டினத்தில் அவள் மாதவி, தஞ்சை பெரியகோவிலில் பொட்டுக் கட்டிய தேவதாசி. இன்றைய திரைப்படங்களில் அரை நிர்வாணமாக, கலைவளர்ப்பவளாக, அவள் கால்கள் காலங்காலமாய் ஆடியபடி !

அவள் கண்ணில் மின்னலானதும், உதட்டில் புன்னகையானதும், காலில் துடிப்பானதும் வயிற்றுத் தீ. ஆடத் தெரிந்தவளை அது அரங்கேற்றிற்று. ஆடத் தெரியாதவளை அது தெருமுனையில் நிறுத்தியது.

## பூமித்தாய்

'பூமித் தாய்' என்கிறான். அதை மிதிக்கிறான். 'காவிரித் தாய்' என்கிறான். அதில் மலம் கழிக்கிறான். துணி துவைக்கிறான். 'புனித கங்கை' என்கிறான். அதில் இறந்தவர்களின் பிணங்களை எறிந்து விடுகிறான். 'மலர்' என்கிறான்; வாடுவதால் ! நிலவென்கிறான் ; அமாவாசை தொடர்வதால் !

## சமுதாயம் நாறாமல் காப்பவள் அடிமை

பெண் துணி துவைக்கிறாள். மலம் அள்ளுகிறாள் தெரு பெருக்குகிறாள். ஆனாலும் அவள் அடிமை.

எனினும் மனைவியை 'தீண்டத்தகாதவள்' என்று ஒதுக்குவதில்லை. பெருந்தன்மையால் அல்ல. அவளிடம் உடல் சுகத்துக்குப் போக வேண்டும் என்பதால்.



படிப்பகம்

www.padippakam.com

## காய்க்காக அல்ல, கள்ளுக்காக

கள்வடிப்பதற்காகவே விடப்படும் தென்னை, பனைமரங்களின் முதல் பாளை விட்டதுமே கலயத்தைக் கட்டி விடுவார்கள். இம் மரங்களில் காய்ப்பே இருக்காது. அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பெண்ணின் வாழ்க்கை கள் இறக்க ஒதுக்கப்பட்ட மரம் போன்றது. அவள் வாழ்வில் காய் கனி என்பதெல்லாம் முக்கியமல்ல. அவளுடைய மகிழ்ச்சி முக்கியமல்ல, மற்றவர்கள் இன்பத்துக்காக வாழும் ஜடம் அவள். இதனாலேயே நெஞ்சுறுதியையும் மனவலிமையையும் இழந்தாள்.

## அபலையே அழகு

அபலையாக இருப்பதே உன் அழகல்லவா? அழகுக்கு இலக்கணம் அச்சம், பேதமை, மடமை ஆகியவை அல்லவா ! விரோதிகள் எவரேனும் இருக்கிறார்களா என்று கானகத்து மான் மரங்களினூடே எட்டிப்பார்த்துக் கொண்டு வரும்போது அதன் விழிகள் எவ்வளவு மிரண்டிருக்கும். மிரண்டு பயந்த இவ்விழிகளைச் சிவப்பாக்கி " மான் விழியாள் " என்றான்.

'எவரும் வலிய வந்து உன்னைப் பலாத்காரம் செய்து விட முடியும் பிறகு ஒன்றுக்கும் உதவாத குப்பையாவாய் ', இப்படிப்பட்ட ஓர் அச்சத்தை பூப்படைந்த நாள் முதல் பெற்றோரும், உற்றாரும் அவளுக்கு ஏற்படுத்தி அவளை அச்சத்திலேயே இருக்கச் செய்கிறார்கள்.

## விமானப் பணிப்பெண்

அலங்காரப் பதுமைப்போல் பயணிகளை கவனிக்கும் வேலை. இவள் திருமணம் செய்து கொண்டால் வேலை இல்லை. பிள்ளைப் பெற்றுக் கொண்டால் வேலை இல்லை. 35 வயதைத் தாண்டினால் வேலை இல்லை என்பது போன்ற கட்டுப்பாடுகள் இவள் நிம்மதியைக் கெடுக்கின்றன.

## பர்சனல் கிளார்க், பர்சனல் செகரட்டரி :

ஸ்டெனோ! எல்லாவற்றிற்கும் பெண்கள்தான், ஏன்? கண்ணுக்குக் குளுமை வேண்டும். முடிந்தால் அவளுடன் சில்மிசம் செய்ய வேண்டும். மஞ்சள் கயிறு கழுத்தில் ஏறினால் மவுசு குறைந்து விடும். ஆகையால் அவள் கல்யாணம் செய்யக் கூடாது. கல்யாணம் செய்து கொண்டால் வேலை போய்விடும். வாணிபக் கலாச்சாரத்தின் உயிர் நாடியே இவர்கள்தான். பொருட்களின் வியாபார விளம்பரங்களில் இவர்கள்தான். முழு நிர்வாணமாகவும், அரை நிர்வாணமாகவும் கவர்ச்சி காட்டி விளம்பரப் படுத்துகிறார்கள்.

## ஜனநாயகத்தில் பெண்கள் :

ஒரு ஜனநாயக அரசு மட்டும் எப்படி இந்த கலாச்சார வளையத்தில் இருந்து அந்நியப்பட்டிருக்க முடியும்? சாரயத்தைக் கொடுத்து மக்களில் பெரும்பான்மையினரை விலங்குகளாக்கினால் அதிக லாபம் (வாக்குகள்) பெறமுடியும் என்றால் சாராய தர்மம் நிலை நாட்டப்படுகிறது. விபச்சாரத்தினால் பெரும்பான்மை மக்களைத் திருப்தி செய்யலாம் என்று கண்டால் 'சிவப்பு விளக்கு பிராந்திய நியாயங்கள்' முழுமை பெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## கல்வியறிவு ;

பெண்களில் 81% பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். 2.3% மட்டும் மாத சம்பள வேலையில் உள்ளனர்.

## சாமி, மிரள் வருதல் :

சாமியாடுதல், மிரள் வருதல், தெய்வம் ஆடுதல் என்று பெண்களை நம்ப வைத்து மனோ ரீதியாக சிறைப்படுத்துகின்றனர். சாமி ஆடுவதற்கென்றே சில பெண்களை ஒதுக்கி வைத்துள்ளனர். இந்த வேலையும் பெண்களுக்கே உரியது.

பெண்கள் அமைதியானவர்கள். அமைதியாகத்தான் இருப்பார்கள் என்ற எண்ணம் நீண்ட காலமாக வேரூன்றியுள்ளது.

" உங்கள் மனைவி வேலை செய்கிறாளா ? " என்று கேட்டால் " இல்லை " என்கிறான். சமைப்பதும், வீட்டைப் பராமரிப்பதும் பிள்ளை வளர்ப்பதும், கணவனுக்கு பணிவிடை செய்வதும் வேலையாகத் தெரிவதில்லை. அவள் சம்பளம் வாங்கினால்தான் அது வேலையாகத் தெரிகிறதோ?

வேலைக்குப் போக வேண்டும், சம்பாதிக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஆனாலும் வீட்டு வேலைகளையும் அவள் மட்டும்தான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்: அவன் அடுப்படிக்குச் செல்லுவது கௌரவக் குறைச்சல் என நினைக்கிறான்.

திருமணமே வேண்டாம் என்று ஒரு பெண் தனியாக இருக்க முடிவு செய்து விட்டாலோ உறவினர்களும், சுற்றுப்புறத்திலுள்ளோரும் அவளைப் பொதுச் சொத்தாகப் பார்க்கின்றனர். கதைகளைக் கட்டி விடுகின்றனர். அவள் வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தால் முதலாளியோ, மேஸ்திரியோ, அதிகாரியோ அவர்களுக்குப் படியவில்லை என்றால் 'நடத்தை கெட்டவள் ' என்று முத்திரை குத்தி வீட்டுக்கு அனுப்பி விடுகின்றனர்.

தொடர்பு வழிச் சாதனங்களில் முக்கியமான சினிமா பெண்களை பழைய பாணியில் அடக்கம், குடும்பப் பாங்கு, தியாக தீபம், உருகும் மெழுகுவர்த்திகள் என்று ஒரு எல்லையிலும் கவர்ச்சியான போகப் பொருளாக மற்றொரு எல்லையிலும் பிரதிபலித்து வருகின்றன.

குடும்பப் பாங்கு நாயகிகள், தாய்ப்பாசம் மிக்கவர்கள். கற்புக்கு களங்கம் வந்தால் உயிரை விடுபவர்கள், தாலி மகிமை பேசுபவர்கள், கணவனிடம் உதை வாங்கியும் பக்தி செலுத்துபவர்கள், கவர்ச்சிப் பாவையாக, விபச்சாரியாக அரைகுறை ஆடைக்காரியாக, விதவையாக வெள்ளித் திரையில் மிளிர்கின்றனர்.

தன்னைக் கெடுத்தவனைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து கொள்வதாக பல திரைப்படங்களில் ' பலாத்காரம் ' நியாயப்படுத்தப்படுகின்றது. விதவை வெள்ளைப் புடவை கட்ட வேண்டும், தலையில் பூ வைக்கக் கூடாது, ஒரு மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று பல படங்களில் ' பண்பாடு ' போதனை நடைபெறுகிறது.

ஆணும், பெண்ணும் சமமாக வீட்டு வேலை செய்வது காலத்தின் கட்டாயம். ஆனால் ஆண் வீட்டு வேலை செய்வது பல படங்களில் கிண்டல் செய்யப்படுகின்றது. இதற்காகவே சிரிப்பு நடிகரை மட்டும் வீட்டு வேலை



படிப்பகம்

www.padippakam.com

செய்ய வைத்து ரசிகர்களைக் குஷிப்படுத்துகிறார்கள்.

குழந்தை மனதில் வக்கிர உணர்வைத் தூண்டும்படி குழந்தைகளையே பாட வைத்திருக்கிறார்கள் 'அஞ்சலி' படத்தில்.

பெண்கள் வயதுக்கு வந்த மறு நிமிடமே அவர்களை வீட்டுச் சிறையிலடைத்து விடுகிறார்கள். இது அவர்களைக் கோழைகளாகவும், மன நோயாளிகளாகவும் மாற்றி விடுகிறது. அவர்களுடைய உருவமும், உணர்வுகளும் மட்டும் தங்குதடையில்லாமல் வளர்கின்றன. அவற்றிற்கும் விலங்கிடப்படுகிறது. என்றைக்கு அம்மா, அப்பாவாக பார்த்து திருமணம் செய்து வைக்கிறார்களோ, அதுவரை அவள் வீட்டு வேலைகளைச் சுமக்கும் எருமை மாடுதான். அவள் சொன்னதைச் செய்யும் குழந்தை தான். பள்ளிக்குப் போனால் காதல் வந்து விடும் 'பெண் கெட்டுப் போய்விடும்' என்று பலரைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. மாப்பிள்ளைத் தேர்வில் பெண்ணுக்கு உரிமையில்லை.

வீட்டில் அடைப்பட்டுக் கிடந்தவளை முன் பின் தெரியாத ஒருவனுக்கு கட்டிக் கொடுத்து, அவளை முதலிரவு அறைக்குள் பலாத்காரமாகத் தள்ளி விடுகிறார்கள். வெறி கொண்ட மாப்பிள்ளை ஒரே பாய்ச்சலில் அவளை பயமுறுத்தி சின்னா பின்னப்படுத்துகிறான். கணவன் மீது முதலில் மென்மையான காதலும், அன்பும் வளர்வதற்குப் பதிலாக 'ஒரு முரடனிடம் ஒப்படைத்து விட்டார்களே' என்ற வெறுப்பும், ஆத்திரமும் வருகிறது; வளர்கிறது. குடும்ப ஒற்றுமை சிதைகிறது.

மற்றும் பல்வேறு வகைகளில் நடைபெறும் தாக்குதல்களைப் பார்ப்போம்.

2

# அறிஞர் உரையில்

"அறிஞர் வாக்கு" என்ற பெயரில் மேனாட்டு அறிஞர்களின் தத்துவக் கருத்துக்கள் புழக்கத்தில் உள்ளன. அவற்றுள் பல ''பொன் மொழிகள்' பெண்களுக்கெதிரான 'புண் மொழிகளே!

சில பொன் மொழிகளைப் பார்ப்போம்.

" அவளுடைய கண்ணீரும், புலம்பலும் ஏமாற்று வித்தை ; பெண் அவளைத் தவிர எவரையும் நேசிப்பதில்லை ".

" ஆணுக்குப் பொய் கடைசி புகலிடம் ! பெண்ணுக்கு அதுதான் முதலுதவி ."

" பெண் திருமணத்தின் போது அழுகிறாள் " ஆண் அதற்குப்பின்பு அழுதுகொண்டே இருக்கிறான் ".

" துரோகமே ! உன் பெயர்தான் பெண்ணா? "

— ஷேக்ஸ்பியர்

" பெண்ணால் ஒரே ஒரு இரசியத்தை மட்டுமே காப்பாற்ற இயலும் ; அதுதான் அவள் வயது ."

— வால்டர்



படிப்பகம்

www.padippakam.com

" பெண்கள் தேவகன்னிகள் ; ஆனாலும் திருமணத்துக்குப் பின் பிசாசுகள் "

—பைரன்

" ஓர் உண்மையான மனிதன் விரும்புவது ஆபத்து மற்றும் விளையாட்டு ; அவன் பெண்களை விரும்பக் காரணம் அவள்தான் மிகவும் ஆபத்தான விளையாட்டுப் பொருள் "

" வானத்திலிருந்து 10 படி பேச்சு இறங்கியது ; பெண்கள் 9 படியும் ஆண்கள் ஒரு படியும் எடுத்துக் கொண்டனர் ".

— யூரிப்பிடஸ்

" வாலிபப் பிராயத்தில் மனைவிக்கு துரோகம் செய்யக் கூடாது என்று நினைக்கிறோம் ; முடிவதில்லை.

வயோதிகத்தில் மனைவிக்கு துரோகம் செய்ய நினைக்கிறோம் ; அதுவும் முடிவதில்லை ". — ஆஸ்கார் ஒயில்ட்

## பழமொழிகள்

## கேவலப்படுத்தும் பழமொழிகள்

பெண்களைக் கொச்சைப் படுத்தியும், இழிவுபடுத்தியும், கேவலப்படுத்தியும் ஏற்படுத்தப்பட்ட பழமொழிகளும், அடைமொழிகளும் தமிழ் இலக்கியத்தை அலங்கரிக்கின்றன.

" சேலை கட்டிய மாதரை நம்பாதே "

" பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு "

" பெண்கள் இருந்தவிடம் சண்டைகள் பெருத்தவிடம் "

" குழாயதச் சண்டை "

" பேதமை என்பது மாதற்கு அணிகலன் "

" வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும் ஈனப் பிறவிகள் "

" அடுப்பூதி மங்கை "

" உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு "

" கணவனே கண்கண்ட தெய்வம் "

" கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் "

" தாலி பெண்ணுக்கு வேலி "

" படி தாண்டாப் பத்தினி "

" மூக்கணாங் கயிறு "

" மூன்று முடிச்சு போட்டால் போச்சு "

" ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே "

" சீறி வரும் பாம்பை நம்பு , சிரித்து வரும் பெண்ணை நம்பாதே "

## பெயருடன் ஒட்டிக் கொள்ளும் கணவர் பெயர்

சசீலா என்ற பெண் கோபால் என்பவருக்கு மனைவியானவுடன் ' சுசீலா கோபால் ' ஆகிவிடுகிறார். ஆனால் கோபால் ' கோபால் " தான். அவர் ' கோபால் சுசீலாவாக ' மாறுவதில்லை ; இதிலும் பாரபட்சம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

## வழுக்கி விழுந்தவள்

பெண் தவறிழைத்தால் 'வழுக்கி விழுந்தவள்' என்கிறோம். ஆண் தவறு செய்தால் 'வழுக்கி விழுந்தவன்' என்று சொல்லுவதில்லை.

## கரையேற்றுவது

பெண்ணைக் கட்டிப் கொடுப்பதை "கரையேற்றுவது" "கட்டிக் கொடுப்பது" "கடன் தீ ர்ப்பது" என்கிறான். அதுவரை அவளை மடியில் கட்டிக் கொண்டிருப்பது ; 'நெருப்பை மடியில் கட்டிக் கொண்டிருப்பது' என்கிறான்.

'தாய் நாடு' என்கிறான் 'கடன் கார' நாடு என்பதாலா?

## 3

# 'சதி' ஒரு பெரும் 'சதி'

இந்திய சமுதாயத்தை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆக்கிரமித்து ஆழ் மனதில் வேரூன்றிப் போன மூட நம்பிக்கைகளில் ஒன்று 'சதி' என்கிற உடன்கட்டை ஏறுதல். உள் மனதின் சம்மதமின்றியே வெளி வேடத்திற்காகவும், வெளியார் நிர்ப்பந்தத்துக்காகவும், வீராப்புக்காகவும், வெறித்தனமாக செய்யப்படும் ஒரு செயல் இது.

சதியைப் பற்றி 'பிராமண புராணம்' கீழ்கண்டபடி சொல்லுகிறது.

" எரிகின்ற சிதையில் எண்ணையையும், விறகையும் எறிபுவர்களுக்கு 10 லட்சம் அசுவமேதயாகம் செய்த புண்ணியம் கிடைக்கும் ". இத்தகைய அபூர்வமான புண்ணியத்தை நழுவ விடுவார்களா?

மேலும் அது கணவனை இழந்த பெண்ணுக்குக் கீழ்க்கண்ட ஆசை வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்தி அவள் தானாகவே முன் வந்து உடன்கட்டையில் ஏற வெறியூட்டியது.

" கணவன் இறந்தவுடன் மனைவியும் அதே சிதையில் விழுந்து தன்னை எரித்துக் கொள்வதுதான் முறை. அப்படி தீயில் தன்னை எரித்துக் கொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் கணவன் – மனைவியாக சொர்க்கத்தில் 350,000,000 ஆண்டுகள் இருப்பார்கள் "ஆண்டுக் கணக்கை எவ்வளவு துல்லியமாகக் கணக்கிட்டுருக்கிறார்கள் இந்த மயக்கத்தில், எதிர் பார்ப்பில் தன்னை எரித்துக் கொண்ட பெண்கள் ஆயிரம் !! ஆயிரம் !!

பல ஜாதிகளையும் இந்த நோய் பீடித்திருக்குந்தாலும் பிராமணர்களை அதிகம் தாக்கியிருந்தது. 'கல்கத்தா ரிவியூ' பத்திரிக்கையின் ஆய்வு இதனை வெளிப்படுத்தியது.

"அனைத்து ஜாதிகளிலும் இந் நோய் பரவியிருந்தது. ஓராண்டு புள்ளி விவரப்படி 234 பிராமண, 35 ஷத்திரிய, மற்றும் பிற இனங்களைச் சேர்ந்த 575 பேர் உடன்கட்டை ஏறினர்.

அரசு புள்ளி விவரங்களின்படி 1815 முதல் 1828 வரை தீக்கிரையானவர்கள் எண்ணிக்கை 8164.

The Imperial Gazeteer of India கீழ்க்கண்ட தகவல்களைத் தருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்திய மதவழி பழக்க வழக்கங்களை எதிர்க்க தயங்கினர். 1817 – இல் பெங்கால் பிரசிடென்சியில் மட்டும் 707 விதவைகள் உயிருடன் கொளுத்தப்பட்டனர், கல்கத்தாவில் 422. மாபெரும் சமூக சீர்திருத்தவாதி சைத்தன்யர் பிறந்த நதியாவில் பழைமைவாதிகள் பெண்களை அதிகமாக இழிவுபடுத்தி ' சதி ' யில் பங்கு கொண்டனர் என்பது வேதனைக்குரியதாகும்.

குறும்புத்தனமாக, இந்து மத பழமையான நூல்களில் திருத்தங்களைச் செய்து ' சதி ' க்கு அடித்தளம் அமைக்கப்பட்டது என்பது வியப்பிற்குரியதாகும்.

' வேதங்களில் எங்கும் இந்துக்கள் அனைவரும் ' சதி ' யில் ஈடுபடுவது ஆண்டவனின் விருப்பம் என்று கூறப்படவில்லை ' என்றார் I.T. பிரேசர் I.C.S.

" விதவைகள் தன்னை நகைகளால் அலங்கரித்துக் கொண்டு சிதையை அடைய வேண்டும் " என்கிறது ரிக் வேதம்.

" இது புரோகிதர்களால் செய்யப்படும் மோசமான ஒரு வழக்கம் " என்றார் ஜெர்மன் அறிஞர், மாக்ஸ் முல்லர்.

" எப்போதும் புத்திசாலித்தனத்துடனும், தந்திரத்துடனும் செயல்படும் பிராமணர்கள் தங்கள் ஆதாயத்துக்காக, அதை ஒரு மதச் சடங்காக்கி ' சதி ' யில் இறந்த விதவைக்கு மறு நிமிடமே சொர்க்கம் கிடைக்கும் " என்று பிரச்சாரம் செய்தனர். கணவனுடன் இறப்பதைக் காட்டிலும் அவன் நினைவைக் கொண்டாட சிறந்த வழி ஏதும் இல்லை என்ற மட்டமான சிந்தனை உருவாக்கப்பட்டது. அதன் மூலம்தான் மரணத்துக்குப்பின் சுக வாழ்வும் கிடைக்குமென்று போதிக்கப்பட்டது " என்றார் ஹென்றி பெவரிட்ஜ் என்ற வரலாற்றாசிரியர். இந்த நாட்டில் பலதாரம் என்பது சகஜம். வங்கத்தில் குறிப்பாக, ' குவின் ' பிராமணர்களிடையே இது பிரபலம். பம்பாய் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் மற்றும் ராயல் ஏசியாடிக் சொசைட்டி (பம்பாய் கிளை) ஜான் வில்சன் அவருடைய ஆராய்ச்சியில் ' இந்திய ஜாதி ' ( 1872 இல் பதிக்கப்பட்டது) கீழ்க்கண்டபடி கூறினார். " பண்டிட் தாரனாதா தரக் வசபதி என்னிடம் பேசும் போது அவருக்கு தெரிந்த ஒருவர் 100 மனைவிகளை வைத்திருந்ததாகவும், வேறொருவர் 350 மனைவிகளை வைத்திருப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார். மேலும் 80 வயது வயோதிகர் ஒருவர் 6 மாத குழந்தையைத் திருமணம் செய்ததாகவும் கூறினார். இதன் விளைவாக ஒரு ஆண் இறந்தால் நூற்றுக்கணக்கான பெண்கள் கணவனுடன் சிதையில் இறந்தனர்."

நம்ப முடியாத – விஷயம் என்னவென்றால் 18,000 கல்கத்தாகாரர்கள் இங்கிலாந்து பிரிவி கவுன்சிலுக்கு அனுப்பிய மனுவில் காட்டு மிராண்டித்தனமான சதியைத் தடுக்கும் மசோதா வாபஸ் பெறப்பட வேண்டும் என்றனர். அதில் கல்கத்தாவின் சில முக்கிய பிரமுகர்களும் கையெழுத்திட்டிருந்தனர்.

இந்த கடிதம் நிச்சயமாக வரலாற்றாசிரியர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் பொது மக்களுக்குக் கவலையை அளிப்பதாக அமைந்தது.

சமீப காலத்தில் பெரும் பிரச்சினையாக எழுந்தது ' ரூப் கன்வர் உயரோடு கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி. அதன் விவரம் :-



படிப்பகம்

www.padippakam.com

திருமணமான ஒன்பதே மாதங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களே கூடி வாழ்ந்த பாவத்துக்காக சிதையில் உயிரோடு கொளுத்தப்பட்டாள் ரூப் கன்வர் என்ற பெண். ரூப் கன்வரின் தந்தை ஒரு பள்ளி ஆசிரியர். மிகுந்த சீதனங்களோடு புகுந்த வீடு வந்த அவளும் பள்ளி இறுதி வரை படித்தவள்தான். அவளது கணவன் M.Sc, B.Ed., படித்த ஆசிரியர். 1987 – செப்டம்பர் 4 –ல் ரூப் கன்வர் உடன்கட்டை ஏறியது உலகின் கவனத்தை ஈர்த்தது.

## ஏன் உடன் கட்டை ஏறினாள்?

இரஜபுத்திர விதவைகள் சில சந்தோசங்களைக் கூட அனுபவிக்க விடமாட்டார்கள். நல்ல உணவு, புது துணி, தங்க நகை எதுவும் தரமாட்டார்கள். வெளியே போய் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவள் இருட்டு வீட்டுக்குள் அடைந்து கிடக்க வேண்டியதுதான்.

இது தவிர குடும்பத்தில் பிற ஆண்கள் கேவலமான முறையில் பாலுணர்வு சார்ந்த தொந்தரவுகள் கொடுப்பார்கள். அதைவிட செத்துத் தொலைவது கௌரவம் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

கணவன் இறந்தவுடன் மற்ற பெண்கள் " உடன் கட்டை ஏறு " என்று யோசனை சொல்வார்கள்.

காலமெல்லாம் சித்திரவதை அனுபவிக்க வேண்டுமே என்ற விரக்தியில் அவள் தீயில் இறங்கி விடுகிறாள்.

## MASOCHISM

பெண்ணைக் கொடுமைப்படுத்தி மகிழ்வதை 'Masochism' என்பர் Masoch என்ற ஆஸ்ட்ரிய நாவலாசிரியர்களில் இந்த குரூரமான இயல்புகளை சித்தரித்துள்ளார்.

## மன்னர் சிவாஜி

சத்ரபதி சிவாஜிக்கு 7 மனைவிகள் ! சிவாஜி இறந்தவுடன் புத்தலிபாய் உடன்கட்டை ஏறினார்.

அக்காலத்தில் மன்னர்கள் ஆடு, மாடுகளைப் போல் பல மனைவிகளையும் வைத்திருந்தனர் என்று வரலாறு கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# 4
# கவிதையில்

சங்க காலத்தில் பெண்ணுரிமை பற்றிய எழுச்சி ஏற்படவில்லை. புலவர்களும், கவிஞர்களும் பெண்ணடிமைத்தனத்துக்கு ஆதாரவாகவே எழுதியுள்ளனர்.

பெண்ணுரிமை பற்றி வீரோவேசத்துடன் எழுத ஆரம்பித்தவர்கள் பாரதியும், பாரதிதாசனும் எனலாம். அவர்களுக்குப் பின்பு இப்போது பலர் எழுதி வருகிறார்கள்.

அத்தகைய கவிதைகளில் சில தேர்ந்துடுக்கப்பட்ட கவிதைகள் தொடருகின்றன.

பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக்கிறார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

ஆம்பிளைக் கூட்டம்
ஆடுற ஆட்டம்
அத்தனையும் பார்த்தோம்!
கேட்டோம்! — அதை
ஆரம்பிச்சாத் தெரியும்
திண்டாட்டம்!

அடங்கிக் கிடக்குறதும்
பணிஞ்சி நடக்குறதும்
ஆக்குறதும், காக்குறதும்
நாங்க!
உண்டாக்குறதும்
காக்குறதும் நாங்க! அதை
அடிச்சிப் பறிக்குறதும்
அடுத்துக் கெடுக்குறதும்
அட்டகாசம்
பண்ணறதும் நீங்க!
ஆணுக்குப் பெண்கள்
அடிமைகள் என்று யாரோ
எழுதி வைச்சாங்க!
அதை —

அமுக்கிப் பிடிச்சிகிட்டு
விடமாட்டேன்னு
ஆண்கள் ஒசந்து கிட்டாங்க!
பெண்கள் ஆமை போல
ஒடுங்கிப் போனாங்க!

மனைவி இறந்த பின்
வயதான தாத்தர்வும்
மறுமணம் பண்ணிக்கிட



படிப்பகம்

www.padippakam.com

உரிமையுண்டு — இளம்
மங்கையை முடிப்பதுண்டு
மண்டை வறண்டு ! தன்
கணவனை இழந்தவள்
கட்டழகியானாலும்
கடைசியில் சாக மட்டும்
உரிமையுண்டு ! இதில்
கதைகளும் கட்டி விடும்
ஊர் திரண்டு !
கற்பின் பலமென்றும்
கண்ணகி குலமென்றும்
கச்சிதமாகத் திட்டுவாங்க !
அதை

அச்சடிச்சும் காட்டுவாங்க !
சொன்ன
கருத்துக்கு மாறாக
கற்பைக் களவாட
கன்னக்கோலைத் தீட்டுவாங்க ! அவங்க
கணக்கைப் புரட்டிப் பாருங்க !"

— 1959 — இல் ' புதுமைப் பெண் ' படப் பாடல்.

பெண்கள் பர்தா போட்டு முகத்தை மறைக்கும் வழக்கம் தீது என்று சாடுகிறான் பாரதி.

" தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி — பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்,
வல்லியிடையினையும், ஓங்கி முன்னிற்கும் — இந்த
மார்பையும் மூடுவது, சாத்திரங் கண்டாய்
வல்லியிடையினையும், மார்பிரண்டையும் — துணி
மறைத்ததனால் அழகு மறைந்ததில்லை
சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை! முகச்
சோதி மறைத்துமொரு காதலிங்குண்டோ?".

பெண்கள் மலர் சூடுவதை வைத்து சொல்லாடலில் ஈடுபடுகிறான் புரட்சிக் கவிஞன்.

" மலர்க் கூடை ஒருத்தி
மண்டையில் சுமப்பாள்
மலர்க் கடை ஒருத்தி
கொண்டையில் சுமப்பாள் "

வீட்டுக்குள் பெண்களைப் பூட்டி வைப்பதை ஆவேசமுடன் தாக்குகிறான் பாரதி.

" மாட்டையடித்துத் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்து



படிப்பகம்

www.padippakam.com

வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் — அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி ".

" ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்களை பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுப்பதை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார் தேசியக் கவி

" வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கும்
பழக்கத்தை தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி.

நாணமும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்.
ஞானம், நல்லறம், வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்கள்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞான செருக்குமிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லை

— பாரதி

சித்திரத்தில் பெண்ணெழுதி
சீர்படுத்தும் மானிடரே — ஜீவனுள்ள
பெண்ணினத்தை வாழ விட மாட்டீரா?

— கண்ணதாசன்

பொது உடைமைக் கவிஞர் ப. ஜீவானந்தம் எழுதிய கவிதையில் 'சின்னத்தனமாய்ப் பெண்ணைச் சித்தரிக்கும் நூற்களை இன்றே நெருப்பிலிட வேண்டும்' என்றார்.

இதைச் செய்திருந்தால் பல புதுக் கவிதைகளும், சினிமா வசனங்களும் சாம்பலாகி இருக்கும்.

இந்த வரிசையில் பொது உடமை வர வேண்டும் ; பெண்கள் உரிமையடைய வேண்டும். வேறென்ன வேண்டும்?

மடையர் பழமை மாய வேண்டும்; அதற்குரிய
மார்க்கம் புதுமை பெற வேண்டும். வேறென்ன வேண்டும்?

நாயென்றும், பேயென்றுமே
நங்கையரைப் பழிப்போர்
வாயடங்கி வாழ வேண்டும்.
வேறென்ன வேண்டும்?



படிப்பகம்

www.padippakam.com

பாவிகள் பெண்களென்னும்
பாதகர் வாய்க் கொழுப்பை
தூள்வென்றுமிழும் திறன் வேண்டும்
வேறென்ன வேண்டும்?

சின்னத்தனமாய்ப் பெண்ணை
சித்தரிக்கும் நூற்களை
இன்றே நெருப்பிலிட வேண்டும்
வேறென்ன வேண்டும்?

பேணும் சம சந்தர்ப்பம்
பெருகும் சுதந்திரத்தால்
ஆணும், பெண்ணும் இன்புற வேண்டும்.
வேறென்ன வேண்டும் ".

— ப. ஜீவானந்தம்

# பெண் உரிமை

கணவனை பெண்ணே தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும் பெண்ணுக்கு என்றான் புரட்சிக் கவி.

" ஆண் உயர்வென்பதும்
பெண் உயர்வென்பதும்
நீனிலத் தெங்கணும் இல்லை ...

எனை அசைத்தாலும் கூடும்
அதை
யார் அசைத்தாலும் ஆடும் ...
சேயிழை மார் நெஞ்சு மீது
நாம்
சீறுபுலியைக் காணும்போது
தீயதோர் நிலைமை இங்கேது?
நம் நாட்டில் அடிமை நில்லாது
பெண்ணுக்கு பேச்சுரிமை
வேண்டாம் என்கின்றீரே
மண்ணுக்கும் கேடாய் மதித்
தீரோ பெண்ணினத்தை
பெண்களை ஊமை என்று
சொல்லுமட்டும்
ஆமை நிலைமைதான் ஆட்வ
ருக்கும் உண்டு.
மாவடு நிகர்வழிச் சின்னஞ்சிறு
மியே ... நீ
மங்கை எனும் பருவம்
கொண்டு — காதல்
வாழ்வுக்கோர் மாப்பிள்ளை
யைக் கண்டு — காட்டித்



படிப்பகம்

www.padippakam.com

'தேவை இவன்' எனவே,
தேன்! கனி! தித்திக்கும் கற்
கண்டு !!!

– பாரதிதாசன்

விலை மகளிரைக் கூட மனித நேயத்துடன் நேசித்து அவர்கள் நிலை பற்றி பாடுகிறான் நா. காமராசன்.

" நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக "

" குழந்தையின் பசியை
நாங்கள் அறிந்ததில்லை
ஏனெனில் நாங்கள்
பசியின் குழந்தைகள் ".

# 5

# வரதட்சணையும், அதன் காரணமாக கொலை வெறித் தாக்குதல்களும்

காலரா, பிளேக் நோய்களைப் போல் அதிவேகமாக பரவி சமுதாயம் முழுவதும் வியாபித்திருக்கிறது வரதட்சணை எனும் கொடி நோய்! அது ஊடுருவாத மதம் இல்லை; மதம் இல்லை; இனம் இல்லை; குலம் இல்லை; கோத்திரம் இல்லை.

ரியல் எஸ்டேட், வட்டிக்கடை, கள்ளச் சாராயம், விபச்சார விடுதி நடத்துவது போல் வரதட்சணை ஒரு லாபமுள்ள தொழில் ஆகிவிட்டது. அதனால்தான் மாட்டுத் தரகர்கள் வரதட்சணை பேரங்களுடன் அலைகிறார்கள். இவர்களில் பலர் லட்சாதிபதியும் ஆகிவிட்டார்கள்.

## கிரிமினல் பெருமை

சட்டத்தால் தடுக்கப்பட்ட ஒன்றைச் செய்துவிட்டு 'பத்து பவுன்' '20 பவுன் போட்டேன்; 'ஸ்கூட்டர் கொடுத்தேன்' ' கார் கொடுத்தேன்,' வீட்டை எழுதி வைத்தேன்'' மனைவியுடன், மனையும் கொடுத்தேன்' என்றெல்லாம் 'யார் பெரிய கிரிமினல்' என்று பட்டிமன்றம் நடத்துகிறார்கள்.

வசதி படைத்தவன் கொடுக்கிறான். வசதி இல்லாதவன் வீட்டுப் பெண்கள் கதி என்ன? 35 வயதாகியும் ஜன்னல்கம்பிகளை மட்டுமே எண்ணிக் கொண்டு எண்ணிலா ஆசைகளுக்கு அணைபோட்டு அடைத்து அடிமையாய் உணர்ச்சி அற்று உறைந்து கிடைக்கும் சகோதரிகள் எத்தனை பேர்!

ஆறு மாதத்திற்குள் டில்லியில் மட்டுமே 188 பெணகள் 'ஸ்டவ் வெடித்து' இறந்தனர். வெடிக்கின்ற ஸ்டவ்கள் எல்லாம் மருமகளை நோக்கித்தான் வெடிக்கின்றனவே தவிர மாமியாரை நோக்கி வெடித்த ஸ்டவ்கள் எத்தனை?



படிப்பகம்

www.padippakam.com

முன்னாள் மருமகளான மாமியார் இந்த ஸ்டவ் வெடிப்புகளில் பெரும் பங்கு வகிக்கிறார். தனது மகளுக்கும் இந்த நிலை ஏற்படும் என்பதை மறந்து விடுகிறாள். மேலும் பணம் கேட்டு தாய் வீட்டுக் துரத்தப்படுகிறாள். சித்தரவதை செய்யப்படுகிறாள். திடீரென்று ஒரு நாள் 'ஸ்டவ் வெடித்து' விடுகிறது. காணாமல் போய் விடுகிறால். இதுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பயணம் என்றாகி விட்டது.

## மணமகள் வியாபார பொருள்

மணமகளைப் பணத்துக்காக மணமகனே விற்கின்ற – விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்ற நண்பர்களுடன் உல்லாசமாக இருக்கச் சொல்லுகின்ற - மணமகனின் தந்தையுடன் உறவு கொள்ள வற்புறுத்துகின்ற செய்திகள் பத்திரிக்கைகளில் வந்த வண்ணம் உள்ளன.

## தாய் சொல்லைத் தட்டாதே !

தாய் ஒரு மகனை மது அருந்த சொல்லுவதில்லை ; ஆனால் அருந்துகிறான் ; சிகரெட் பிடிக்கச் சொல்லுவதில்லை ; ஆனால் பிடிக்கிறான். காதல் பண்ணச் சொல்லுவதில்லை ; ஆனால் பண்ணுகிறான். வரதட்சணை விஷயத்தில் மட்டும் தாய் சொல்லைத் தட்டுவதில்லை. முன்னாள் மருமகளான தாயும் வரதட்சணை பேரத்தில் மிகத் தீவிரமாக ஈடுபடுகிறாள். புரட்சி பெண்ணுரிமை, பற்றி பேசும் தந்தை மௌனம் சாதிக்கிறார்.

## வரதட்சணை ! மேலிடத்து விவகாரம் !

பண்டித ஜவர்கலால் நேருவின் தங்கை பண்டிட் விஜயலட்சுமி திருமணத்தின்போது 101 ஜோடி புடவை ஜாக்கெட் ரவிக்கை, செருப்பு, மற்றும் 50 ஜோடி தாவணி, முத்து, வைரம் பதித்த நகைகள், வெள்ளி சமையல் பாத்திரங்கள் ஆகியவை வரதட்சணையாகக் கொடுக்கப்பட்டன.

## வரதட்சணை – கவிஞர்கள் பார்வையில்

கவிஞர்கள் இதைப் பற்றி மிகவும் யதார்த்தமாகவே விமர்சித்து உள்ளார்கள்.

**கைதிகள்**

பெண்கள்
பருவம் வந்ததும்
சன்னல் கம்பிகளை
எண்ணும் கைதிகள் !

**சரிகை**

சரிகைக்குள்ளே இருக்கும்
சிளிசல்களை யாரறிவார்?

**சிறை**

பெண்கள் – இடும் கோலங்களில்
புள்ளிகள்
சிறைப்பட்டிருப்பதைப் போலவே
அந்தப் புள்ளி மயில்களும்
சிறைப்பட்டிருக்கின்றன



படிப்பகம்

www.padippakam.com

**கன்னித் தமிழ்**

வரதட்சணை முழுவதும்
வரவில்லை என்றோ
கன்னித் தமிழே உனக்கு
கல்யாணம் ஆகவில்லை?

**சுயம்வரம்**

சுயம் வர சுதந்திரம்
இளவரசிகளுக்கு
மட்டும்தானே !
ஊரின் அழுக்கைச்
சுமப்பதால் தானே
நதிகளும் உங்கள்
நாமம் தரித்தன !
விலங்குகள் இருப்பது
தெரியாமல் இருக்கவா
வளைகளை அணியப்
பழக்கப்பட்டீர்?

## தாலிக்குக் கூலி

தாலி கட்டவும் கூலி கேட்பது
தர்மமானதிங்கே !
சட்டம் அதையும் பார்த்துக் கொண்டு
சலாம் போடுதிங்கே.

## இந்த வில்லை முறிக்காமல்

கண்கள் காதலின்
கட்டிலென்றால்
சாதி காதலின்
சமாதியாகும் !

இந்த வில்லை முறிக்காமல்
காதல் சீதைகளுக்குக்
கல்யாணம் ஆகாது
இந்த வில்லை முறிக்க
இராமன் மார் வந்து
இரவுண்டடித்தால் போதாது !
மாமன்மாரும் கொஞ்சம்
மனசு வைக்க வேண்டும்!

— மு. மேத்தா



படிப்பகம்

www.padippakam.com

## சொர்க்கமும், சொக்கத் தங்கமும்

எங்களின்
திருமணங்கள்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றன
என சொல்லப்பட்டாலும்
நிச்சயிக்கப் படுவதென்னவோ
சொக்கத்
தங்கத்தில்தான் !

## விலைமகன்

விலைமகளைப் பற்றி
எல்லோருக்கும் தெரியும்.
விலைமகன் யாரென்பது
தெரியுமா?
அவன்தான்
வரதட்சணை வாங்கும்
மணமகன் !

## வரம் கேட்கும் வரன்

ஆலமர கண்பதியையும்
அல்லாவையும்
பரம் பிதாவையும்
பரிவோடு வணங்குகிறான் !
இவன்
வரம் கேட்கவில்லை.
இவன் பெண்ணுக்கு
வரன் கேட்கிறான்
கடவுளெல்லாம்
காதில் கிசு கிசுத்தன
இருபது சவரன்
இருந்தால் வரனைத்தேடு
இல்லையேல்
உன் பெண்ணுக்கு
குளம், குட்டையைத் தேடு !

— பெ. இரவிச்சந்திரன்

## அடி மனசு கருகுதல்லோ

அண்ணன் பொஞ்சாதி
அடுக்களையில் கொஞ்சறதும்
சின்னாத்தா மகளொருத்தி
சிணுங்கி குலவுறதும்
பார்த்தா அடிவயிறு
பத்தி எரியுதல்லோ !



படிப்பகம்

www.padippakam.com

ஆத்தா ! அடி ஆத்தா ! என்
அடி மனசு கருகுதல்லோ !
உறக்கமில்லை என்றாலும்
ஒரு கோடி கனவிருக்கு !

இறக்க வில்லை என்றாலும்
எனக்கெங்கே உசிரிருக்கு?

— வைரமுத்து

## பொன்மேனி

பொன் மேனி என்று
கவிஞர்கள்
பொய் மொழி புகன்றதால் தான்
அவை நிஜமா என்று
நெருப்புக் குளியல் நடத்தியும்,
சிகரெட்டால் சுட்டும்
சோதிக்கிறார்களோ !

## நாடகத்தில் இனிப்பு நடப்பில் கசப்பு!

நாடகத்தில், காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்.
ஊடகத்தே, வீட்டினுள்ளே, கிணற்றோரத்தே
ஊரினில் காதல் என்றால் உறுமுகிறார்.
பாடை கட்டி அதைக் கொல்ல சதி செய்கின்றார்.
பாரினில் காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே !

— பாரதி

கண்ணகி மதுரையை எரித்தது அந்தக் காலம்
கண்ணகிகளே எரிவது இந்தக் காலம் !"

## வரதட்சணைக் கொலை, புதிய யுக்திகள் !

ராஜமயில் அரசாங்க டாக்டர். 42 சவரன் நகை மற்றும் ' ஹீரோ ஹோண்டா ' வுடன் கீதாவை திருமணம் செய்தார். ராஜமயில் திருப்பத்தூரில் சொந்தமாக ஒரு மருத்துவமனையும் நடத்தி வந்தார்.

கீதாவை மேலும் வரதட்சணை கேட்டு துன்புறுத்தினார். திடீரென்று ஒரு நாள் கீதா மீது ஒரு நாகப்பாம்பு பிளாஸ்டிக் பையிலிருந்து விடப்பட்டது. கீதா தப்பி ஓடினார்.

கணவர் ராஜமயில், பாம்பாட்டி ஆறுமுகம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

சட்டம் பெயரளவில்தான் உள்ளது. வரதட்சணைக் கொலைகள் அன்றாடம் நடைபெறுகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

நடைமுறையில் நம் பெண்கள் Masochistic – ஆக இருக்கிறார்கள். அதாவது தமக்கு துன்பத்தை ஏற்படுத்திக் கொண்டு அதையே நினைத்து மகிழ்வது.

சமீபத்தில் பதினொரு வயது சிறுமி அமீனா அறுபது வயது அரேபிய ஆசாமிக்கு விலைக்கு விற்கப்பட்ட செய்தி பத்திரிக்கைகளில் பரபரப்பாக வந்தது.

ஐதராபாத்தில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் பெற்றோர், பெண்களை அரேபிய பணக்காரர்களுக்கு விலைக்கு விற்று வருகிறார்கள். இது சாதாரண அன்றாட நடைமுறை ஆகிவிட்டது.

பதினொரு வயதான சிறுமி அமீனாவின் தந்தை ஷேக் பக்ருதின். அவர் அமீனாவை ரூ.6,000/- க்கு ஓர் அரேபியருக்கு திருமணம் செய்து வைத்தார். அந்த மணமகனுக்கோ வயது 60. மணமகன் மணமகள் அமீனாவுடன் அரேபியா செல்ல விமானம் ஏறிவிட்டார். அங்கு சிறுமி அமீனாவின் முகத்தில் காணப்பட்ட மாற்றங்களை உன்னிப்பாகக் கவனித்து வந்தார் விமானப் பணிப்பெண் அம்ருதா அஹ்லுவாலியா டெல்லி விமான நிலையத்தில் மணமக்கள் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர். விசாரணை நடக்கிறது.

சிறுமி அமீனாவின் மருளும் குழந்தை விழிகள் தரும் சேதியை நாடு புரிந்து கொள்ளுமா? அமீனாவைப் போல் இன்றும் எத்தனை சிறுமிகள் போகப் பொருளாக விற்கப்படுகின்றனர். இதற்கெல்லாம் முடிவு எப்போது? எப்படி? அரபு நாடுகளுக்கும் கேரள கடலோரப் பகுதிகளுக்கும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் வணிக, கலாச்சார உறவுகள் பற்றி வரலாற்றில் படித்திருக்கிறோம்.

இதனால் கோழிக் கோட்டில் பல அமீனாக்களைப் பார்க்கிறோம். இவர்களில் பலர் அரபு நாட்டாரைத் திருமணம் செய்து கொண்டு பல குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட பின்னும் அரபு மண்ணையே பார்க்காமல் உள்ளூரிலேயே கை விடப்பட்டுள்ளனர்.

அமீனா விவகாரம் பெரிதுப்படுத்தப்பட்டவுடன் ' இதைவிட முக்கியமான பிரச்சினைகள் பல உள்ளன. அதில் கவனம் செலுத்துங்கள் " என்று அரேபிய தூதர் அறிவுரை வழங்கினார்.

மிகப் பெரிய வேடிக்கை என்ன தெரியுமா? வழக்குகள் நீதி மன்றங்களில் நிலுவையில் இருக்கும்போதே, போலி பாஸ்போர்டில் சௌத் எம்பெசி உதவியுடன் .... நாட்டை விட்டு தப்பித்து ஓடி விட்டார் ஷேக் பக்ருதீன்!

## இரண்டாவது அமீனா – பாத்திமா

அமீனாவுக்கு அடுத்தபடியாக வெளிச்சத்துக்கு வந்தது பாத்திமா கதை.

அவள் வயது 15 மட்டுமே. அவள் 50 வயதான ஆப்கன் மணமகனுக்கு ஆகஸ்ட் 1991 – இல் மணமுடிக்கப்பட்டாள். மணமகன் பெயர் ஜிலானிகான்.

பாத்திமா கல்கத்தாவைச் சேர்ந்த ஓர் ஏழைக் குடும்ப சிறுமி. கான் கணிசமாக நிதி உதவி செய்தார்.



படிப்பகம்

www.padippakam.com

பாத்திமா கானுடன் டெல்லி வந்தார். ஹுவகர் ஒட்டலில் தங்க வைக்கப்பட்டார். அந்த 15 வயது சிறுமியை கான் பல முறை கற்பழித்தார்.

காபூல் செல்ல விமானம் ஏறியபோது, சிறுமி பாத்திமா அவர் நிலையை விமானப் பணிப் பெண்ணிடம் சொன்னாள். ஜலானி கான் கைது செய்யப்பட்டு பாட்டியாலா அவுஸ் நீதிபதிக்கு முன்பாக ஆஜர் படுத்தப்பட்டார்.

" வீட்டுக்கு போகிறாயா ?" என்று பாத்திமாவிடம் கேட்டபோது அவள் மௌனம் சாதித்தாள்.

## துப்பாக்கி முனையில் மணமகன் கடத்தல்

சமீபத்தில் பத்திரிக்கையில் வந்த பரபரப்புச் செய்தி வட இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை எந்த அளவுக்கு தலை விரித்தாடுகிறது என்பதையும், மணமகன் பஞ்சம் சமுதாயத்தை எப்படிப்பட்ட கிரிமினல் நடவடிக்கைக்கு இட்டுச் செல்கிறது என்பதையும் தெளிவு படுத்துகின்றது.

பள்ளியிறுதி தேர்வு எழுதும் மாணவனை கடைசி தேர்வு அன்று ' தாதா ' கும்பல் தேர்வு அறையிலிருந்து துப்பாக்கி முனையில் அழைத்துச் சென்று நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் மணமகளுக்கு தாலி கட்டச் செய்கின்றனர்.

பீகார் மாநிலம், பெரு சராய் மாவட்டத்தில் பெண்கள் திருமணத்திற்கு குறைந்த பட்சம் ரூ.50,000/- வேண்டும். அதற்குப் பதிலாக மாப்பிள்ளையைக் கடத்தி வரும் ' தாதா ' க்களுக்கு ரூ.10,000/- மட்டும் கொடுத்து சிக்கனமாக திருமணத்தை முடித்து விடுகின்றனர்.

இந்தத் திருமண பந்தம் நீடிக்குமா? நீடிக்கும். ' சென்டிமெண்ட் ' தான் காரணம். இம் மாவட்டத்தில் பதிவாகும் வழக்குகளில் 70 சதவீத வழக்குகள் இந்த 'Gun ' முனை திருமணம் பற்றியவைதான்.

மாப்பிள்ளையின் அடையாளம், இருப்பிடம் ஆகியவற்றை ' தாதா ' விடம் கூறி விட்டால் அவர் மாணவனை கடத்திக் கொண்டு வந்து விடுவார். இதில் ஆள் மாறாட்டம் நடந்து விடுவதும் உண்டு.

இதன் காரணாக மாப்பிள்ளைகள் ' தாதா ' க்கள் பாதுகாப்புடன் பரிட்சை எழுத வருகிறார்கள்.

ஒரிசா திருமணச் சட்டம் பெரும்பாடு பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஒரிசாவில் ' திருமணச் செலவு கட்டுப்பாடு சட்டம் 1993 முதல்வரால் கொண்டு வரப்பட்ட போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்த்தனர். ஆனாலும் சட்டம் நிறைவேறியது. பெண்ணின் பெற்றோர்கள் ஆனந்தக் கூத்தாடினர். அவர்கள் இனிமேல் திருமணச் செலவிற்காக பிச்சை ஏந்தவேண்டியதில்லை ; கடன் வாங்க வேண்டியதில்லை ; திருட வேண்டியதில்லை ; சொத்தை விற்க வேண்டியதில்லை.

புதிய சட்டம் திருமணத்திற்காக அதிகம் செலவிடுபவர்களை ஜெயிலுக்கு அனுப்பி விடும். ரூ.25,000/- க்கு மேல் செலவிடுவது சட்ட



படிப்பகம்

www.padippakam.com

விரோதமாக்கப்பட்டுள்ளது. ஒரு சவரன் தங்கம், அரை டஜன் சில்க் சாரிகள் (?) ரொக்க பணம் கொஞ்சம், போக்குவரத்து, பந்தல் செலவு, 100 பேருக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படுகிறது.

இந்த சட்டத்திற்கு 'Orissa Limitation on Expenditure on Marriage Bill 1993' என்று பெயர். சட்டத்தை தாக்கல் செய்த சட்ட அமைச்சர் நரசிம்ம மிஸ்ரா, " கறுப்புப் பணம் படைத்தோர் லட்சக்கணக்கான ரூபாயை செலவிட்டு திருமண விழாக்களை ஆடம்பரமாகவும், மமதையுடனும் கொண்டாடுவதன் மூலம் ஏழை நடுத்தர மக்களுக்குப் பிரச்சினைகளை உண்டு பண்ணி விடுகின்றனர்.

இந்தப் பெரிய மனிதர்களுக்கு நிகராக திருமண வைபவங்களை நடத்த முயற்சி செய்து 80% ஏழை, நடுத்தர மக்கள் ஓட்டாண்டியாக்கி விடுகின்றனர். ரூ.25,000/- க்கு மேல் செலவு செய்து திருமணம் செய்பவரை ஆறு மாதம் வரை உள்ளே தள்ளவும், ரூ.5,000/- வரை அபராதம் விதிக்கவும் சட்டம் வகை செய்கிறது " என்றார்.

ஒரு போலீஸ் அறிக்கையின் பேரில் இதனை முதல் வகுப்பு நீதி மன்றத்துக்குக் குறைவில்லாத அந்தஸ்துள்ள நீதிபதி விசாரிக்கலாம். ரூ.25,000/- த்தில் திருமண அழைப்பிதழ், அலங்காரம், பட்டாசு, இசை விருந்து, வீடியோ, பெண் – மாப்பிள்ளைக்குள் பரிமாறப்படும் பரிசுகள், அன்பளிப்புக்கள், உறவினர்கள் அளிக்கும் பரிசுகள், தீப அலங்காரம், இரவு உணவு, காலை உணவு, திருமண உணவு ஆகியவை சம்மந்தப்பட்ட செலவுகளும் உள்ளடக்கம்.

அரியானாவில் உற்பத்திப் பெருக்கம் காரணமாக வரதட்சணை மதிப்பு ஏறிக் கொண்டே போகிறது. 1987 – 88 இல் சுமாரான பணக்கார விவசாயி 3 லட்சம் முதல் 5 லட்சம் ரூபாய் வரையும், ஒரு காரும் வரதட்சணையாக கொடுத்தார். திருமண ஆடம்பரச் செலவுகளும் ஏறி விட்டன. மேலும் சம்மந்தப்பட்ட நபரின் சமூக அந்தஸ்தைப் பறை சாற்ற திருமணம் ஒரு வாய்ப்பாகப் பயன் படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் வரதட்சணை, ஆடம்பர திருமணம், சிறுமிகள் விற்பனை இவற்றை எதிர்த்து பல பஞ்சாயத்துக்கள் தீர்மானங்களை நிறைவேற்றின். சுதந்திரத்திற்குப் பின் பல இன மக்களும், கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் கூடி சிக்கன திருமணத்தை வலியுறுத்தித் தீர்மானங்களை நிறை வேற்றினர். 1974 – இல் பழங்கால வழக்கப்படி நிச்சயதார்த்தத்துக்கு ரூ.1/- ம் ஒரு படுக்கை விரிப்பும், சில இனிப்புகளும், மண மகளுக்கு ஒரு தங்க மோதிரமும், கால் தோலா வெள்ளி, 11 சமையல் பாத்திரங்கள், மணமகனுக்கு ரூ.100/- மணமகன் தந்தைக்கு ரூ.11/- மட்டும் கொடுக்க வேண்டும் என ஜாட்ம்சவ்ஷ்தம்முடிவு செய்யப்பட்டது. ஆனால் இது அமுலுக்கு வரவில்லை.

1956 வாரிசுரிமைச் சட்டப்படி பெண்களுக்கும் சொத்தில் பங்குண்டு. அவ்வாறு சொத்துக்களை பெண்களுக்கு வழங்காமல் தக்க வைத்துக் கொள்ளும் மோசடி மனப்பாண்மையுடன் திருமணத்தின் போது அதிக அசையும் பொருட்களை வரதட்சணையாகக் கொடுத்து ஏமாற்றி விடுகின்றனர். இதனால் பெண் திருமணமாகும் வரை வீட்டில் ஒரு தற்காலிக நபராக இருக்கிறாள். என்றைக்கு இருந்தாலும் தாலி கட்டியவுடன் கணவன் வீட்டுக்குப் போக வேண்டியவள் தானே" என்று அவ்வப்போது இதன்ன ஞாபகப்படுத்துகின்றனர். வாரிசுரிமைச் சொத்தை வரதட்சணை விழுங்கி விடுவதைத் தடை செய்ய தனிச் சட்டம் தேவை.



படிப்பகம்

www.padippakam.com

1961 – இல் வரதட்சணைத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதில் பல குறைபாடுகள் உள்ளன. 'வரதட்சணை' என்ற பதத்துக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கம் மேலோட்டமாக உள்ளது.

'திருமணத்தை முன்னிட்டு' ஒருவர் மற்றொருவருக்கு வழங்கும் பொருள் அல்லது 'மதிப்புள்ள ஆவணம்' என்று கூறப்பட்டு உள்ளது. ஒரு ஆண் இன்னின்ன பொருட்களைத் தந்தால்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று நிபந்தனை விதித்ததை நிரூபித்தால்தான் இந்த சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலும். வரதட்சணை கொடுத்தவர், வாங்கியவர் ஆகிய இரு தரப்பினருமே தண்டனைக்குரியவர்கள். ஆகையால் இரு தரப்பினருமே காவல் நிலையத்தில் புகார் செய்ய அஞ்சுகின்றனர். ஆகையால் இந்தச் சட்டம் உயிரிழந்து கிடக்கிறது.

அரியானா அரசு சட்டம் 38 / 1976 மூலம் 1961 ஆம் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தது. நிச்சயதார்த்தம், திருமணம் ஆகியவற்றிற்கான செலவு ரூ.5.,000/ 'தை மிஞ்சக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தது. மேலும், திருமணத்துக்கு முன்போ, பின்போ பெறப்பட்ட பரிசுப் பொருட்களையோ, பணத்தையோ விளம்பரப்படுத்தி செல்வாக்கை பறைசாற்றுவதைத் தடை செய்தது. திருமணக் கூட்டம் 25 பேருக்கு மிஞ்சக் கூடாது. பேண்டு வாத்தியக் கூட்டம் 11 பேருக்கு மேல் போகக் கூடாது. ஆனால் இவையும் அமுல்படுத்தப்படவில்லை.

வரதட்சணைத் தடைச் சட்டம் 1961 மரணப்படுக்கையில் 'கோமா' நிலையில் இருந்ததை இந்திய அரசு 1982 – இல் அதாவது 21 ஆண்டுகள் கழித்து எப்படியோ கண்டு பிடித்து விட்டது. 1961 சட்டத்துக்கு சில திருத்தங்கள் செய்யப்பட்டு 2–1–1985 முதல் செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

இதில் ஏற்கெனவே இருந்த 'திருமணத்தை முன்னிட்டு' என்ற வாசகம் 'திருமணம் சம்மந்தமாக' என திருத்தப்பட்டது. கொடுத்தவரும், வாங்கியவருக்கும் சமமமான தண்டனை என்பது மாற்றப்படவில்லை. ஆனால் ஆறு மாத சிறைத் தண்டனை என்பது இரண்டாண்டு சிறைத் தண்டனையாகவும், ரூ.10,000/ வரை அபராதம் என்றும் திருத்தப்பட்டது.

ஆனாஸ் அதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

தெய்வங்களுக்கு பெண் குழந்தைகளைப் பலியிட்டால் செல்வமும், செல்வாக்கும், அதிர்ஷ்டமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கோயில்களில் பெண் குழந்தைகள் பலி கொடுக்கப்பட்டன. இதந் பலிக்காக பெண் குழந்தைகள் ஆடு, மாடுகளைப் போல் விற்கப்பட்டிருக்கின்றன.

ஹூக்ளி நதி ஆரம்பத்தில் சாகர் எனும் தீவில் பெண் குழந்தைகள் தெய்வத்தின் பெயரால் பலியிடப்படுவதை அறிந்த வெல்லெஸ்லி பிரபு அதைத் தடுக்க ஓர் ஆணையை பிறப்பித்திருந்தார்.

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக் காலத்தில் ஆறு கோடி இந்தியர்கள் – மக்கள் தொகையில் கால் பகுதியினர் – ஆங்கில ஆட்சியாளர்களின் செலவுக்காக மட்டுமே உழைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் காம வெறியைத் தணிக்க லட்சக் கணக்கான பெண்கள் சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமாகவும் இருந்து வந்தனர்.

நான்காவது முகலாய சக்ரவர்த்தி ஜஹாங்கீர் கி.பி. 1605 முதல் 1627 வரை நாட்டை ஆண்டனர். அவருடைய அந்தப்புறத்தில் 900 மனைவிகளும் 5000 அழகிய பெண்களும் இருந்தனர். அத்துடன் 12,000



படிப்பகம்

www.padippakam.com

யானைகளும் 10,000 எருதுகளும் 2000 ஒட்டகங்களும், 4000 நாய்களும் 10,000 அழகிய புறாக்களும் அவரால் வளர்க்கப்பட்டன.

விஜய நகரத்தை ஆண்ட இரண்டாவது அரிகனுக்கு 12,000 மனைவிகள் இருந்தனர்.

விஜய நகரத்தை ஆண்ட இரண்டாவது அரிகரனுக்கு 12,000 மனைவிகள் இருந்தனர்.

அண்டை நாட்டு அழகி மீது ஆசைப்பட்டு பிரோஷா துக்ளக் மீது படையெடுத்து, தோற்கடிக்கப்பட்டு இறந்தான். 12,000 மனைவிகள் அவனுடன் உடன்கட்டை ஏறினார்கள்.

கி.பி. 11 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சம்புவராயர்கள் ஆட்சியில் வரதட்சணை தேச விரோத குற்றம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

'தேசிய பெண்கள் கமிஷன்' அரசுக்கு கீழ்க்கண்ட பரிந்துரைகளை அளித்துள்ளது.

'வரதட்சணை வாங்குபவர்களுக்கு 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க வேண்டும். ரூ.15,000 /- அல்லது வரதட்சணையாக வாங்கிய தொகை — இதில் எது அதிகமோ அது அபராதமாக வசூலிக்கப்பட வேண்டும். வரதட்சணை கேட்டவர், வாங்கியவருடன், வரதட்சணைப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட வேண்டும்.

திருமணச் செலவு லட்சக் கணக்கில் அதிகரித்து வருவதும், பணக்காரர்களைப் பார்த்து நடுத்தர, ஏழை மக்களும் கூட ஆடம்பரத் திரமணங்களை நடத்த 'இருப்பதை எல்லாம் விற்று' ஏற்பாடு செய்கின்றனர்.

இதை அதிகாரத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் — பெரிய மனிதர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களே எமனாகப் அமைந்து விடுகின்றனர்.

சமீபத்தில் ஆந்திர மாநில பாராளுமன்ற உறுப்பினரின் மகன் திருமணம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு.

18 மத்திய அமைச்சர்கள், 80 எம்.பிக்கள், 400 M.L.A க்கள், இந்தியாவின் மிகப் பெரிய தியாகிகள், பெரிய மனிதர்கள் விஜய. மல்லைய, சாரா்ய உடையார், ஸ்ரீதேவி, விஜய் சாந்தி, மத்திய, மாநில I.A.S. அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். ஒரு சாப்பாட்டின் விலை ரூ.60/. மொத்த சாப்பாட்டுச் செலவு மட்டும் 60 லட்ச ரூபாய்ய வாழ்க காந்தியம் ! வாழ்க எலிமை ! வாழ்க கஞ்சிக்கு லாட்டரிஅடிக்கும் அபலைப் பெண்கள் !

பீகார் மாநிலத்தில் மாப்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் வரதட்சணையைப் பட்டியலிட்டுள்ளது. Freedom .... இதல்

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.எஸ் அதிகாரி | — | 12 லட்ச ரூபாய் |
| ஐ.சி.எஸ் அதிகாரி | — | 10 லட்ச ரூபாய் |
| இன்ஜினியர் | — | 6 லட்ச ரூபாய் |
| வேலையில்லா இன்ஜினியர் | — | 3 லட்சம் |
| டாக்டர் | — | 6 — 7 லட்சம் |
| வேலையில்லா டாக்டர் | — | 3 லட்சம் |
| கிளார்க் | — | 2 லட்சம் |
| பள்ளி ஆசிரியர் | — | 1.5 லட்சம் |



படிப்பகம்

www.padippakam.com

6

## பால்ய விவாகமும், ஒரு வயதில் விதவைக் கோலமும்

குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் வட இந்தியாவில் பரவலாகவும், தென்னிந்தியாவில் அங்கும் இங்குமாகவும் நடந்து கொண்டிருக்கின்றன. இத் திருமணங்களுக்கு அமைச்சர்களே தலைமை தாங்கி நடத்துவதால் சட்டம் கைக் கட்டி வேடிக்கை பார்க்காமல் என்ன செய்ய முடியும்?

உதாரணத்துக்குச் சில சம்பவங்களைப் பார்ப்போம். அரசு செலவில் முதலமைச்சர் அர்ஜுன் சிங் தலைமையில் மத்தியப் பிரதேசத்தில் நடந்த் கும்பல் திருமணங்களில் சட்டம் காற்றில் பறக்க விடப் பட்டது. துர்க் மாவட்டத்தில் 174 ஆதி திராவிடர்கள் திருமணங்கள் நடை பெற்றன. அவற்றுள் 87 ஜோடிகள் சிறுவர், சிறுமியர்.

திருமண வயது சட்டப்படி ஆணுக்கு 21, பெண்ணுக்கு 18.

விதி ஷா மாவட்டம் வார்தாவில் 111 ஜோடிகளுக்குத் திருமணம்

நடந்தது. 55 மனைவிகளின் வயது 14 – க்கு கீழ். ஒருவர் வயது 9 மட்டும். 48 பேர் 10 முதல் 12 வயது. 8 பேர் வயது 14. மாப்பிள்ளைகளின் வயது 10 – க்குக் கீழ். 37 பேர் வயது 10 முதல் 13 வரை. 58 பேர் 14 முதல் 15 வரை. 9 பேர் 16 முதல் 17 வரை. 2 பேர் வயது 18.

பாராளுமன்ற உறுப்பின்ர்களும் இத் திருமணங்களில் கலந்து கொள்கின்றனர்.

* The Hindu 26-5-80

இதன் விளைவாக 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 10 முதல் 14 வயதுக்குள் உள்ள விதவைகள் எண்ணிக்கை 12,000. இது சம்மந்தமான பால்ய விவாகம் சட்டங்களை பார்ப்போம்.

திருமண வயது சம்மந்தமான முதல் சட்டம் Native Marriage ages Act of 1972 ஆகும்..

இது ஆணின் திருமண வயதை 18 என்றும் பெண்ணின் திருமண வயதை 14 என்றும் நிர்ணயித்தது. ஆனால் இந்தச் சட்டம் ' இந்து அல்லது கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் மதத்தைச் சார்ந்திராதவர்களுக்கு மட்டுமே பொருந்தும் ' என்றது.

பெராஞ்சி மெர்வாஞ்சி மலபாரி என்பவர் முயற்சியில் 1891 – இல் Age of consent Act கொண்டு வரப்பட்டது. இது 12 வயதுக்குட்பட்ட பெண்கள் திருமணம் செய்வதைத் தடை செய்தது. இது பெரும் எதிர்ப்பைக் கிளப்பியது. திலகர் கூட எதிர்த்தார். 1929 – இல் The child marriage Restraint Act (CMRA) கொண்டு வரப்பட்டது. இது சாரதா சட்டம் என்றும் அழைக்கப்பட்டது. ஏனெனில் இந்தச் சட்டம் கொண்டு வர காரணமாக இருந்தவர் அர்பிலால் சாரதா என்பவராகும். ஆனால் ஆங்கிலேய அரசு அதை அமுல் படுத்துவதில் அக்கறை காட்டவில்லை.

தற்போது 'எல்லா மதத்தினருக்கும் பொருந்தும் வகையில் இது அமுலில் உள்ளது. இத் திருமணத்தில் சம்மந்தப்பட்ட பூசாரி, பெற்றோர், பாதுகாவலர், தரகர் மற்றுமுள்ளோர் மீது நடவடிக்கை எடுக்க இச் சட்டம் வகை செய்கிறது. ஆனால் சிறைத் தண்டனை மட்டுமே வழங்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த சட்டம் பெண்களை தண்டிக்க வகை செய்யவில்லை. இச் சட்டத்தின்படி child என்பது ஆணாக இருந்தால் 21 வயதுக்கு கீ ழ் இருக்க வேண்டும். பெண் என்றால் 18 வயதுக்கு கீழ் இருக்க வேண்டும். இது போன்ற திருமணங்களைச் செய்தவர்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு இரகசியமான இடங்களில் கூடி தாலி கட்டி விடுகின்றனர். 15 வயதுக்குள் திருமணம் செய்யப் போகும் பெண் நீதி மன்றத்தின் உதவியை நாடலாம். ஆனால் அவர் அவளுடைய பெற்றோரின் பாதுகாப்பில் — நிர்பந்தத்தில் — மிரட்டலில் மண மகளாக்கப்படுவதால் அவள் நீதி மன்றத்தின் படிகளை மிதிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது.. Dessolution of Muslim Marriage Act - இன் படி தனக்கு 15 வயது ஆகுமுன் திருமணம் செய்து வைக்கப்பட்டதாக சம்மந்தப்பட்ட பெண் நீதி மன்றத்தை நாடினால் அத் திருமணம் செல்லாது என அறிவிக்கப்படும்.

The Indian Christain Marriage Act 1872 இன்படி பெண்ணுக்கு 18 வயதுக்கு மேலும், ஆணுக்கு 20 வயதுக்கு மேலும் ஆகியிருக்க வேண்டும்.

18 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை பெற்றோர் அல்லது பாதுகாவலர் அனுமதியின்றித் திருமணம் செய்வது இந்தியன் பீனல் கோட் — இன் படி Kidnapping பிரிவின் துணையு டன் தங்கள் விருப்பத்துக்கு மாறாக 18 வயதுக்குள் காதல் திருமணம் செய்து கொள்ளும் மகள் மற்றும் அவள் கணவனை காவல் துறையினரை வைத்து பெற்றோர் மிரட்டுகின்றனர். மணமகளுக்கு 17 வயதாகி இருந்தாலும் குற்றமாகும்.

தற்போது பல்வேறு மதச் சட்டங்கல் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் திருமணம் சம்மந்தமாக கடுமையாக இல்லை. கடுமையாக அமுல்படுத்தப்படவும் இல்லை.

இந்தச் சட்டங்களைக் கடுமையாக்குவது பற்றி சட்டக் கமிஷன் பரிசீலித்தது. கீழ்க்கண்ட பிரச்சனைகள் காரணமாக அது பின் வாங்கியது.

1. திருமணம் இரகசியமாக நடந்து முடிந்து விடுவதால் திருமணத்தை நிறுத்த முடியாது.
2. திருமணம் நடந்த பின்பு நடவடிக்கை எடுத்தால் மணமுறிவு ஏற்படும்.
3. நீ தி மன்ற தலையீ ட்டுக்குள் பிறந்து விட்ட குழந்தைக்கு illegitimate child அல்லது தவறான நடத்தையு டைய பெண்ணுக்குப் பிறந்த குழந்தை என்ற பெயர் ஏற்பட்டு விடும்.
4. அத்தகைய பெண்கள் ஜீவனாம்சம் கேட்உ போராட முடியாது.
5. குழந்தை தந்தையின் வாரிசு ஆகாது.

ஆகையால் ஆணாதிக்க பழமைவாத சமூகத்தில் ஆழமாக ஊறிப்போன பழக்க வழங்கங்களையும், நடைமுறைகளையும் சட்டத்தின் துணையால் மட்டும் மாற்ற இயலாது. சமூக — பொருளாதார மாற்றங்கள் மூலமும் இடை விடாத பிரச்சாரத்தின் மூலமும்தான் பால்ய விவாகத்தைத் தடுக்க முடியும் என்று சட்டக் கமிஷன்கருத்து தெரிவித்தது.

## விதவைக் கோலத்தில் !

இந்தியாவில் விதவைகள் கேவலப்படுத்தப் படுகின்றனர்; புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்களை சமூகம் ஏளமாகப் பார்க்கின்றது. இள வயதிலேயே விதவையாகி விட்டாலும் அவள் மறுமணம் செய்யக்



படிப்பகம்

www.padippakam.com

கூடாது என்ற ஜாதிக்கட்டுப்பாடுகள் உள்ளன. விதவைகள் எதிரில் வருவது அமங்கலம் என்ற நம்பிக்கை ஆழமாக அடிமனத்தில் பதிந்துள்ளது. படித்தவர்கள், விஷயம் தெரிந்தவர்கள்கூட வீட்டை விட்டுப் புறப்படும்போது எதிரில் விதவைகள் தென்படுகிறார்களா என்பதைக் கண்டறிந்த பின்னரே தெருவில் காலடி எடுத்து வைக்கின்றனர். திருமணம் போன்ற இன்ப நிகழ்ச்சிகளுக்கு விதவைகள் வருவதை விரும்புவதில்லை.

பெண் திருமணமானவள் என்பதைத் தெரிந்து கொள்ள தாலி, மெட்டி அணிவிக்கப்படுகிறது. ஆண் திருமணமானவன் என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? அவன் மட்டும் திருமணத்துக்குப் பின்பும் 'சைட்' அடிப்பது, சின்ன வீடு, இரண்டாம் கல்யாணம் என்று சுற்ற மதமும் ஜாதியும் எப்படி சம்மதிக்கிறது?

கணவன் இறந்தால் மனைவி நடை பிணமாக்கப்பட வேண்டும், ஆனால் கணவன் மட்டும் உடனடியாக வேறு திருமணம் செய்து கொள்ளலாம். பால்ய விவாகம் நடை முறையில் உள்ள இந் நாட்டில் குழந்தை விதவைகள் இருப்பதில் ஆச்சரியமில்லையே!

ஒரு வயது கூட நிரம்பாத 1,515 விதவைகள்! என்ன அக்கிரமம்! இவர்கள் பருவமெய்தும் நாள் துக்க தினம்! பருவமெய்தவுடன் இவர்கள் கட்டும் முதல் புடவை விதவைகள் கட்டும் வெள்ளைப் புடவை! ஆறு மாதத்தில் விதவையாகி விட்ட இந்த தாய்ப்பால் அருந்தும் குழந்தை எதிரில் வந்தாலும் அமங்கலம்! அவள் மறுமணம் செய்யக் கூடாது. பொட்டு வைக்கக் கூடாது; பூ வைக்கக் கூடாது.

கணவனை இழந்தவள் எதிரில் வந்தால் அமங்கலம்! மனைவியை இழந்தவன் எதிரில் வந்தால் அமங்கலம் இல்லையா? ஏன் இந்த பாரபட்சம்?

தென்கோடி தமிழகத்தில் விதவையின் நெற்றியில் பொட்டிட முடியாதபடி விரல்கள் முறிக்கப்பட்டன. மலர் சூட முடியாதபடி தலை மொட்டையடிக்கப்படுகிறது. கட்டாந்தரையில் படுக்க வைக்கப்பட்டு உடல் மரக்க வைக்கப்படுகிறது. உப்பில்லா உணவு கொடுக்கப்படுகிறது. உணர்வு மழுங்க அடிக்கப்படுகிறது.

'அமங்கலம்' என்பதை அமுல்படுத்துவதில் சர்வ ஜாக்கிரதையாக இருப்பவர்கள் பெண்கள்தான் என்பது துரதிஷ்டமானது. சகோதரிகளே! எச்சரிக்கை! எந்த நிமிடத்திலும் ஒரு 'விபத்து' காரணமாக விதவைப்பட்டம் எந்த பெண்ணுக்கும் வரலாம். இந் நிலையில் அடுத்த பெண்ணை வாழா வெட்டி, முண்டச்சி போன்ற சொற்களால் அர்ச்சிக்கலாமா?

விதவைகள் நிலையைக் கவிஞர்கள் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் படம் பிடித்துக் காட்டினார்கள்.

சகல உணர்வுகளும், அழகும் படைத்த இனிய பலாக்கனிதான் அவள் என்பதையும், அவளை ஒதுக்கி வைக்கக் கூடாது என்பதையும்

" கோரிக்கையற்று கிடக்குதய்யா
வேரில் பழுத்த பலா "

— என்று கூறி அவர்களை மறுமணம் செய்து கொள்ள அறைகூவல் விடுத்தான் புரட்சிக் கவி பாரதிதாசன்.

இதைப் பார்த்தவிட்டு 'நல்லாத்தான் சொன்னான் புரட்சிக் கவி' என்று ஏற்கெனவே திருமணமாகி மனைவியுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கும் அண்ணன்களுக்கு விதவைப் பெண்களின் மீது பாசம் வந்து விடக் கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

புதிதாக திருமணம் செய்து கொள்ளும் இளைஞர்களும், மனைவியை இழந்த அண்ணன்களும் விதவை மறுமணம் செய்து கொள்ள முன்வர வேண்டும்.

அவளுடைய உணர்வுகளை அடக்கிக் கொள்ளச் சொல்லுவது அநியாயம்! அவளும் சுகம் அனுபவிக்க வேண்டும். அதைத் தடுத்தால் அந்தத் தடை எந்த மூலை என்று கேட்டான் அவன்.

" துணை இழந்த பெண்கட்கு காதல் பொய்யோ?
சுகம் வேண்டாதிருப்பதுண்டோ?" — அவர்கள்
உள்ளம் அணையா காதலினை
அணைக்கச் சொன்னீர்
அணை கடந்தால் உங்கள் தடை எந்த மூலை?"

சாத்திரமும், தர்மமும் பெண்ணுக்குப் பகையானதை கவிஞர் வைரமுத்து கூறுகிறார்.

பூவொடு மஞ்சளும்
குங்குமம் யாவும்
மங்கையின் சுமையாச்சு
சாஸ்திரம் தர்மங்கள்
பாவையின் பகையாச்சு

அவளுடைய கழுத்திலிருந்து
மங்கள நாணை எளிதில்
கழட்டி விடுகிறார்கள்
ஆனால் பருவத்து ஆசைகள்?

" இவர்களின் கழுத்திலிருந்து
மங்கல நாண்
கழற்றப்படும்போது
பருவ ஆசைகளுக்கும்
சேர்த்தே அல்லவா
சம்பிரதாய விலங்குகள்
பூட்டப்படுகின்றன "

" மனைவியை இழந்த வயதான
தாத்தா கூட மறுமணம்
செய்து கொள்ள உரிமையுண்டு ; ஆனால் கணவனை
இழந்த இளம் கட்டழகி மட்டும்
சாக மட்டுமே உரிமையுண்டு "

என்று வேதனைப்படுகிறார் பட்டுக்கோட்டையார்.

' மனைவி இறந்தபின் வயதான தாத்தாவும்
மறுமணம் பண்ணிக்கிட உரியுண்டு — இளம்
மங்கையே முடிப்பதுண்டு — மங்கை தன்
கணவனை இழந்தவள் கட்டழகியானாலும்
கடைசியில் சாக மட்டும் உரிமையுண்டு "

— இந்த நவநாகரிக சமுதாயம் சிந்திக்குமா?



படிப்பகம்

www.padippakam.com

# 7
# பிள்ளைப் பேறும், அவப் பேரும், சிசு கொலையும்

மக்களைப் பெற்று மனித குலத்தை வாழையடி வாழையாக பொறுப்பை இயற்கை பெண்ணிடம் ஒப்படைத்துள்ளது.

பாலியல் பலாத்காரத்தால் அவள் கருவுற நேர்கிறது. கருப்பைக்குச் சொந்தமானவள் அவள் ! ஆனால் கறுவுறுதல் அவள் கட்டுப்பாட்டில் இல்லை. பலாத்கார கற்பழிப்பால் கறுவுறுகிறாள். ஆசை வார்த்தைகளால் ஏமாற்றப்பட்டு கருவுறுகிறாள் ; விரும்பாத போது நிர்ப்பந்திக்கப்படுகிறாள். காதலன் தாலி கட்டினால் கருவைச் சுமக்கிறாள் ; மறுத்தால் கலைக்கிறாள். அந்தக் கரு ஆறு மாதம் ஆன பின்பும் அவன் தாலி கட்ட மறுத்ததால் கருக் கலைப்பில் சாகிறாள் ; அல்லது தூக்குக் கயிற்றில் — கிணற்றில் — மண்எண்ணையில் — தூக்க மாத்திரையில் — அரளிக் கொட்டையில் — அதி நவீன சயனைட் —

தற்காலிக மற்றும் நிரந்தர கருத்தடைகளுக்கு பெண்ணே இலக்காகிறாள். கருத்தடை என்பது பெண்ணின் ஏகபோக பொறுப்பாகி விட்டது.

கறுவுறுதல், குழந்தை பெறுதல், வளர்த்தல் மற்றவர்களின் உதவியைச் சார்ந்தே செயல்படுகிறாள். இதனால் ஆணுக்கு அடிமையாகிறாள்.

' தாய்மை எனும் தளையிலிருந்து பெண் விடுபட வேண்டுமாயின் பிள்ளை பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை ' என்பார் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. இனப் பெருக்க செயல் காரணமாக பெண் வலிமையற்றவளாகிறாள். மாதாந்தரம், பிள்ளைப் பேறு காரணமாக அவள் பலவீனமடைகிறாள்.

பணம் மனித நாகரிகத்தில் நுழைந்த போது உழைப்பைப் பணமாக்கிய ஆண் கை ஓங்கியது. வீட்டு வேலை, பிள்ளைப் பேறு மட்டும் செய்த பெண், பின்னுக்குத் தள்ளப்பட்டாள். திரை கடல் ஓடியும் திரவியம் தேடிய ஆண் உயர்வடைந்தான். " வினையே ஆடவர்க்கு உயிர் ' என்றும், 'மனையுறை மகளிர்க்கு ஆடவரே உயிர்' என்றும் விதி செய்யப்பட்டது. அவள் உண்டி சுருக்கி உடலைக் குறுக்கினாள். ' விந்துவே விதை ' என ஆண் போற்றப்பட்டான். அவள் வெறுமனே ' பயிர் வளரும் பாத்திரமானாள் '.' அமினோசென் டெசிஸ் ' என்னும் அறிவியல் ஆய்வு கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டு பிடிக்க உதவுகிறது. இந்த விஞ்ஞான வளர்ச்சியின் விளைவு கருவிலிருக்கும் பெண் குழந்தையைக் கொன்று விடவும் உதவுகிறது. இதனை பெண்கள் இயக்கங்கள் எதிர்த்ததின் விளைவாக மராட்டியத்தில் கருவுற்று இருக்கும் பெண்களை சோதனை செய்வதைத் தடை செய்யும் சட்டம் 1988 — இல் கொண்டு வரப்பட்டது. 1988 — இல் அம் மாநிலத்தில் நடைபெற்ற கருச் சிதைவுகள் எண்ணிக்கை 40,000. இவைகள் பெண் சிசுக்கள்.

வரதட்சணை பயத்தின் விளைவு பெண் சிசு கொலை. பெண் குழந்தைகளையே பெற்றெடுக்கும் மனைவியை அம்மா, அப்பா துணையுடன் வீட்டை விட்டே துரத்தி விடுகிறான். ' கல்லானாலும் கணவன்



படிப்பகம்

www.padippakam.com

' ' புல்லானாலும் புருஷன் ' என்றுதான் பழமொழி ஏற்பட்டதே தவிர, ' பெண் ஆனாலும் பொன், மண் ஆனாலும் மனைவி ' என்று ஏற்படவில்லை. காரணம், புலவர்களும், புரவலர்களும், கவிஞர்களும் ஆண்களே !1870 – லேயே ஆங்கிலேய அரசு பெண் சிசு கொலைத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

பள்ளியில் சேர்ந்தோரின் கணக்கிலும் பெண் குழந்தை ஆணை விடக் குறைவாகவே உள்ளது. ஆண்கள் ஜனத்தொகையில் 99.4 பள்ளியில் சேர்க்கப்படுகையில், பெண்கள் 66.9 சதவிகிதம்தான் முதல் 5 வகுப்புக்களில் சேர்க்கப்படுகிறார்கள்.

## பெண் சிசுக் கொலை ;-

ஐந்தாவது குழந்தைக்குத் தாயாராகப் போகிறாள் அந்த வீட்டுப் பெண். வீட்டின் வாசலில் எருக்கஞ்செடி நட்டு வைத்து விட்டுப் போகிறார்கள் அந்த ஊர்ப் பெரிசுகள். செடி வளர்கிறது. குழந்தையும் பிறக்கிறது. பெண் குழந்தை? தாயே தன் குழந்தையைக் கொன்று புதைத்து விடுகிறாள். மறுநாள் வாசலில் இருந்த எருக்கஞ்செடி அகற்றப்படுகிறது. செடி மறைந்திருப்பதை பார்த்து பிறந்தது பெண் குழந்தைதான் என்றும் அது கொல்லப்பட்டு விட்டது என்றும் ஊர் மக்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

பெண் குழந்தைகளைக் கொல்லுவதற்கு ஒரு காரணத்தை முக்கியமாகச் சொல்லுகின்றார்கள். " பெண் குழந்தை பிறந்தால் வரதட்சணையாக விளை நிலத்தைக் கொடுக்க வேண்டும். நம் பரம்பரை நிலம் நம்மை விட்டுப் போய்விடும் " என்கிறார்கள்;
" கஷ்டப்பட்டு வளர்த்தாலும் நாளைக்கு இன்னொருவன் வீட்டுக்குப் போகிறவள்தானே ' என்கின்றனர் சிலர். தொட்டிலில் போடுவதைப் பற்றி சிலர், " ஒண்ணு ........ நாமளே வளர்க்கணும் ; முடியலேன்னா நம்மளே கொன்னுடணும். தொட்டிலில்ல போட்டுட்டு ' எங்க இருக்குதோ, எப்படி இருயிருக்குதோ ' ன்னு ஏன் ஆயுள் பூரா கவலைப் படணும் ?" என்று கேட்கிறார்கள்.

படித்த பட்டதாரிப் பெற்றோர்கள் கூட பெண் குழந்தைகளைக் கொன்று விடுகிறார்கள்.

" எனக்கு வாய்த்ததைப்போல் என் மகளுக்கும் புருஷன் வாய்த்து நான் என் புருஷனிடம் அடி, உதை வாங்குவது போல அவளும் அடி, உதை வாங்க வேண்டாமே ' என்றுதான் எனக்குப் பிறந்த மூன்று பெண் குழந்தைகளையும் கொன்றேன் " என்றாள் ஒரு பெண்.

குழந்தைகளைக் கொல்ல பல யுக்திகளைக் கையாள்கிறார்கள்.

பாலில் நெல்லைக் கலந்து குழந்தைக்குக் கொடுக்கிறார்கள். நெல் தொண்டையில் சிக்கி, மூச்சுத் திணறி குழந்தை இறந்து விடும்.

ஈரத் துணியில் குழந்தையைச் சுற்றி கண் காணாத இடத்தில் புதைத்து விடுவது ஒரு முறை.

பெண் குழந்தைகள் ஏன் கொல்லப்படுகின்றன. அதற்கு

1) அறியாமை
2) பெண் அடிமைத்தனம்
3) பணச் செலவு
4) வரதட்சணை



படிப்பகம்

www.padippakam.com

5) வறுமை ஆகியவை காரணம்

பெண் வளர வளர அவளுக்கு ஆகும் செலவு, புஷ்பவதி ஆகும் போது சடங்குத் செலவு, கல்யாணச் செலவு, கல்யாணத்துக்குப் பிறகு அப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவனின் வீட்டுச் செலவு, அவர்கள் வீட்டு சுப, அசுப நிகழ்ச்சிகளுக்குப் பெண் வீட்டார் செய்கின்ற செலவு, இவை அனைத்தையும் பைசல் செய்ய ஒரே வழி! பெண் குழந்தைகளைப் பைசல் செய்து விடுவது ! இது சரியா?

உசிலம்பட்டி சிசுக் கொலை சற்று ஆழமாகப் பரிசீலிக்கும் விபரங்களைக் கொண்டதாக இருக்கின்றது. உசிலம்பட்டிப் பகுதியின் பெரும்பான்மைச் சாதி மக்களிடத்தில், விவாகரத்து மிகச் சுலபமாக, சாதாரணமாக இருக்கிறது. பெரும்பான்மை கேசுகளில் பெண்ணே மண, விலக்கு கோருபவளாக இருக்கிறாள். பிடிக்காத கணவனை விட்டு விலக மறுமணம் செய்து கொள்வது அங்கீகரிக்கப்பட்ட வழக்கம். இது ஒரு நாகரிகமான சமூக நிகழ்வு என்றே கொள்ள வேண்டும். இந்த அளவு சுதந்திரம் அனுபவிக்கும் பெண் குழந்தைகளை மட்டும் கொல்வது ஏன்?

தனக்கு ஏற்பட்ட கதி தன் மகளுக்கும் ஏற்பட வேண்டாம் என்ற கரிசனைதான் போலும்.

பெண் சிசு கொலை போன்ற காரணங்களால் பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1951 – இல் 1000 ஆணுக்கு 1007 பெண்கள் இருந்தனர்.

இன்று 1000 ஆணுக்கு 972 பெண் ஆகக் குறைந்து விட்டது.

## அரசு தொட்டில் திட்டம்

எல்லா நல்ல திட்டங்களுக்கும் இடைஞ்சல்களும், குழப்பங்களும், அதைத் தோல்வியடையச் செய்யும் முயற்சியும் உண்டு.

சேலத்தில் பிறந்த குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுக்க அரசு தொட்டில் திட்டம் கொண்டு வரப்பட்டது.

அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் 11 தொட்டில் குழந்தைகள் இறந்து விட்டன.

இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின் இரண்டு வாரம் முதல் ஒரு மாத வயதுடைய குழந்தைகள் தொட்டிலில் போடப்பட்டன. அவ்வாறு வந்த 51 குழந்தைகளில் 39 ஆரோக்கியமான குழந்தைகள் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலுள்ள குழந்தைகள் நல காப்பகங்களுக்கு அனுப்பப்பட்டன. குமாரமங்கலம் மருத்துவ மனையில் முதல் குழந்தை மார்ச் 23 – இல் இறந்தது. தொடர்ந்து 10 குழந்தைகள் இறந்தன. ஒரு தாய் இதற்குப் பயந்து குழந்தையை எடுத்துச் சென்று விட்டாள். இறந்த 11 குழந்தைகளுள் 9 சேலம், ஒன்று அரக்கோணம், ஒன்று பெரம்பலூர்.

இது சம்மந்தமாக விசாரித்தபோது பல குழந்தைகள் எடை குறைவு, உடல் ஊனம், மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# 8

# கற்பழிப்பு : ஆணுக்கு வீர விளையாட்டு பெண்ணுக்கு?

## கற்பழிப்பு ஒரு வீர விளையாட்டு

"உன்னை ஒருவன் தவறான முறையில் நெருங்கினால் உன் கூரான நகங்களையும், பற்களையும் உபயோகி" என்றார் காந்தி.

பெண்கள் எப்படியெல்லாம் கற்பழிப்புக்கு உடன்பட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள், எவ்வாறெல்லாம் அவர்கள் மீது பாலியல் பலாத்காரம் நடை பெறுகிறது என்பதை பல்வேறு சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

பங்களாதேஷ் மீது 1971 –இல் பாகிஸ்தான் போர் தொடுத்தது. அப்போது ஒரு நாள் !

14 வயது கதீஜா தன் வகுப்பைச் சேர்ந்த 4 மாணவிகளுடன் வழக்கம்போல் காலையில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தாள். திடீரென்று அவர்களை நெருங்கிய பாகிஸ்தான் ராணுவ வண்டியிலிருந்து துப்பாக்கியுடன் ஆறு சிப்பாய்கள் இறங்கினர். கதீஜாவும், தோழிகளும் அலற அலற ராணுவ வண்டியில் ஏற்றப்பட்டார்கள். மெகமத்பூரியிலுள்ள ஒரு மிலிட்டரி பிராத்தலில் சுமார் 6 மாதம் கைதிகளாக வைக்கப்பட்டார்கள். தினமும் எட்டிலிருந்து பத்து சிப்பாய்கள் 'உடல் தேவை' களைப் பூர்த்தி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். எட்டு வயதிலிருந்து 75 வயதான கிழவிகள் வரை பாகிஸ்தானிய சிப்பாய்கள் விட்டு வைக்கவில்லை. இவர்களால் லட்சக்கணக்கான கன்னிப் பெண்கள் கர்ப்பம் தரித்து குழந்தை பெற்றனர். 'போரின் காரணத்தால் கற்பிழந்த ஒவ்வொரு பெண்ணும் தேசத்தியாகி' என அறிவித்தார் முஜிபூர் ரகுமான், அந் நாட்டு காந்தி.

அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினி என்ற பெண் காவல் நிலையத்திலேயே போலீசாரால் கற்பழிக்கப்பட்டார். அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் தொடர்பாக போராட்டங்களை நடத்தி வருகிறது. பத்மினிக்கு பெண்ணாடம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலையும் கொடுத்துள்ளது அரசு.

பெண் என்பவள் எப்படியெல்லாம் அரண்மனைவாசிகளுக்குப் பயன் பட்டிருக்கிறாள் என்பதற்கு ஒரு கசப்பான உதாரணம் இதோ !

ஷி ஹூ எனும் சீன அரசர் விநோதமான ஒரு பழக்கத்தை வைத்திருந்தார். அவர் விருந்து கொடுக்கும் போது தனது அந்தப்புரத்திலேயே மிக அழகாக உள்ள பெண்ணைக் கொன்று கறியைப் பரிமாறுவாராம்.

எதிரி நாட்டை வீழ்த்துவதற்கு பயன்படுத்தப்படும் முக்கிய ஆயுதங்களில் ஒன்று கற்பழிப்பு.

"ஆண்களைப் புதைத்து விடு,
பெண்களைப் சுவைத்து விடு"

– என்பது இவர்கள் தாரக மந்திரம்.



படிப்பகம்

www.padippakam.com

உலகின் பார்வையைத் தன் பக்கம் ஈர்த்த போஸ்னியா போர்க்களத்தில் கற்பழிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் ! போர்க்களமே மங்கையரின் உடல்தானா?

இரண்டாம் உலகப் போரின் போது இருபது லட்சம் ஜெர்மானியப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். அது போல பன்மடங்கு அட்டூழியங்களை ஜெர்மன் வீரர்கள் ரஷ்யாவில் நடத்திக் காட்டினர்.

வியட்நாம் போரில் அமெரிக்க வீரர்கள் ராணுவ முகாமுக்கு வியட்நாமிய பெண்களை கடத்திக் கொண்டு வந்து கற்பழித்தனர்.

மதக் கலவரத்தால் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகும் பெண்கள், பஞ்சாபில் மட்டும் ஆண்டொன்றுக்கு தந்தை பேர் தெரியாத 8,000 குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர்.

சென்னை, மீனம்பாக்கம் அருகில் 14 வயது சிறுமி ஒருத்திக்கு மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டு இரவில் கண் தெரியாது. அவளுடைய பெற்றோர்கள் வெளியில் சென்றிருந்தபோது மூன்று காமுகர்கள், வீட்டில் புகுந்து அவளைக் கற்பழித்து விட்டனர். கண் தெரியாத காரணத்தால் அவளால் அவளைக் கற்பழித்தவர்களை அடையாளம்' காட்டக் கூட முடியவில்லை.

## சைக்கோ

பெண் பிணத்துடன் உறவு கொள்வது ஒருவிதமான மனநோய் இதற்கு Necromani என்று பெயர்.

தியோடர் பண்டி என்ற நியூயார்க் நகர சட்டக் கல்லூரி மாணவன் இளம் அழகிகளைக் கற்பழித்து, கை கால்களைக் கட்டிப் போட்டு அடித்து கொன்று விடுவான். அவ்வாறு கொல்லப்பட்ட பெண்கள் எண்ணிக்கை 36. தெற்கு அமெரிக்காவில் லோபெஸ் என்பவன் கற்பழித்து கொன்ற பெண்களின் எண்ணிக்கை 300. அவர்களுள் 53 சிறுமிகளின் வயது 8 முதல் 12 வரை.

திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டைச் சேர்ந்தவர் முத்து லட்சுமி. அவளுடைய கணவர் தங்கராஜ் தன் உடலில் ஊசியைச் சொருகி ரத்தம் எடுத்து அதை மதுவில் கலந்து குடித்ததாக நெல்லை மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

ஒரு விமானப் பணிப்பெண்ணிடம் தவறான முறையில் நடந்து கொண்டதாக தற்போது பேராசிரியர் சட்டர் பால் சிங் என்ற மந்திரியை முதலமைச்சர் பஜன்லால் ' டிஸ்மிஸ் ' செய்தார் – செய்தி.

பெண்களுக்குகெதிரான கொடுமைகள் சம்மந்தமாக 1993 – இல் நாட்டில் 60,711 வழக்குகள் பதிவாயின. இவற்றில் 4,366 வழக்குகள் வரதட்சணைக் கொடுமை காரணமாக இறப்புகள் பற்றியவை. 8,153 வழக்குகள் பாலியல் பலாத்காரம் சம்மந்தப்பட்டவை. 15,590 வழக்குகள் கணவன் – மாமியார் – நாத்தனார் கொடுமைகள் பற்றியவை.

குடும்பப் பெண்கள் மீது மன கோளாறான கணவர்களால் இழைக்கப்படும் கொடுமைகள் நம்ப முடியாதவை.

தொலைந்து போன நூற்று ஐம்பது ரூபாய்க்காக டெல்லி உயர்நிலைப் பள்ளியொன்றைச் சேர்ந்த 50 பெண்களை



படிப்பகம்

www.padippakam.com

நிர்வாணப்படுத்தியதற்காக ஒரு பிரின்சிபாலும், இரண்டு ஆசிரியர்களும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

திருப்போரூர் சகோதரி செல்வி ஒரு நாள் அவள் தூங்கிக் கொண்டிருக்கும் போது சத்தியா என்பவன் அவள் கழுத்தில் தாலி கட்டினான். இதை எதிர்த்த செல்வியின் தந்தை செங்கல்வராயன் கொலை செய்யப்பட்டார்.

யுனைட்டட் ஆரப் எமிரேட்டைச் சேர்ந்த பெடுயின் 40 பெண்களை திருமணம் செய்திருக்கிறார். தற்போது வயது 78.

" தகுதியான பெண் அகப்பட்டால் அடுத்த திருமணத்தைச் செய்து கொள்ள தயார் " என்றார் அவர்.

அவர் சொன்ன இன்னொரு இரகசியம் : – எத்தனை திருமணம் செய்தேன் என்பது சரியாக ஞாபகமில்லை. அது நாற்பதாகவும் இருக்கலாம் அதற்கு மேலும் இருக்கலாம். பெரிய எண்ணிக்கையாக இருப்பதால் ஞாபகப் படுத்த முடியவில்லை".

இவருக்கு திருமணம் என்பது ஒரு சூதாட்டம்.

விராலி மலைப் பகுதியில் ஒரு ஆண் திருமணம் செய்து கொள்கிற போது ஒரு 20 வயது பெண்ணையும், 3 வயதுப் பெண்ணையும் திருமணம் செய்யும் வழக்கமிருந்தது. 20 வயது பெண் வயதான பின், 3 வயதான பெண் ஆணுக்கு சுகம் தரவும், ஏவல் செய்யவும் தயாராகிறாள்.

பீகார் மாநிலம், முசாபர் நகர், தந்த்ரவாலி கிராமத்தில் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட அரிஜன தம்பதியர்கள் சதீஷ் (21) சரிதா (20) ஆகிய இருவரும் (மாமன் மதமகள் உறவு முறையினர்) பஞ்சாயத்து தீர்ப்பின்படி வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

## இன்னொரு பெரிய மனிதர் சமாசாரம் :-

மூன்று மகள்களுக்குத் தந்தையான முன்னாள் முதல்வர் அமர்சிங் சௌத்திரி 50– வது வயதில் நிஷா காமிட் என்பவரை மணந்தார். முதல் மனைவி கஜரா பென் இதை எதிர்த்துப் போராடினார்.

பெண்களைக் கற்பழிப்பது மட்டுமல்ல அவர்களை உணவாக்கிச் சாப்பிடுவதிலும் கூட சிலருக்கு ஒரு ' கிக் ' இருக்கிறது.

சோவியத் ரஷ்யாவில் சிகாசில்லோ (வயது 56) என்பவன் கைது செய்யப்பட்டான். 1978 –இல் ஆரம்பித்து 21 மாணவர்கள், 14 மாணவிகள் மற்றும் 18 இளம் பெண்களைக் கொன்றான். அவர்களில் சிலர் உடலை உணவாக்கியதுடன், அவர்களைக் கற்பழித்ததாகவும் ஒப்புக் கொண்டான்.

நம்ப முடியாத சில செய்திகளும் வருகின்றன. அண்ணா மாவட்டம், திண்டுக்கல் அருகே உள்ள முத்தழகுப்பட்டி புனித பிரான்சிஸ் சேவியர் நடு நிலைப் பள்ளியில் 56 வயதான ஆசிரியர் சவுரிராஜன் என்பவன் சகாயம் என்ன மாணவியைக் கற்பழித்தான். இதில் கொடுமை என்னவென்றால் சகாயத்தின் வயது ஆறே ஆறு. சவுரிராஜன் கைது செய்யப்பட்டான்.

மேலை நாடுகளைப் பொறுத்தவரை சவுரிராஜன்கள் கைது செய்யப்பட மாட்டார்கள். 'கர்ம வீரன்' ' காம வீ ரன்' என்று பட்டமும் சூட்டப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பிரான்சில் 71 வயதான ஏஜீப் ஃபக்வாரி என்பவர் 12 வயது ஹானா என்னும் சிறுமியைத் திருமணம் செய்து கொண்டார். இதில் கொடுமை என்னவென்றால் சிறுமி ஹானா, ஃபக்வாரியின் பேத்தி.

மற்றொரு சம்பவம் கினின் உல்ஃப் என்ற 83 வயது கிழவர், லிண்டா ஈஸ் என்ற 51 வயது பெண்ணை திருமணம் செய்தார். இதில் விசேஷம் என்னவென்றால் கினினுக்கு இது 27 – வது திருமணம். லிண்டாவுக்கு இது 22 – வது திருமணம்.

## திருமணத்துக்கு முன்பே கர்ப்பம் ஏன்?

சமீபத்தில் சென்னை உயர் நீதி மன்றத்துக்கு வந்தது சிந்தனைக்குரிய சசிகலா வழக்கு !

சசிகலா கர்ப்பமுற்றாள். அவள் கர்ப்பத்துக்குக் காரணம் ராஜன் என்ற சமூக விரோதி !

இதனை ஜீரணிக்க முடியாத சசிகலாவின் தந்தை வி. கிருஷ்ணன் மகளை கருச் சிதைவு செய்து கொள்ள வற்புறுத்தினார். அவள் மறுத்தாள். கருச் சிதைவு செய்து கொள்ள சசிகலாவுக்கு உத்தரவிடும்படி சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு செய்தார் தந்தை வி. கிருஷ்ணன். நீதி மன்றம் விசாரித்தது.

" நான் ராஜனை ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டேன். ஆகவே கருச் சிதைவு தேவையில்லை " என்று வாதாடினாள் சசிகலா. நீதிபதிகள் மேன்மை தங்கிய திரு. எம். சீனிவாசன் மற்றும் அப்துல் ஆதி ஆகியோர், " ஒரு பெண்ணை கருச்சிதைவு செய்து கொள்ளும்படி எவரும் வற்புறுத்த முடியாது " என்றனர். மேலும், ' அந்தப் பெண் ' எதிர் காலத்தைப் பற்றிய திட்ட வட்டமான முடிவுகளுடன் இருக்கிறாள். தனது கணவன் கை விட்டாலும்கூட குழந்தையைத் தன்னால் வளர்க்க முடியும் " என்கிறாள் என்று தீர்ப்பளித்தார்கள்.

இந்த வழக்கின் மூலம் திருமணமாகத சிறுமிகள் கர்ப்பமுறுவது பற்றிய விவாதம் சூடு பிடித்துள்ளது.

மேலும் அந்தப் பெண் திருமணமானவரா; இல்லையா, என்ற கேள்விக்கும் முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

மகப்பேறு நிபுணர்கள்" இதெல்லாம் சென்னையில் சகஜம் என்கின்றனர்.

சுகாதாரத் துறை புள்ளி விவரத்தின்படி ஓர் ஆண்டில் இந்தியாவில் மட்டும் 5,00,000 கருச் சிதைவுகள் செய்யப்படுகின்றன. இதில் 28,000 திருமணமாகாத பெண்கள். சாமார்த்தியமாக ஆண்களால் ஏமாற்றப்பட்ட இப் பெண்கள் சமுதாயத்தின் கண்களால் கேவலமாக பார்க்கப்படுகின்றனர். ஏமாற்றியவன் பெரிய மனிதனாக உலவுகிறான். இப் பெண்கள் பெரும்பாலும் செல்வந்தர்களால், பொருளாதார பலவீனம் காரணமாக ஏமாற்றப்பட்டவர்கள்.

தற்போது டி.வி. யின் பல்வேறு சானல்களில் 'வரும் காமக் களியாட்டங்களும், சிறுமிகளின் பாலுணர்வைத் தூண்டி விட்டு களத்தில் இறக்கி விடுகின்றன. அதன் விளைவாக உணர்ச்சி வேகத்தில் உடலுறவில் ஈடுபட்டு கற்பழிக்கப்படுகிறார்கள். கற்பழிப்பவர்கள் தப்பித்து விடுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலும், தெருவில், உறவில், பள்ளிகளில் கல்லூரிகளில் காதல் வயப்பட்டு ஒரு வாலிபருடன் இணைந்து விடுகின்றனர். ஜாதி, சமூக அந்தஸ்து, பொருளாதார ஏற்றத் தாழ்வு காரணமாக பெற்றோரின் எதிர்ப்புக்கு ஆளாகின்றனர்.

இவர்கள் அறியாமையில் (innocence) அல்லது காம, காதல் வேகத்தில் இரு வாலிபர்களுடன் உறவு கொண்டால் 'உடனடியாக ' விபச்சாரி ' பட்டம் சூட்டப்படுகின்றது: இந்த சிறுமிகள் பெரும்பாலும் உணர்ச்சி வேகத்தில் சமுதாய நடை முறைக்கு ஒவ்வாத காதலில் வீழ்ந்து விடுகிறார்கள்.

நடைமுறை சாத்தியக் கூறுகளைப் புரிந்து கொள்ளாத படித்த, படிக்காத பெற்றோர்கள் மத நம்பிக்கை, சமூக ஒழுகலாறு, தீச் சொல் காரணமாக ஏதுமறியாத பெண்ணை சித்திரவதைப் படுத்துகின்றனர்.

உணர்ச்சி வேகம் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானது. ஆணுக்குப் பொறியில்லை. அவன் தப்பித்து விடுகிறான். பெண்ணுக்குப் பொறி உள்ளது. அவள் மாட்டிக் கொள்கிறாள். கர்ப்பமடைந்து விடுகிறாள். அவள் நடத்தை கெட்டவள் ஆகி விடுகிறாள். முதலில் சமுதாயத்தின் இந்த போலி பார்வை மாற வேண்டும்.

எப்படி பல பெண்களைக் கற்பழித்தவன் கவுரவமாக திருமணம் செய்து கொள்ளுகின்றோனோ, அது போல ஆண்களால் ஏமாற்றப்பட்டவர்களும் கவுரமாக திருமணம் செய்து கொண்டு கௌரவுமாக வாழும் நிலை வர வேண்டும். அதுவே சமூக நீதியாகும்.

## 8

# விலை மாது :- அவள் விரும்பி ஏற்ற தொழிலா? சமுதாயத்தால் நிர்ப்பந்திக்கப்பட்ட தொழிலா?

" கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே சொந்தமானது. பொது உடமை பேரறிஞர் ஏங்கெல்ஸ் இந்த முரண்பாட்டைக் கீழ்க் கண்டபடி விளக்கினார்.

" ஒரு பெண்ணுக்கு பெரும் சட்டப் பிரச்சினையையும் , சமூக இழிவையும் ஏற்படுத்தும் ஒரு விஷயம் ஆணைப் பொறுத்த வரையில் ஒரு கௌரவமாகவும், மற்றவர்கள் குதூகலத்துடன் கேட்டு ரசிக்கும் சாதாரணமான விஷயமாகவும் உள்ளது". கற்பழிந்த பெண்ணின் மகனை ' வேசி மகன் ' என்பார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்கிறார் கவிஞர் நஸ்ருல் இஸ்லாம்:- கற்பில்லாத பெண்ணின் மக்களை வேசி மக்கள் என்று சொல்லுவோமாயின் கற்பில்லாத தந்தையரின் மக்களையும் அப்படித்தானே அழைக்க வேண்டும்.

பெண் என்றால் 'வேசி' ஆனால் அதே செயலைச் செய்யும் ஆணை ' வேசன் ' என்று சொல்லுவதில்லையே ! ஏன்?

விபச்சாரக் குற்றங்களில் தண்டிக்கப்படும் பெண்கள் எத்தகையவர்கள்? சோற்றுக்காகவும், மானம் காக்க ஆடைகளுக்காகவும்,



படிப்பகம்

www.padippakam.com

தெருவோரங்களிலும், இருட்டுப் பகுதிகளிலும், குடிசைகளிலும், மலிவு லாட்ஜ்களிலும் விபசாரத்தைத் தாங்கள் உயிர் வாழ்வதற்காக செய்கின்ற ஏழைப் பெண்களே தண்டிக்கப்படுகின்றனர். தங்கள் வழக்கு எண்ணிக்கை இலக்கினை அடைவதற்காக இந்த அபலைகளைப் பிடித்து கேஸ் போட்டு விடுகின்றனர். இவர்கள் நட்சத்திர ஓட்டல்களிலும் ஏ.சி அறைகளிலும் நடக்கும் மேலிடத்து விபசாரங்களைக் கண்டு கொள்வதில்லை.

ஒரு பெண் விபசாரத்துக்கு எப்படி வருகிறாள்? ஒரு ஆண்தான் காரணமாக இருக்கிறான். கலர் டி.வி. பிரிட்ஜ் போன்ற வாழ்க்கைச் சௌகர்யங்களுக்காக தன் மனைவியை விபச்சாரத்தில் ஈடுபடுத்தினான் ஒரு கணவன். மனைவி சரியான ஒத்துழைப்பு தரவில்லை என்று வைப்பாட்டியைச் சேர்த்துக் கொண்டு மனைவியை துரத்தி விட்டான் ' ஒருவன். அவள் விபச்சாரியானாள். காதலனுடன் ஓடி வந்து அவனால் கைவிடப்பட்ட ஒரு பெண், சினிமா ஆசை காட்டி அழைத்து வரப்பட்ட பெண், திருமணமான முதல் நாளே கணவனால் மாமனாருக்கு முந்தானை விரிக்கச் சொல்லப்பட்ட பெண், வரதட்சணை கொடுமையால் வீட்டை விட்டு விரட்டப்பட்ட பெண், வரதட்சணை கொடுக்க முடியாததால் 35 வயதாகியும் திருமணமாகாததால் விரக்தியில் வீட்டை விட்டு ஓடிய பெண், பெண்ணாகப் பிறந்து விட்டதால் பெற்றோரின் கொடுமைகளுக்கு ஆளான பெண், ஆலை முதலாளி அல்லது மேஸ்திரியால் கருவான பெண், பெரிய பண்ணை அல்லது மகனால் கருவான பெண், வேலை கொடுப்பதாக அழைத்துச் செல்லப்பட்டு அரசியல் தரகர்களால், அதிகாரிகளால் கருவான பெண், அப்பாவித்தனத்தால் அழைத்துச் செல்லப்பட்டு கருவான பெண் என்று பட்டியல் தொடர்கிறது.

விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள பெண் அதை ஒரு மகிழ்ச்சிகரமான தொழிலாக ஏற்றுக் கொண்டு அதைச் செய்யவில்லை. சமூக அந்தஸ்துள்ள பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. அந்தஸ்தே இல்லாத இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தினம் தினம் மனதால் செத்துப் பிழைக்கிறார்கள்.

இவர்களை ' எய்ட்ஸ் ' தாக்க ஆரம்பித்துள்ளது. ஆனால் அவர்கள் இதன் கொடுமையைப் புரிந்து கொள்ளவில்லை. ' நாங்கள் வாழ்வது வாழ்வே இல்லை. இதில் சாவைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும் "? என்று கேட்கின்றனர்.

பெண்களை ஏமாற்றி விபசார விடுதிகளில் சேர்ப்பதை தடை செய்வதற்காக Prevention of Immoral Traffic Act 1956 (P.I.T.A) கொண்டு வரப்பட்டது. இதில் சில மாறுதல்களைச் செய்வது பற்றி இப்போது மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது. 1949 — இல் நடைபெற்ற பெண்களைத் தவறான காரியங்களுக்காக பயன்படுத்தி வருவது பற்றிய ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின் இச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இச் சட்டத்தால் பலன் கிடைக்கவில்லை. ' இரவு ராணிகள் கைது ' ' பலே அழகி கைது ' என்ற செய்திகள் வர மட்டுமே பயன்பட்டது. இச் சட்டம் பெண்களை மட்டுமே குறி வைத்துத் தாக்கியது. விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள பெண் மட்டுமே அந் நிலைக்குப் பொறுப்பல்ல. அவளை அத் தொழிலை நோக்கி இழுத்துச் செல்லும் சமூக சூழல் எது என்று ஆராய்ந்து அதற்கேற்ற சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர அரசு பரிசீலித்து வருகிறது.


படிப்பகம்

www.padippakam.com

தற்போது அமுலில் உள்ள சட்டம் விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துபவர்களையும், அத் தொழிலின் மூலம் லட்சக் கணக்கில் சம்பாதிப்பவர்களையும் விட்டு விடுகிறது. குடும்ப மற்றும் சமூக சீரழிவுகளால் அனாதையாகி வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள அத் தொழிலில் ஈடுபடும் அபலைப் பெண்ணைக் கிரிமினல் என்கிறது சட்டம். இச் சட்டத்தின் பிரிவு 7, 8 மற்றும் 20 ஆகியவை முற்றிலும் பெண்களுக்கு எதிரான்வையாகும். இந்த பிரிவுகள் பெண்ணுரிமை, சட்டத்தின் முன் ஆணும் பெண்ணும் சமம், வாழுகின்ற உரிமை ஆகியவற்றத் தகர்த்து விடவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சட்டத்திற்குப் பல விதமான வியாக்கியானங்கள் அளிக்கப்பட்டு பெண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர். பொது இடத்தில் விலை மாது சமூகத்துக்கே ஆபத்தானவள். எளிதில் உணர்ச்சி வயப்படும் இளைஞர் சமுதாயத்தை இப் பெண்கள் கெடுத்து விடுகிறார்கள் என்று மேல் தட்டிலிருப்போர் ' வஜனம் ' பேசுகின்றனர். ஆனால் அவளுடைய சந்தர்ப்ப சூழ்நிலை பற்றி எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இப் பெண்களால் சமூகத்தின் ஒழுக்கம் கெட்டு விடுகிறது என்கின்றனர் சிலர்.

விலை மாதர் முறை முற்றிலுமாக ஒழிக்கப்படும் வரைக்கும் அவர்களுடைய நலனும் பாதிக்கப்படாதபடியும், சமுதாயத்தின் நலனும் பாதிக்கப்படாதபடியும் சட்டங்களை இயற்ற வேண்டும். சமூகத்தின் நலனும், ஒழுக்கமும் பாதுகாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அந்தப் பெண்களின் நலனும் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படவேண்டும். கீழ்க்கண்ட மூன்று தவறான கணிப்புகள் காரணமாக விலை மாது மீது தவறான எண்ணம் ' பரப்பி விடப்படுகிறது.

1. பெண் வேண்டுமென்று விரும்பியே இத் தொழிலுக்கு வருகிறாள் என்ற நினைப்பு.
2. அத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அவள் இழிவானவள். ஆகையால் மற்ற பெண்களுக்கு உள்ள சட்ட வடிவிலான உரிமைகள் அவளுக்குக் கிடையாது என்ற நினைப்பு.
3. ஆணின் பாலுணர்வு வக்கிரமானது, கட்டுப்படுத்த முடியாதது. ஆகையால் அதைத் தணிக்கும் பணியைச் செய்யும் கூலி ஆள் அல்லது மிருகம்தான் விபசாரி என்ற நினைப்பு.

பல்வேறு ஆய்வறிக்கைகள், பெண் அவளுடைய பொருளாதார நிலையில், உயிர் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தம் காரணமாக மட்டுமே அத் தொழிலுக்குத் தள்ளப்படுகிறாள் என்பதை நிரூபிக்கப்படுகின்றன. அவள் ஒரு முறை அத் தொழிலில் அடியெடுத்து வைத்த மறு நிமிடமே பெண் புரோக்கர்கள், விபச்சார விடுதி உரிமையாளர்கள், பெண் தரகர்கள், அவர்கள் தயவில் தின்று கொழுக்கும் குண்டர்கள் போன்றோரால் பின்னப்பட்டுள்ள இரும்பு வலையில் சிக்கிக் கொள்ளுகிறாள். அவர்கள் அவளை நிர்ப்பந்தப்படுத்தியும், கொடுமைப் படுத்தியும், மூளைச் சலவை செய்தும் தொழிலில் ஈடுப்படுத்தி சம்பாதிக்க ஆரம்பித்து விடுகின்றனர். அவள் அவர்கள் நலனுக்காகவே வாழுகிறாள், சித்தரவதைகளை அனுபவிக்கிறாள். அப்படியிருந்தபோதும் அவள் விரும்பி அத் தொழிலில் ஈடுபடுவதாக சமுதாயம் அவளை இழிவாகப் பார்க்கிறது. சமுதாயத்தின் இந்த கோளாறான, மஞ்சள் காமாலை பார்வையால் அவள் மீண்டும்


படிப்பகம்

www.padippakam.com

அங்கிருந்து வெளியே வந்து வேறு ஒரு தொழிலில் ஈடுபடும் சூழ்நிலையை இழந்து விடுகிறாள். அவளை தொழிற்சாலையிலோ, வேறு நிறுவனங்களிலோ வேலையிலமர்த்தவும் உரிமையாளர்கள் தயங்குகிறார்கள்.

இந் நிலையில் சமூகம், சுற்றுப்புறம் மற்றும் குடும்பத்தின் உரிமை என்பது இப் பெண்களின் உரிமைகளை ஏப்பம் விடத் துடிக்கின்றன. அவள் விலை மாது என்பதால் யார் அவளை அணுகினாலும் மறுக்கும் உரிமை அவளுக்கில்லை என்று எண்ணுகின்றனர். அவள் விலை மாது என்பதால், ' கற்பழிப்பு ' என்ற குற்றச் சாட்டை அவள் எவர் மீதும் சுமத்த முடியாது என நம்புகின்றனர். அவள் மற்றவர்களால் கற்பழிக்கப்படவே பிறவி எடுத்துள்ளவள் என்று எண்ணுகின்றனர்.

ஆண்கள் பாலுணர்வு வெறி கொண்டவர்கள். அவர்களுக்கு வடிகாலாக விலை மாதுக்கள் தேவை. இது ஒரு அத்தியாவசியமான தீமை. இல்லை என்றால் காம வெறி பிடித்த ஆண்கள் குடும்பப் பெண்கள் மீது பாய்ந்து விடுவார்கள். ஆகவே குடும்ப பெண்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் விலை மாது என்ற பாதுகாப்பற்ற பெண்களும் இருக்க வேண்டும். அதாவது குடும்பப் பெண்களின் உரிமை காக்க விலை மாதுக்களின் உரிமை பலி கொடுக்கப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர் (குடும்பம் என்ற அமைப்பு ஏற்பட்டதிலிருந்து கணவன் மட்டும் கற்பழித்தால் அவள் குடும்பப் பெண், பலர் கற்பழித்தால் விலை மாது என்பது நடைமுறை) (மனைவியின் விருப்பமின்றி கணவனே அவளைப் புணர்ந்தாலும் அது கற்பழிப்பு என்கிறது I.P.C 376 A) பெரும் நகரங்களில் விலை மாதுகளை AIDS சம்மந்தமாக மருத்துவப் பரிசோதனை செய்து வருகின்றனர். ஆனால் அவர்களிடம் வரும் ஆண்களுக்கு சோதனை செய்ய இயலவில்லை. அவர்கள் இரகசியமாக விபசார விடுதிக்கு வந்து இரகசியமாக வெளியேறி இரகசியமாகவே தங்கள் மனைவிகளுக்கும் 'AIDS' போன்றவற்றைப் பரப்புகின்றனர். இந்த ஆண்கள் நோய் பீடிக்கப்படாத விலை மாதுவுக்கும், மனைவிக்கும் நோயைப் பரப்புகின்றனர். விலை மாதுக்களின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் பம்பாய் போன்ற பெரு நகரங்களில் அரசு பெரும் முயற்சிகளை செய்து வருகிறது. ஆனால் அவர்களிடம் ஆண்களைப் பரிசோதித்து வடிகட்டி அனுப்ப என்ன வழி?

தவறு செய்யும் ஆண் தரகன், விடுதி உரிமையாளர் ஆகியோர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் விலைமாதுவை, விடுதலை செய்ய வேண்டும் என்ற வகையில் புதிய திருத்தம் கொண்டு வருவது பற்றி ஆலோசனையில் உள்ளது. ஆகையால் விலை மாதுவை விடுவித்து அரசு சலுகைகளை அவளுக்கு வழங்குவதுடன் சமுதாயம் அவளை இழிவாகப் பார்க்காதபடி சமுதாய விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெண்களின் மறு வாழ்வு, வேலை வாய்ப்பு போன்றவற்றை கவனிக்கத் தனியாக ஒரு துறை ஏற்படுத்தப் பட்டு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் செயல்படும் வகையில் புதிய மசோதா இருக்கும்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மரியாதைக்குரிய பெண் கேவலமான பெண், கற்புள்ளவள் – கற்பிழந்தவள், நல்லவள் – கெட்டவள் என்ற செயற்கையான வேறுபாடுகள் எல்லாம் அழிந்து பெண் என்றால் பெண் என்ற நிலை உருவாகும் ஒட்டு மொத்தமாக பெண்கள், ஆண்களின்



படிப்பகம்

www.padippakam.com

அடக்குமுறை, கற்பழிப்பு, கேவலப்படுத்துதல், போன்றவற்றை எதிர்த்து போராடுவதற்கான களம் அப்போதுதான் ஏற்படும்.

விலைமாதுக்களின் குழந்தைகளை பள்ளிக் கூடங்களில் சேர்க்கும் போது ஆசிரியர்கள் தந்தை பெயர் கேட்டுத் தொந்தரவு செய்தனர். இதனால் பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலமை ஏற்பட்டது. தாயின் தொழில் வாரிசாக மகளும் மாறும் நிலை ஏற்பட்டது. இது சம்மந்தமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ' தாய் பெயரைக் குறிப்பிட்டாலே போதும், தந்தை பெயரைக் கேட்க கூடாது ' என்று உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம்.

பள்ளிக் கூடச் செலவுக்கு தகுந்தபடி ' தொழிலில்' வருமானம் இல்லையென்றால் ' பீஸ் ' கட்ட முடியாமல் போய் விடுகிறது.

சில விலை மாதுக்களை பரந்த நோக்கமும், தொண்டுள்ளமும், சேவை மனப்பான்மையும் உள்ள ஆண்கள் திருமணம் செய்து அழைத்துச் சென்று விடுகின்றனர்.

சில கயவர்கள் ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து அழைத்துச் சென்று மீண்டும் ' தொழிலில் ' ஈடுபடுத்தி சம்பாதிக்கின்றனர்.

மசூதி இடிக்கப்பட்ட போது ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டதால் வாடிக்கையாளர்கள் வரவில்லை. உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இவர்களுக்குள் மத நல்லிணக்கம் தாராளமாய் உள்ளது. கை வசம் இருந்த உணவை இந்து, முஸ்லிம், கிறித்தவ விலை மாதுக்கள் சுமுகமாக பகிர்ந்து உண்டனர். இவர்களிடம் வரும் வாடிக்கையாளர்களும், மத நல்லிணக்கம் மிக்கவர்கள். மத வெறியர்கள் இங்கு வந்தாலும் இந்து வெறியர் இந்து பெண்ணையும், முஸ்லிம் வெறியர் முஸ்லிம் பெண்ணையும் தேடுவதில்லை. கண்ணுக்கு சுமாரான அழகுள்ள பெண்ணையே தேடுகின்றனர்.

அது போலவே அங்கு வரும் ஒரு இந்து அல்லது முஸ்லிம் வெறி.ர் வந்த வேலையை ஆத்திர அவசரமாக முடித்து, விட்டு செல்கிறாரே தவிர, ' அய்யோ நம் மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறாளே ! இது மதத்துக்கே கேவலம் அல்லவா ! அவளை அழைத்துச் சென்று திருமணம் செய்து குடும்பம் நடத்தலாமே " என்று சிந்திப்பதில்லை.

அது போலவே அங்கு வரும் ஆண்கள் ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டவர்கள். பெண்ணின் ஜாதியைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ விசாரிப்பதில்லை. இங்கே தான் தீண்டாமை இல்லை. மத வெறி இல்லை. ஜாதி வெறி இல்லை. சமரச சன்மார்கம் நிலவுகிறது. இதைப் பார்க்கும்போது இந்தியாவே ஒரு விபச்சார விடுதியாக மாறினால் மத வெறித் தாண்டவம் குறைந்து விடும் என்று தோன்றுகிறது அல்லவா?



படிப்பகம்

www.padippakam.com

## மக்களின் ஒத்துழைப்பு முக்கியம் !

இத் தொழிலில் ஈடுபட்ட பெண்ணின் சுய சரிதையைப் பார்ப்போம்.

**பேபி சொல்கிறாள் :-**

" என்னை ஒருவன் காதலித்து கற்பழித்து விட்டு சென்று விட்டான். எங்க சித்தி வீட்டுக்குப் போனேன், ஒரு பணக்கார வீட்டுக்கு வேலைக்குச் சேர்த்தாங்க. சேர்ந்த அஞ்சாவது நாளே அந்த வீட்டுக்கார மனுஷன் என்னக் கெடுக்கப் பார்த்தான்! சரின்னு கட்டிட வேலைக்குப் போனேன். அங்கேயும் காண்ட்ராக்டர் தொந்தரவு ! ' சம்மதிச்சா வேலை தருவேன் இல்லை நிறுத்திடுவேன் ' னான். சொன்னா நம்ப மாட்டீங்க. என் சித்திதான் என்னை விபச்சார விடுதியில் கொண்டு வந்து விட்டாள். ஒரு ராத்திரியில இப்போ குறைஞ்சது நூறு ரூபாய் கிடைக்கும் ".

## "Son தேகம் "

மகன் : இவங்கெல்லாம் யாரம்மா?

தாய் : இவங்களையெல்லாம் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து போலீஸ் கூட்டி வர்றாங்க.

மகன் :சிவப்பு விளக்கு பகுதின்னா?

தாய் : வீட்டை விட்டு ஓடிப்போன பொம்பளைங்க எல்லாம் இருக்கிற இடம்.

மகன் :எத்தனை ஆம்பிளைங்க வீட்டை விட்டு ஓடிப் போறாங்க?

தாய் : அவங்க இருக்கிற இடமெல்லாம் சிவப்பு விளக்கு கிடையாது.

தாய்லாந்தில் விலை மாதுக்கள் (Commercial Sex Workers) மிகவும் அதிகம். இவர்கள் கிராமப்புறங்களிலிருந்து 15 அல்லது 16 வயதில் நகர்புறத்துக்கு வந்து 5 அல்லது 10 ஆண்டுகள் தொழில் நடத்தி சம்பாதித்து விட்டு மீண்டும் கிராமத்துக்குச் சென்று குடும்பம் நடத்துகின்றனர். அங்கு யாரும் அப் பெண்களை இழிவாகப் பார்ப்பதில்லை என்கிறது ஒரு கட்டுரை.



படிப்பகம்

www.padippakam.com

# 10

# பெண்ணடிமைத்தனத்தில் மதத்தின் பங்கு

மத நம்பிக்கைகளும், மூட நம்பிக்கைகளும் காலங் காலமாக இச் சமுதாயத்தை ஆழமாகப் பிடித்து வேரூன்றியுள்ளன. பெண்ணடிமைத்தனத்துக்கு இவை முக்கியமான.காரணமாக உள்ளன.

வரதட்சணை, பால்ய விவாகம், உடன்கட்டை, விதவைகளை இழிவு படுத்துவது போன்றவை மத நம்பிக்கை என்ற முலாம் பூசப்பட்டு நீண்ட காலமாக கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இன்றைக்கும் இப் பிரச்னைகள் சம்மந்தமாக மதங்கள் மௌனம் சாதிக்கின்றன. அல்லது பெண்ணடிமைத்தனத்தை ஆதரிக்கின்றன. லட்சுமி, சரஸ்வதி, சீதா தேவி, பாரத மாதா என்கிறார்கள். ஆனால் இவர்களைக் கருவிலேயே கொலை செய்வதா, பிறந்த பின் கொலை செய்வதா என்று திட்டமிடுகிறார்கள். பெருகி வரும் சிசு கொலையை எந்த மதமும் கண்டு கொள்ளவில்லை.

பல்வேறு கோணங்களில் இது சம்மந்தமாக நாம் ஆராயலாம்.

பெண் மென்மையானவள். ஆண் வன்மையானவன். ஆண் ஆள்பவன், பெண் ஆளப்படுபவள். பொருளீட்டுவது ஆணின் பொறுப்பு. இல்லறம் பேணுவது பெண்ணின் பொறுப்பு. அன்பு, பொறுமை, தியாகம் ஆகியவை பெண்ணின் இயல்புகள். வீரம், வேகம், கோபம் ஆகியவை ஆணின் இலக்கணங்கள்.

ஒரு தலைமுறை தன்னுடைய பழக்க, வழக்கங்களை சாத்திரமாக வடித்து வைக்கிறது. அடுத்த தலைமுறையும், அதற்கு அடுத்த தலைமுறைகளும் அவற்றைக் கண்மூடித் தனமாய்ப் பின்பற்றத் தொடங்கிவிடுகின்றன. இவ்வாறு எழுத்து வடிவம் கொண்ட சாத்திரங்களை எழுத்துக்கு எழுத்து அடுத்த தலைமுறை பின்பற்றியதுதான் பெண்ணின் நிலை படிப்படியாகத் தாழ்ந்து பாதாளத்துக்குச் செல்ல காரணம்.

அவ்வாறு எழுதி வைக்கப்பட்ட சாத்திரங்கள் எவ்வாறு பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்துகின்றன என்பதைப் பார்ப்போம்.

" கணவன் உயிருடன் இருக்கும்போதே சடங்கு, நோன்பு முதலியவற்றைக் கடைப் பிடிக்கும் மனைவி, கணவனது வாழ்நாளைக் குறைத்து விடுகிறாள் ; அதனால் அவளுக்கு நரகம்தான் கிடைக்கும். பெண்கள் புண்ணியத்தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடுவது வீணான செயலே. அதற்குப் பதிலாக கணவனது பாதத்தையோ, உடம்பையோ கழுவி அந் நீரைக் குடித்தால் மேலான செயல் . அப்படிக் குடிப்பதால் அப் பெண்களுக்கு மேலான பதவி கிட்டும்." (அத்ரி 136 –137) நோயாளியாகவோ, தீய பழக்கங்கள் உடையவனாகவோ கணவன் இருப்பினும், அவனுக்கு மனைவி கீழ்ப் படிய வேண்டும். அவ்வாறு கீழ்ப்படிந்து நடக்காதவளை ஆடை ஆபரணங்களைப் பறித்துக் கொண்டு சமுதாயத்திலிருந்து மூன்று மாத காலம் வரை விலக்கி வைக்க வேண்டும். (மனு 10 – 8).

பெண்ணினம் பலிக்கடா ஆக்கப்பட்டு, சபிக்கப்பட்டது என்பதில் மதங்களிடையே ஒற்றுமை நிலவுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

விலக்கப்பட்ட பாவக் கனியை உண்ண அவள்தான் தூண்டினாள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு பெண்ணை இரண்டாம் தர மக்களாக கிறித்தவமதம் ஒதுக்கியது.

' எந்த சமூகம் தனது தலைமையை ஒரு பெண்ணின் கரங்களில் ஒப்படைக்கிறதோ, அந்த சமூகம் ஒரு போதும் உருப்படாது " என்றும், பெண் வெளியில் செல்லும் போது சைத்தான் அவளுடன் செல்கிறான் என்றும் நபிகள் நாயகம் கூறியுள்ளார்.

" பெண்ணுக்கு ஆன்மாவே இல்லை " என்கிறது இஸ்லாம்.

" உடலை முழுவதுமாக மூடிக்கொண்டு இருட்டில் இரு " என்று கூறுகிறது. ஆம் ! இருட்டை விட்டு வெளியே வந்தால் கற்புக்கு பங்கம் ஏற்பட்டு விடும். இது பெண்கள் மட்டுமே உயிராகப் போற்ற வேண்டிய உன்னத ஒழுக்கம். ஆண்கள் மட்டும் எங்கு வேண்டுமானாலும் போகலாம் ; வரலாம். ஐந்து திருமணமும் புரியலாம்.

இப் பழக்கத்தை எதிர்த்து குரல் கொடுத்த வங்கதேச 31 வயது பிரபல பெண் எழுத்தாளர், நாவலாசிரியர், கவிஞர் டாஸ்லிமா நஸ்ரீன் ' ஒரு பெண் 10 ஆண்களுடன் உடல் உறவு கொண்டாலும் அவள் கற்புள்ளவள்தான் " என்றார். ஐந்து மனைவிகளை வைத்துக் கொள்ள மத அங்கீகாரரம் பெற்றுள்ள ஆண்கள் சிலர் இதைக் கேட்டு அவரைக் கைது செய்ய வேண்டும், அவருடைய புத்தகங்கனத் தடை செய்ய வேண்டும் என்று கோரிகை வைத்து இயக்கம் நடத்துகின்றனர்.

இவர் மீது மதவெறியர்கள் பாய காரணம் இவர் எழுதிய ' அவமானம் ' என்ற நாவல். அதில் அயோத்தி சம்பவத்தையொட்டி வங்காள தேசத்தில் சிறுபான்மையிரான இந்துக்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்பதைச் சித்தரித்திருந்தார். மதவாதிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து ' அவமானம் ' நாவல் தடை செய்யப்பட்டது. நஸ்ரீனின் இந்தியா செல்வதற்கான பாஸ்போர்ட் முடக்கப்பட்டது. தொல்லைகள் தொடர்ந்ததால் டாக்கா மெடிக்கல் காலேஜ் டாக்டர் வேலையும் ராஜினாமா செய்து விட்டார். அவருடைய தலைக்கு ஒரு அமைப்பு ரூ.50,000/- விலை பேசியிருக்கிறது. ஒரு அமைப்பு 7லட்சம் தருவதாக அறிவித்திருக்கிறது.

அப்படியிருந்தும் துணிந்து நிற்கிறார். ' டெலிகிராஃப் ' பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில், பெண்ணுரிமை வாதிகளும், மதவாதிகளும் எப்போதுமே அனுசரித்துப் போக முடியாது. இருவரின் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை. சமீப காலமாகப் பங்களா தேஷில் இந்தப் பழமை வாதம் எல்லா மட்டத்திலும் பரவி வந்து கொண்டிருக்கிறது. அதை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டியது என் முக்கிய கடமை என்று நினைக்கிறேன். எந்த நிலை வந்தாலும் அது பற்றிக் கவலை இல்லை. என் பேனா தொடர்ந்து பழமைவாதத்தை எதிர்க்கும் ".

இவருடைய புத்தகங்கள் வங்க தேசத்தில் பெருமளவில் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

" பெண்ணின் மதிப்பு, அவளுடைய உடலை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. உடல் அழகு இருந்தால் அவள் மதிக்கப்படுகிறாள் " என்கிறார் டாஸ்லிமா.

" எழு ! பெண்ணே எழு ! வாழக் கற்றுக் கொள் ! இந்த வானம் உன்னுடையது. இந்த விண் மீன்கள் உன்னுடையவை. இந்த ஆறு, இந்த காடு, மலை அனைத்தும் உன்னுடையவை. எழு ! நகர்ந்து செல்ல ஆரம்பித்து விடு ! இந்த உலகம் உன்னுடையது " என அறை கூவல் விடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

தஸ்லிமாவை மணம் செய்து கொள்ள விரும்புவதாக ஒரு மௌலானா பத்திரிக்கையில் விளம்பரம் செய்தார். தஸ்லிமா அவருக்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்தார்.

1) மௌனாலானா மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

2) அவருடைய ஆண்மை சோதிக்கப்படும்.

3) பேன்ட், சர்ட் அணிய வேண்டும்.

4) திருமணத்துக்குப் பின் அவர் 'பர்தா' அணிய வேண்டும்.

5) சமையல் வேலைகளைச் செய்ய வேண்டும்.

6) மனைவியின் காலில் தலை வைத்துப் படுத்து உறங்க வேண்டும்.

7) இரு கணவர்களை மணக்கும் உரிமையை மனைவிக்கு அளிக்க வேண்டும்.

8) 'தலாக்' செய்யும் உரிமை தஸ்லிமாவுக்கு உண்டு.

தஸ்லிமா மத உணர்வைப் புண்படுத்தியதாக வழக்கு தொடரப்பட்டு கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

அவருக்கு ஆதரவாக சில மனித உரிமை மற்றும் பெண் அமைப்புகள் குரல் கொடுத்துள்ளன.

முஸ்லிம் மதவாத அரசு அமைந்துள்ள 'வங்க தேசத்திலும்' சில நீதிபதிகள் துணிந்து பெண்ணுரிமைக்கு ஆதரவான நிலை எடுக்கின்றனர்.

சட்டக் சாரா என்ற கிராமத்தைச் சேர்ந்த 20 வயது நூர்ஜஹான் பேகம் என்பவர் தவறான நடத்தை உடையவர் என்பதற்காக அவர் மீது 101 முறை கல்லெறியும்படி உத்திரவிட்ட மௌலானா மன்னன் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த 8 கூட்டாளிகளுக்கு 7 ஆண்டுகால சிறை தண்டனை வழங்கினார் நீதிபதி. (இந்து 24–2–94)

முஸ்லிம் திருமண முறை என்பது மேற்கு ஆசியாவில் ஆதி காலத்தில் திருமண ஒப்பந்தம் (Contract) என்பதிலிருந்து வந்தது. ஒப்பந்தம் எவ்வளவு எளிதில் செய்யப்படுகிறதோ, அவ்வளவு எளிதில் அதை ரத்தும் செய்யலாம். அதுவே இன்றைக்கு சமூக, அரசியலில் வழிகாட்டியாகி விட்டது.

'சரியத்' மற்றும் 'இஸ்லாமிய சட்டம்' ஆகியவற்றை அமுல்படுத்தும் பிரகடனப்படுத்தப்படாத பாதுகாவலர்களாக 'உலெமாக்கள்' உள்ளனர். இவர்களும், 'Muslim personal Law .... ம்' மத தீவிரவாதிகளின் பிடியில் உள்ள அமைப்புக்களே ! ஆணாதிக்கத்தை விரும்பும் ஆண்களே பெரும்பான்மையாக இவற்றில் உள்ளனர்.

ஷா பானுவுக்கு ஆதரவான உச்ச நீதிமன்ற தீர்ப்பை செல்லாததாக்க பாராளுமன்றம் 'The Muslim Women (Protection of Rights on Divorce) Act 1986 என்ற சட்டத்தை நிறைவேற்றியது. இது ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் சொல்லி விவாகரத்து செய்வது உட்பட முஸ்லிம் சட்டம் செல்லுபடி ஆகும் என்றது.

கார்ட்டூனிசா வழக்கில் 15–4–1994 – இல் அலகாபாத் உயர் நீதி மன்ற நீதிபதி தில்ஹாரி 'மும்முறை தலாக்' செல்லாது என்று தீர்ப்பளித்தவுடன் மீண்டும் இது சம்மந்தமான விவாதம் சூடு பிடித்துள்ளது.

Shariat Application Act 1937 – இது திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்றவற்றில் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் Islamic Laws செல்லுபடியாகும் என்றது. இதன் காரணமாக நீதிபதிகள், ஏற்கெனவே முஸ்லிம்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளில் 'காஜி' கள் மத



படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையில் எடுத்த முடிவுகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இச் சட்டம் வந்து 57 ஆண்டுகள் ஆன பின்னரும் இது சம்மந்தமான திட்ட வட்டமான சட்டங்கள் இயற்றப்பட வில்லை. இதனால்தான் நீதி மன்றம் பெண்ணுரிமையைப் பாதுகாக்கும் ஒரு தீர்ப்பை வெளியிடும் போதெல்லாம் மத அடிப்படைவாதிகள், " இது இஸ்லாமுக்கு எதிரானது " என்று கூக்குரல் எழுப்புகின்றனர்.

' மும் முறை' என்பது முஸ்லிம் பெண்களின் தலை மீது எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் கூர் வாள். இது அவளுடைய பாதுகாப்பற்ற நிலைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நீதிமன்ற தீர்ப்புக்கள் தங்களுக்கு சாதகமாக இருந்தால் அதை ஏற்றுக் கொண்டு அடிப்படைவாதிகள் கூத்தாடுகிறார்கள். தீர்ப்பு பாதகமாக இருந்தால் " நீதி மன்ற தீர்ப்பு எங்கள் மதத்தைக் கட்டுப்படுத்தாது ' என்று தேச விரோத பாணியில் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

மூன்று முறை தலாக் சொல்ல மூன்று 'Juhr' (Period of cleanliness) (மூன்று மாத விலக்கு) அவகாசம் இருக்க வேண்டும் என்று குரான் சொல்லுகிறது. ஒரே நேரத்தில் மும் முறை தலாக் சொல்லுவதை நபி அவர்கள் தடை செய்தார்கள் ' மும் முறை' தலாக் செய்த ஒருவர் பற்றி நபிகளிடம் கூறப்பட்ட போது அவர் முகம் சிவந்து கோபமடைந்தார். அது ' அல்லாவின் புத்தகத்துக்கு (Book of Allah) எதிரானது ' என்றார்.

கடைசி ஹஜ் (Haj) — க்குப் பின் கடைசி பிரசங்கத்தில் பெண்களிடத்தில் இரக்கம் காட்டும்படி நபிகள் கோரினார்கள்.

" கணவன் மனைவியிடையே முறிவு ஏற்படும் போது கணவன் தரப்பில் ஒரு நபரையும், மனைவி தரப்பில் ஒரு நபரையும் நியமித்து சுமுகமாகப் பேசினால் இருவரும் ஒன்றாயிருக்க அல்லா இணக்கத்தை ஏற்படுத்துவார் " என்கிறது குரான். (4:35) ஆணாதிக்க சமுதாயத்தில் இம் முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. குரான் விவாகரத்து செய்யும் உரிமையைப் பெண்ணுக்கு அளிக்கிறது. அதற்கு 'குல் —அ' (Khul'a) என்று பெயர்.

ஆனால் கணவனின் சம்மதம் தேவை என்று சட்ட வியாபாரிகள் கூறுகின்றனர். ஜோர்டான், பாகிஸ்தான் வங்காள தேசம் உட்பட பல முஸ்லிம் நாடுகளில் ' Triple Talaq' தடை செய்யப்பட்டுள்ளது.

அலகாபாத் தீர்ப்பை வரவேற்ற அகில இந்திய முஸ்லிம் பெண்கள் சங்க தலைவி ஹஸ்னா, ' முஸ்லிம் தனி நபர் சட்ட வாரியமும் இது போன்ற சட்டத்தை வெளியிட நாங்கள் முயலப் போகிறோம், என்கிறார்.

உலிமாக்களும், முஃப்திகளும் மறுக்கப்பட்ட பெண்ணின் உரிமைகளைச் சரிசெய்ய முன் வரவேண்டும் ' என்றார்.

" அனைத்து மதத்துக்கும் பொருந்தும் ஒரே விவாகரத்து சட்டம் ' வேண்டும் என்கிறார் சபனா ஆஸ்மி. இவர் தென் ஆப்பிரிக்கா தென்னாப்பிரிக்காவின் தந்தை (சபனா ஆஸ்மியின் தாத்தா வயதுடைய) நெல்சன் மாண்டேலா கன்னத்தில் முத்தமிட்டதை அடிப்படைவாதிகள் பெரிதுபடுத்துகின்றனர். அடிப்படைவாதம் மனிதனின் மூளையை மிருக மூளையாக மாற்றி விடுகிறது.

' திருமணம் ஓர் ஒப்பந்தம் போன்றது அதற்கு பெண்களின் சம்மதம் கட்டாயம் பெற வேண்டும். விவாகரத்து செய்யும் உரிமைகூட பெண்களுக்கு உண்டு. தனக்குக் கொடுக்கப்பட்ட
' மெகரை ' திருப்பிக் கொடுத்து விட்டு அவள் விவாகரத்து செய்ய முடியும். விவாகரத்துக்கான காரணத்தைக் கூட பெண் சொல்ல வேண்டியதில்லை. மகள், மனைவி, தாய் என்ற மூன்று பதவிகளை ஒரு பெண் வகிக்கிறாள். தந்தையின் சொத்தில் பிள்ளைக்குக் கிடைப்பதில் பாதி பங்கு இவளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

உண்டு. தந்தையும், கணவனும், பிள்ளையும் இவர்களைக் காப்பாற்ற கடமைப்பட்டவர்கள். சொத்துக்களை பெண் தன் இஷ்டப்படி உபயோகிக்க முடியும். ஒரு பெண்ணுக்கு சமைத்த உணவு, தைத்த உடைகள், வீடு ஆகியவற்றை அளிக்கக் கடமைப்பட்டவன் கணவன். அவளுக்கு மருத்துவ வசதியும் அளிக்க வேண்டும் " என்கிறது குரான். ஆனால் அடிப்படைவாதிகள் இவற்றையெல்லாம் வசதியாக ஓரம் கட்டி விடுகின்றனர்.

சபனா ஆஷ்மியை வாழ்த்திய கவிஞர் தமிழன்பனின் கவிதை கீழே :-

## முத்தத்துக்கு ஏது நிறம் ?

மண்டேலா கன்னத்தில்
சப்னா இட்ட முத்தம்
கண்ணன் கன்னத்தில்
இராதை இட்ட முத்தமல்ல
கால் நூற்றாண்டாய்ச்
சிறைக்குள் கிடந்த
கறுப்புச் சூரியனுக்குக்
காலமே — ஒரு
தாயாகித் தந்த பாசவிருது
அதை உதடுகள் பார்க்கும்
சரச உத்தியோகம் என்பது
பளிங்கில் களங்கம் படைக்கும்
பண்பாடு என்பேன்.
கூடாரம் போடுவதற்கு
நச்சுக் கலாச்சாரம் நட்டுவைத்த
முளைக் குச்சிகள் எல்லாம்
கரும்புக் கணுக்கள் !
காம்பில்லாமல் குழந்தைகள்
கண்ணில்
விரியும் பூக்களோ
வெடிகுண்டுத் திரிகள் !
புத்தி — இருட்டுக்குக்
குத்தகை போனால்
எதுவும் எப்படியும் தெரியும் !
இளவரசு சார்லஸ் கன்னத்தில்
எவளோ நடிகை இட்ட முத்தமும்
இதுவும் ஒன்றல்ல. அது
வெறியின் அவசரப் பிரசுரம் !
இது, தென்னாப்பிரிக்காவுக்குப்
போகமுடியாத
இந்தியா
அங்கு போன சப்னா வடிவில்
மண்டோலாவுக்கு அளித்த
ஆபரணம் !

— தமிழன்பன்



படிப்பகம்

www.padippakam.com

# சட்டங்களும், அமுலாக்கமும், ஓட்டைகளும், சட்ட மீறலும்.

" சட்டத்தின் வலைகள் சிறு குற்றவாளிகளைப் பிடிக்கும் விதத்தில் லாவகமாகப் பின்னப்பட்டுள்ளன". என்றான் கலீல் கிப்ரான்.

ராஜாராம் மோகன்ராய் காலத்திலிருந்து பெண் விடுதலைக்கான போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பெண்களின் பாதுகாப்புக்காக சில சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பல வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டு மூடி வைக்கப்பட்டதோடு சரி! சில சட்டங்களை அமுலாக்க பாதிக்கப் பட்ட பெண்கள் முன் வரும்போது, கணவர், மாமியார், நாத்தனாருடன் பெண்ணின் அப்பா, அம்மா கூட போலீஸ் ஸ்டேசன் வரை போனால் மானம் போய்விடும், குடும்ப கௌரவம் போய்விடும், பத்திரிக்கையில் செய்தி வந்து விடும்" என்று பெண்ணைப் பின் நோக்கி இழுக்க, பெண்ணுரிமை, சங்கத்தினரும், முற்போக்காளர்களும் முன்னோக்கி இழுக்க சில வழக்குகள் மட்டும் காவல் நிலையம் வரை வரும்.

அங்கு பெரும்பாலும்" இந்த சமுதாயத்தில் பெண் என்றால் கணவனுக்கு அடங்கித்தான் போக வேண்டும் அம்மா" என்று பஞ்சாயத்து பண்ணி அனுப்பி விடுவார்கள். " கோர்ட், கச்சேரி என்று போனால் வக்கீல் அசிங்கமான கேள்விகளை எல்லாம் கேட்டு மானபங்கப் படுத்துவார். கற்பழிப்பு வழக்கத்தில் அவர் கேட்கும் கேள்விகளோ மற்றொரு கற்பழிப்புக்குச் சமமாகும். இத்துடன் நிறுத்திக்கொள்ளலாம் " என்று காவல் நிலையத்தோடு திருப்பி அனுப்பி விடுவார்கள்.

சில வழக்குகள் காவல் நிலைய விசாரணை ஆண்டுக்கணக்கில் நடைபெற்றுகுற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இதில் பல வழக்குகள் Benefit of doubt, Technical flaw, Corrobaration இல்லை என்பன போன்ற பதங்களில் தடுக்கி விழுந்துவிடும்.

மிகச்சில வழக்குகளில் தண்டனை வழங்கப்படும். அதுவும் அப்பீலில் தள்ளுபடியாகும்.

கற்பழித்தவன் அதற்குள் பேட்டை ரௌடியாகி தலைவராகி– பதவி உயர்வு பெற்றிருப்பான்.

இப்போது பல்வேறு சட்டங்கள், அவற்றின் அமுலாக்கம், சில மாதிரி தீர்ப்புக்கள், மாதர்சங்க எதிர்ப்புக்கள் பற்றி பரிசீலிப்போம்.

## சட்டத்தின் வலைகள்.

### பெண்ணுரிமைக்கான போராட்டங்களும், சட்டங்களும்:

1826ல் ' சதி ஒழிப்புச் சட்டம் ' கொண்டு வரப்பட்டது. இதனை ராஜாராம் மோகன்ராயின் பெரும் போராட்டத்துக்குப் பின் வில்லியம் பெண்டிங் பிரபு கொண்டுவந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## ஒருதார மணம், கலப்புத் திருமண சட்டங்கள் :

ஒருதார மணச்சட்டம், கலப்புத் திருமண சட்டம் ஆகியவை 1872 ல் கொண்டுவரப்பட்டன.

1926 ல் பெண்கள் திருமண வயது 14 என நிர்ணயிக்கப்பட்டது. வைத்தியக் கல்லூரியில் 1875—ல் நான்கு பெண்கள் படிக்க அனுமதிக்கப் பட்டனர். அவ்வாறு வாய்ப்புப் பெற்றவர்களுள் ஒருவர்தான் விஞ்ஞானி ஜெகதீச சந்திர போஸின் மனைவி ஆவார்.

சென்னை மாகாண பெண்களுக்கு 1926—ஆம் ஆண்டு முதல் வாக்குரிமை வந்தது. அவர்களும் போட்டியிடலாம் என்று தெரிவிக்கப் பட்டது.

விபச்சாரத் தடை சட்டம் 1956—ல் கொண்டு வரப்பட்டது.

வரதட்சணைத் தடைச் சட்டம் 1961—ல் நிறைவேற்றப்பட்டது.

கணவனுக்கு விட்டுக் கொடுத்து சரிகட்டி செல்லும்படி இந்த நீதி மன்றங்கள் உபதேசிக்கின்றன.

21 வ்யதான பெண் அவளுக்கு விருப்பமான கணவனைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் உரிமை பெறுகிறாள்.

## இந்தியன் பீனல்கோடு பிரிவு 509

ஒரு பெண்ணின் கற்புக்கு களங்கம் ஏற்படும் படியாக பேசினாலோ செய்கை காட்டினாலோ, அவளுடைய தனிமையில் பிரவேசித்தாலோ ஓராண்டு கடுங்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்.

## அரசியல் சட்டப் பிரிவு. 14

சட்டத்தின் முன் அனைவரும் சமம்

அதாவது ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி, என்பது அரசியல் சட்டத்தின் முன் செல்லத்தக்கதல்ல.

## அரசியல் சட்ட பிரிவு 15

15 (1) மதம், இனம், சாதி, பால் (Sex) ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வித பாகுபாடும் கூடாது. 15(2)இப்பிரிவு பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக சிறப்பு விதிகள் ஏற்படுத்துவதைத் தடை செய்யவில்லை.

## பிரிவு 25 (I)

"பொது அமைதி, நன்னடத்தை, உடல் நலம், ஆகியவற்றை பாதிக்காமல் அனைவருக்கும் மனசாட்சிப்படி நடப்பதற்கும், மதத்தை சுதந்திரமாக எடுத்துச் சொல்லவும், நடைமுறைப் படுத்தவும், பிரச்சாரம் செய்யவும் உரிமை உண்டு." இதனால் மத அடிப்படையில் பெண்ணுரிமை சிலுவையில் அறையப் படுகின்றது.

இந்து முஸ்லீம், கிறிஸ்துவர், ப்பார்ஸி ஆகியோருக்கு தனித்தனி சட்டங்கள் உள்ளன. இவற்றில் பிரிவு 19 (1) ல் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் பல ஷரத்துக்கள் உள்ளன.

இதெல்லாம் டாக்டர் அம்பேத்கார் கொண்டுவந்த சில திருத்தங்கள் ஏற்கப்படாததால் ஏற்பட்ட விளைவுகளே.



படிப்பகம்

www.padippakam.com

## மறுமணம்.

பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கும் சட்டம் 1856 ல் நிறைவேறியவுடன், முதல் மறுமணம் கல்கத்தாவில் 7.12.1356 – ல் நடைபெற்றது, மறுமணம் செய்தவர் காளிமதிதேவி என்பவர்.

## சட்டப்பிரிவு.

அரசியல் சட்டத்தின் வழிகாட்டி நெறிகளில் எல்லாருக்கும் பொதுவான சட்டங்களை உருவாக்க அரசு முயலவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## மரண வாக்குமூலம்

டில்லியில் சன்னிக்கபூர் என்பவர் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தப்பட்டார். மூன்று மரண வாக்குமூலங்கள் கொடுத்தார்.

மூன்றையும் நீதிபதி கீழ்கண்ட காரணங்களால் தள்ளுபடி செய்தார்.

1. காயமடைந்தவர் வாக்கு மூலம் கொடுக்கும் அளவுக்கு தகுதியான உடல் நிலையில் இருக்கிறாரா என்று மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் முன்பே மரண வாக்கு மூலம் பெற்றுள்ளார் டாக்டர்.

2. காவல் துறையினர் அரசிடமிருந்து விருது வாங்கும் எண்ணத்தில் இந்த வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

3. சன்னி கபூர் வலி தாங்க முடியாமல் அழுதுகொண்டிருந்தார். அந்த நிலையில் அவர் மரண வாக்குமூலம் கொடுத்திருக்க முடியாது.

இத்தனைக்கும் மூன்று வாக்கு மூலங்களிலும் கணவர் பெயரை சரியாக சொல்லியிருந்தார் சன்னி கபூர்.

## அம்பேத்கார் ராஜினாமா

பெண் அவள் விரும்பும் எந்த ஜாதியிலும், எந்த மதத்திலும் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று கூறும் இந்து கோட்பில் அரசியல் நிர்ணய சபையில் தோல்வியுற்றது. ஆகையால் அம்பேத்கார் அதிலிருந்து ராஜினாமா செய்தார்.

பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் பல சட்டப் பிரிவுகள் பெரும் போராட்டங்களுக்குப் பின் சேர்க்கப்பட்டுள்ளன அவற்றில் சில :-

## இந்தியன் பீனல் கோட் பிரிவு 375

ஒரு பெண்ணின் விருப்பமில்லாமலும், அனுமதி இல்லாமலும் அச்சுறுத்தியும் கணவரல்லாத வேறு ஒருவரை திருமணம் செய்துள்ளதாக ஏமாற்றியும் புத்தி சுவயதீனமில்லாத பெண்ணை அல்லது மயக்க நிலையிலுள்ள பெண்ணை அல்லது 16 வயதுக்குட்பட்ட பெண்ணை புணருவது சட்டப்படி குற்றமாகும்.

## பிரிவு 376 A

மனைவியின் சம்மதமின்றி கணவனே புணர்ந்தாலும் சட்டப்படி குற்றம்

## பிரிவு 493

ஒரு பெண்ணை கணவரில்லாத ஒரு நபர் " நான் தான் " சட்ட பூர்வமான கணவர் என்று கூறி ஏமாற்றி புணர்வது சட்டப்படி குற்றமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## பிரிவு 495

ஏற்கெனவே நடந்த திருமணத்தை மறைத்து பொய் சொல்லி மீண்டும் திருமணம் செயவது குற்றமாகும்.

## பிரிவு 496

மற்றொருவரின் மனைவியை அந்த நபரின் அனுமதியின்றி புணர்ந்தாலும் குற்றமாகும்.

## பிரிவு 498

வேறொருவரின் மனைவியை தவறான நோக்குடன் தன் பிடியில் வைத்திருக்கும் எந்த நபரும் குற்றம் செய்தவறாகிறார்.

## பிரிவு 498 A

கணவரோ அல்லது அவரது உறவினரோ மனைவியைக் கொடுமைப் படுத்துவது தண்டனைக் குரிய குற்றமாகும்.

## சட்டமும், அமுலாக்கமும்

உடன் கட்டை, பால்ய விவாகம், வரதட்சணை ஆகியவற்றைத் தடைசெய்யும் சட்டங்கள் இருந்தாலும் பெண்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## மதுரா சம்பவம்

பம்பாய் மாநிலம் மதுரா காவல் நிலையத்தில் நடந்த சம்பவம் பிரசித்தி பெற்றது. ஒரு சிறுமி ஒரு மாணவனைக் காதலித்தாள். இதனை எதிர்த்த அவளுடைய சகோதரன் அந்த மாணவன் மீது மதுரா காவல் நிலையத்தில் புகார் செய்தான். 26.3.1972 அன்று போலீசார் அச் சிறுமியைக் கைது செய்தனர். சப்இன்ஸ்பெக்டர் கன்பட் மற்றும் போச் லீஸ்காரர் துக்காராம் ஆகியோர் அவளை ஸ்டேசனிலேயே கதவுகளை மூடி விட்டு வாயில் துணியை திணித்து கற்பழித்தனர்.

தகவலறிந்து பொதுமக்கள் தெருவில் இறங்கி போராடினர். வேறு வழியின்றி போலீசார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. செசன்ஸ்கோர்ட் குற்றவாளிகளை விடுதலை செய்தது. அப்பீலில் உயர்நீதி மன்றம் போலீசாருக்கு தண்டனை வழங்கியது. போலீசார் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தனர். சுப்ரீம் கோர்ட் சொன்ன காரணம் விந்தையானது.

அவள் கற்பழிக்கப்படும் போது போலீஸ்காரர்களை எதிர்த்து தீவிரமாக போராட வில்லை. அதனால் அவள் உடலில் காயம் எதுவும் ஏற்படவில்லை. மேலும் அவள் சத்தம்போட்டு உதவி கோரியிருக்கலாம். அப்படியும் செய்யவில்லை.

இது பற்றி பம்பாயின் நான்கு பிரபல வழக்கறிஞர்கள் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிக்குக் கீழ்க் கண்டவாறு எழுதினர்.

"திடகாத்தமான போலீசை எதிர்த்து 16 வயது சிறுமி எப்படி போராடியிருக்க முடியும்"? கதவுகள் பூட்டப்பட்டு, வாய்துணியால் அடைக்கப்பட்டபின் அவள் சத்தம் போட்டு எப்படி கூட்டத்தைக் கூட்டியிருக்க முடியும்?"



படிப்பகம்

www.padippakam.com

## சகஜம் :

பீகார், உத்ரபிரதேசம், மத்தியப்பிரதேசம், ஆகிய மாநிலங்களில் போலீசார் பெண்களை விசாரணைக்கு என்று அழைத்துச் சென்று கற்பழிப்பது சகஜம்.

மத்திய பிரதேசத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் கீழ்க்கண்ட இரகசிய சுற்றறிக்கையை போலீசாருக்கு அனுப்பினார்.

" சட்டசமை நடந்து கொண்டிருப்பதால் எந்த போலீசாரும் கற்பழிப்பில் ஈடுபடக்கூடாது. அது போலீஸ் துறை பெயரைக் கெடுத்துவிடும் "

சட்டசபை கூட்டத் தொடர் முடிந்த பின் கற்ப்ழிக்கலாம் என்று அர்த்தமா?

## இன்று வேண்டாம் விசாரணை ; நாளை :

கேரவான் பத்திரிக்கையில் வந்த செய்தி.

பம்பாயில் ஒரு சிறுமியை ஒரு போலீஸ்காரர் கற்பழித்து விட்டார்.

பொதுமக்கள் விசாரணைகோரி போராடினர். அச்சிறுமியை சப்இன்ஸ்பெக்டர் விசாரித்தார். பின்பு இன்ஸ்பெக்டரும், டி.எஸ்.பியும் விசாரித்தனர். கடைசியாக எஸ் பி. விசாரணைக்கு அழைப்பதாக சிறுமியிடம் சொன்னார்கள். சிறுமி கூறினாள்.

" எஸ்.ஐ. இன்ஸ்பெக்டர்; டி எஸ். பி. ஆகியோர் விசாரணையில் ஏற்பட்ட புண் ஆற குறைந்தது ஒரு வாரம் ஆகும். ஆகவே எஸ்.பி பிரச்சனையை ஒரு வாரம் கழித்து வைத்துக் கொள்ளலாம், சார்".

காவல் நிலையங்கள் அப்பாவி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இல்லையென்றால் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப் பட்ட அடிப்படைக் காரணம் தோல்வி அடைந்து விடும். பெண்களுக்கும், கல்வி அறிவற்றவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பணியைக் காவல் நிலையங்கள் செய்யவில்லை என்றால் அப்படி ஒரு துணை இருப்பதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

## பெண்ணுக்கு சம நீதியில்லை.

விடுதலைப் போரின் போது காந்தி, நேரு இருவருமே பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தநர். எனினும் சமூக சீர் திருத்தம் பற்றின நேருவின் கருத்துக்கும், காந்தியின் கருத்துக்கும் இடையே பெரும் வேறுபாடு இருந்தது.

ஆங்கில கல்வி பயின்ற தலைவர்கள் சுதந்தரத்திற்குப் பின் பதவியேற்று பெண்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்க சட்டங்களை இயற்ற வேண்டுமென விரும்பினர். இதன் முக்கிய நபர் நேரு இந்து சட்டம், திருமணம், வாரிசு, தத்தெடுப்பு மற்றும் ஜீவனாம்சம் பற்றிய முக்கிய மாறுதல்களை ஏற்படுத்த முயன்றனர். இதை ஒரு முற்போக்கு சட்டம் என்று முற்போக்காளர்களும், பெண்ணுரிமை இயக்கத்தினரும் வர வேற்கின்றனர். இது சுதந்தர இந்தியாவின் பெண் சமத்துவம் பற்றிய பெரும் விளம்பரமாக்கப் பட்டது. ஆனால் எதிர்ப்பாளர்கள் அச்சட்டத்தின் வீரியத்தைக் குறைத்து உபயோகமற்ற தாக்கி விட்டனர்.

1970 – களில் பல பெண்கள் மீது ஸ்டவ் வெடித்தது. பல பெண்கள் தற்கொலை செய்ததாகப் பதிவு செய்யப்பட்டது. பல பெண்கள் கணவர்களால் கொளுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வந்தன. இதுபோன்ற பல சம்பவங்களில் வரதட்சணை பாக்கி முக்கிய காரணமாக இருந்ததால் பெண்ணின் பெற்றோர்களும் அமைதிகாத்தனர் என்பது வியப்பிற்குரிய வேதனையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு பெண் கணவனால் கைவிடப்பட்ட போது கீழ்க்கண்ட சிக்கல்கள் எழுகின்றன.

1. கணவர் பெண்ணைச் சித்திரவதை செய்து குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார். உடனே மறுமணமும் செய்துகொண்டார். அவளுடைய ஏழைப் பெற்றோர்களால் அவளுக்கு உதவியில்லை சட்டபூர்வமாக அவள் போதுமான ஜீவனாம்சம் பெற செலவு செய்ய பணம் இல்லை.
2. ஜவனாம்சம் சம்மந்தமாக கணவனுக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ்களை அவன் வாங்க மறுக்கிறான். அவன் ' பாப்பா ' என்று சான்று பெற்று சமர்ப்பிக்கிறான்.
3. கணவன் மறுமணம் செய்ததை நிரூபிக்கத் தேவையான ஆவணங்களை அவளால் தயார்செய்ய முடிவதில்லை.
4. அவள் கொடுமைப் படுத்தப் பட்டது நான்கு சுவர்களுக்குள்ளே. இந்நிலையில் அவள் கொடுமைப்படுத்தப் பட்டதற்கு சாட்சியங்களையும், ஆவணங்களையும் அவளால் தயார் செய்ய இயலாது.
5. ஜீவனாம்சம் கோரும் மனுவில் அவளுடைய முன்னாள் கணவனின் உண்மையான வருமானம் பற்றிய சான்றுகளை அவளால் பெற இயலாது.

அவள் I:P.C. 125 பிரிவின் படி ஜீவனாம்சம் கேட்டு விண்ணப்பிக்க முடியுமே தவிர, ஒரு மனைவிக்கு உரிமையுடைய பங்கைக் கேட்டுப் பெற முடியாது. ஒரு நீதிபதி அதிகார வரம்பின்படி ரூ. 500/- மட்டுமே ஜீவனாம்சமாக வழங்கமுடியும் பெரும்பாலும் இதற்குக் குறைவாகவே வழங்கப்படுகிறது.

## உச்ச நீதி மன்றத்தின் முன் காதல் ஜோடி.

விப்பின் கோஜியா (29) ஜஸ்ப்ரித் கவுர் (23) ஜோடி காதலித்தார்கள். இதை எதிர்த்தவர் சாதாரண ஆள் அல்ல. ஜஸ்ப்ரித் கவுரின் தந்தையும், ஓசியார்பூர் மாவட்ட மாஜிட்ரேட் (கலெக்டர்) டுமான் ஜி.எல். பெயின்ஸ் தான் அந்த ஆசாமி. இவர்கள் திருமணம் 10.9.93 அன்று நடந்தது கவுர் கணவன்குடும்பத்துக்குப் பாதுகாப்பு கோரி உச்ச நீதி மன்றத்தை அணுகினார். உச்சநீதி மன்றம் இவ்வழக்கில் அதிக அக்கறை காட்டி பாதுகாப்புக்கு உத்தரவிட்டது. ஆனால் திடீரென்று அந்த ஜோடி காணாமல் போய்விட்டது. கவுரின் தந்தையான் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் தன் அதிகார பலத்தைப் பிரயோகித்து ஜோடியைப் பிரிக்க முயற்சிக்கிறார் என்ற சந்தேகம் எழுந்தது. உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி மேன்மை தங்கிய எம்.என். வெங்கடாசலையா கவனத்துக்கு இச் சம்பவம் வந்தபோது தன் சொந்த பேரப்பிள்ளைகளுக்கு நேர்ந்த துன்பமாகக் கருதி கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்தார் " பஞ்சாப் மாறும் டில்லி போலீஸ் உடனடியாக அவர்களைக் கண்டு பிடித்து நீதி மன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும் " என்றார்.

ஆனால் ஆஜர்படுத்தப்படவில்லை.

" எங்கே அந்தப் பிள்ளைகள் ?" என்று கேட்டார் தலைமை நீதிபதி. கையைப் பிசைந்து கொண்டு நின்றது போலீஸ். ஆனால் தற்செயலாக தாங்களாகவே அந்த ஜோடி தலைமை நீதிபதி முன்பு ஆஜரானது. அந்த நாள் 23.9.1993.



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதாரம், ஜாதி, மதம், மொழி போன்ற இந்திய மனங்களில் ஆழமாகப் பின்னியுள்ள மாயவலை காதல் கொண்ட இளம் உள்ளங்களைச் சித்திரவதை செய்கிறது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் சண்டிகார் உயர் நீதி மன்றநீதிபதி யொருவரின் மகள் அவர் வீட்டுப் பண்ணையில் வேலை செய்த மாச் ணவனைக் காதலித்தாள். இதைக் கேள்விப்பட்ட நீதிபதி வெகுண்டார். மாணவனை சரியாக கவனிக்கும்படி பெரிய போலீஸ் அதிகாரிகளைக் கோரினார். எனினும் மகள் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டவே விவகாரம் திருமணத்தில் இனிதே முடிந்தது.

அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தியைச் சேர்ந்த35 வயதான ஜீனத் பாத்திமா ரஷீத் கவுகாத்தி உயர் நீதி மன்றத்தில் அவருடைய கணவர் அறிவித்த ' தலாக ' செல்லாது என்ற தீர்ப்பினைப் பெற்றார்.

ஜீனத் ஒரு பள்ளி ஆசிரியை. கணவர் முகமது இக்பால் அன்வர் வனத்துறை அலுவலர்.

மத்திய அரசு வெளியிட்டுள்ள ஓர் ஆராய்ச்சியின் கணிப்புக்களைப் பார்ப்போம்.

இந்தியாவில் 5 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். 26 நிமிடத்திற்கொருமுறை இதையொட்டிய ஒரு முயற்சி நடைபெறுகிறது. 43 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் அபகரிக்கப்படுகிறாள். 42 நிமிடங்களுக்கொரு முறை ஒரு பெண் வரதட்சணை அரக்கனால் பலி வாங்கப்படுகிறாள். 51 நிமிடங்களுக்கொருமுறை பெண்களைக் கீழ்த்தரமான நோக்கத்துடன் கிண்டல் செய்வது என்கிற பேரில் (Ere teasing) போலீசாரின் குறிப்பேடுகளில் பதிவாகி உள்ளது. 32 நிமிடத்திற்கொரு முறை எங்காவது ஒரு பெண் எந்த விதத்திலாவது சித்திரவதை செய்யப்படுகிறாள்.

### கற்பழிப்பு வழக்குகள் விபரம்.

| ஆண்டு | | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1986 | — | 7952 |
| 1987 | — | 8559 |
| 1988 | — | 9099 |
| 1989 | — | 9752 |
| 1990 | — | 10068 |
| 1991 | — | 10410 |

பரவாயில்லை இதிலாவது நாடு கணிசமாக முன்னேறியுள்ளது.

கர்னாடக மாநிலத்தில் ராஜு மற்றும் கிருஷ்னா ஆகியோர் ஒரு நர்சை கத்தி முனையில் கற்பழித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டதன் பேரில் கர்னாடக உயர் நீதிமன்றம் 7 ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்தது.

குற்றவாளிகள் உச்ச நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

" குற்றவாளிகல் வயது 21 மற்றும் 24 ஆக இருப்பதாலும் ஏற்கனவே அவர்கள் புகழ் பாதிக்கப்பட்டுள்ளதாலும், மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாலும் தண்டனையை முன்றாண்டுகளாகக் குறைக்கிறோம்" என்றது உச்ச நீதி மன்றம்.

இது சம்மந்தமான சந்தேகங்கள் :-

1. கற்பழிப்பில் ஈடுபடுபவர் 21 வயது 24 வயது இல்லாமல் 81 வயது 84 வயதா இருக்கும்?
2. கற்பழிப்பு என்ற கொடுமையால் ஏற்பட்ட களங்கத்துக்கு சலுகையா?
3. கற்பழிப்பால் ஏற்பட்ட மன நிலை பாதிப்புக்கு சலுகையா?
4. கொலை கேசிலும் இது போன்ற சலுகைகள் உண்டா?
5. இது போன்ற சலுகைகள் நியாயம் என்றாள் சட்டமும் நீதி மன்றமும் தேவையில்லையே !

## பெண்களைக் கேலி செய்தால் மரண தண்டனை.

பெண்களைக் கேலி செய்தால் உடனடியாக மரணதண்டனை விதிக்க பங்களாதேஷ் நாடாளுமன்றம் சட்டம் நிறைவேற்றியிருக்கிறது.

ஒரு பெண்ணை கிண்டல் செய்ததற்காக, தில்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் புதனன்று மாலை கைது செய்யப்பட்டார். அந்தப் பெண் வேறு யாருமல்ல. சாதாரண உடையில் இருந்த பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர்தான்.

பெண்களைக் கேலி செய்யும் போது அல்லது நடுத் தெருவில் ஒரு கேடி ஒரு அபலைப் பெண்ணை அடித்து கொடுமைப் படுத்தும்போது சுற்றியுள்ளவர்கள் கொஞ்சம் கூட சமூக உணர்வில்லாமல், அந்தக் கொடுமையைத் தடுக்க முயற்சிக்காமல் வெறும் மாமிசப் பிண்டங்களாக நிற்கின்றனர். இந்த நீடிய பொறுமை தான் இந்நாட்டில் புது புது குற்றவாளிகளை உருவாக்குகிறது. கேடிகளும், பேட்டை ரௌடிகளும் பெரிய மனிதர்களாக உருவாகிறார்கள். தீமையைத் துணிந்து நின்று எதிர்க்கும் மனோபாவம் மக்களுக்கு வர வேண்டும்.

தர்மபுரி மாவட்டம், தளிகாவல் நிலையத்தில் கல்பனா சுமதி என்ற ஆசிரியை காவல் துறையைச் சேர்ந்த சிலரால் கற்பழிக்கப்பட்ட வழக்கில் கிருஷ்னகிரி சார்பு நீதி மன்ற நீதிபதி இன்ஸ்பெக்டர் மற்றும் 3 போலீசாருக்கு 8 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தார்.

மன நோயால் பாதிக்கப் பட்ட பெண்களின் நிலைமை மேலும் சிக்கலானது. அவர்கள் ஒரு மிட்டாய்க்கு தங்களை இழந்து விடுகிறார்கள். திருமணத்துக்கு முன்பு கருவுறுவாவதால் ஏற்படும் சிக்கல்கள் பற்றி தெரியாமலேயே இவர்கள் விளையாட்டாகவே ஏமாந்து விடுகிறார்கள்.

மன நோய்யால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்கள் பெற்றோரிடமிருந்து எழுத்து மூலமான ஒப்புதல் பெற்று கருச்சிதைவு செய்ய The Medical Examination of regnancy Act 971 வகை செய்தது.

வெள்ளையன் காலத்தில் கொண்டு வரப்பட்ட Lunacy Act 1912, மன நோயாளி யார் என்பதை விளக்குகிறது.

Hindu Law, Special Marriage Act, The Indian Divorse Act' ஆகியவை Lunatic அல்லது an idiot ஐ திருமணம் செய்வதைத் தடை செய்கிறது. மண நோயாளியான ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்வதை இச் சட்டங்கள் தடை செய்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள காமுகர்கள் பல விநோதமான குரூரமான வழிமுறைகளைக் கையாளுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு வங்காளத்தில் ஓர் இளம்பெண் கற்பழிக்கப்பட்டாள். கற்பழித்தவன் சாட்சி மற்றும் தடயத்தை அழிப்பதற்காக அவளுடைய கண்களைப் பிடுங்கி விட்டான். நாக்கை வெட்டி விட்டான். கைகளையு ம் வெட்டி விட்டான். இதனால் கற்பழித்தவனைக் கண் ஜாடையால் காட்டமுடியாது. எழுதிக் காண்பிக்கவும் முடியாது. சொல்லவும் முடியாது. இதற்கு சட்ட ரீதியான பரிகாரம் என்ன?

அவளுக்கு காது மட்டும் கேட்கிறது. குற்றவாளியை எதிரில் கொண்டு வந்து நிறுத்தி பேச வைக்கலாம். அவளும், ' அவன் தான் கற்பழித்தான் ' என்று தலையை ஆட்டலாம். ஆனால் எதிர்தரப்பு வக்கீல் கேட்கும் கேள்விகளுக்கு அவளால் பதில் சொல்ல முடியு மா? கேஸ் நிற்குமா?

1977 – இல் அம்சா என்ற பெண் தூங்கிக் கொண்டிருந்தபோது அவருடைய மாமியார் அவரைக் கொளுத்தி விட்டார். ' Dying Declaration ' – இல் ' உன் கணவர் தீப்பெட்டியில் குச்சியை உரசியதை நீ பார்த்தாயா?' என்று கேட்கப்பட்டது.

" தூங்கிக் கொண்டிருந்த நான் எப்படி பார்த்திருக்க முடியும் " என்று அவள் கேட்டாள். நீதி மன்றம் இதனை ஏற்கவில்லை. 'Dying-Declaration தள்ளுபடி செய்யப்பட்டது.

விம்லாமீது அவரது கணவர் அமிலத்தை ஊற்றினார். வாக்கு மூலம் வாங்கிய போலீஸ் அதிகாரி விம்லாவின் கணவர் பெயரை ' Hameed ' என்பதற்குப் பதிலாக 'Vaheed' என்று டைப் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதனால் வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது.

சுதா மீது அவரது கணவரும், மாமியாரும் தீயிட்டனர். சுதா இறக்கு முன் இதனை பலரிடம் சொன்னாள். ஆனால் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ' Dying Declaration ' உண்மைக்குப் புறம்பாக இருந்தது. இதனைப் புரிந்து கொண்ட செசன்ஸ் நீதிபதி, ' சுதாவின் கொலை முன் கூட்டியே திட்டமிடப் பட்டது.' Dying Declaration ' பெறுவதில் மோசடி நடந்துள்ளது, வற்புறுத்தலின் பேரில் பெறப்பட்டுள்ளது. சூழ்நிலை சாட்சிகள் அனைத்தும் குற்றம் நடந்ததை நிரூபிக்கின்றன " என்று தீர்ப்பளித்தார்.

ஆனால் மேல் முறையீட்டில் உயர் நீதி மன்றம் இந்த தீர்ப்பை ரத்து செய்ததுடன் செசன்ஸ் கோர்ட் தீர்ப்பை கண்டித்து விமர்சனமும் செய்தது.

சமீபத்திய உச்ச நீதி மன்ற தீர்ப்பு இதில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது.

மீசலா ராமகிருஷ்ணன் என்பவர் சம்மந்தப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் தலை அசைப்பு மற்றும் சைகை அடிப்படையில் ஒரு Dying Declaration பெறப்பட்டது. ராமக்கிருஷ்ணன் அவருடைய மனைவியைக் கொளுத்தி விட்டார். இச் சமுதாயத்தில் ஒரு பெண்துணிந்து கணவன் தன்னைக் கொளுத்தி விட்டதாக வாக்குமூலம் கொடுப்பதே அபூர்வமான செயல்.

தலை அசைப்பு மற்றும் சைகை மூலம் அளிக்கப்பட்ட சாட்சியம் செல்லுபடியாகும் என்றது உட்ச நீதி மன்றம்.

www.padippakam.com

சில ஆண்டுகளுக்கு முன்பு தெற்கு டில்லி மருத்துவமனை ஒன்றில் ஒரு பெண்கள் நல அமைப்பு ஒரு சர்வே நடத்தியது தீ யினால் பாதிக்கப்பபட்ட 100 பெண்களை விசாரித்ததில் 60 பெண்கள் பால் கொதிக்க வைக்கும் போது சேலையில் தீ பிடித்துக் கொண்டதாகக் கூறினார். அதாவது மரணத்திலும் ' பதிபக்தி ' என்பது அவர்களை விடவில்லை.

மேலும் கைநாட்டு வைக்கும் பெண்களின் ' Dying Declaration ' என்பது வெறும் மாயை. அவர்கள் சுய நினைவற்றிருக்கும் போது அல்லது இறந்த பின்னரும் கூட கை நாட்டு வாங்கி விட முடியும்.

அரியானா கிராமம் ஒன்றில் சுமன் ராணி என்பவர் 1984-இல் மூன்று பேரால் பாலியல் வன் முறைக்கு உட்படுத்தப்பட்டார் உயர் நீதி மன்றம் அவர்களில் ஒருவரை விடுதலை செய்தது. மற்ற இருவருக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

" இந்த வழக்கின் விநோதமான விவரங்கள், சந்தர்ப்பசூழ் நிலை, பாதிக்கப்பட்டவரின் நடத்தை " அடிப்படையில் தண்டனை காலத்தை 5 ஆண்டுகளாக சுப்ரீம் கோர்ட் குறைத்தது.

சம்மந்தப்பட்டவரின் நடத்தை என்பதன் விளக்கம் தான் என்ன?

கஜரௌலா வழக்கில் அரசு டாக்டர் மீரா சிங்கை எதிர்த்து அனைத்திந்திய ஜனநாயக மாதர்சங்கம் கிரிமினல் ரிட் மனு தாக்கல் செய்யும் அளவுக்கு அறிக்கைகளில் முரண்பாடுகள் இருந்தன. பிறப்புறுப்புப் படலம் கிழிந்திருப்பதால் ' உடலுறவுக்குப் பழக்கமாணவள் ' என்று ஒரு பெண்ணையும், ' கிழிபடாததால்' பாலியல் வன்முறைக்கு ஆளாகாதவர் என்று இன்னொரு பெண்ணையும் டாக்டர் குறிப்பிடுவதில் அவருடைய பொறுப்பற்ற தன்மை வெளிப்படுகிறது என்கிறது மனு.

" பாலியல் வன்முறை நடக்கவில்லை என்று மருத்துவப் பரிசோதனை எந்த விதத்திலும் நீ ரூபிக்க முடியாது. ஆன் விந்து இல்லையென்றாலும் பெண்ணின் பிறப்புறுப்பு கிழிபடா விட்டாலும் பாச் லியல் வன்முறை நடந்திருக்கலாம் நடக்கின்ற அத்தனை கற்பழிப்புக்களிலும் விந்து வந்தருக்க வேண்டிய அவசியமும் இல்லை. பெண்ணுறுப்பு காயம் பட்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை பல கற்பழிப்புக்கள் அவசர கோலத்தில் இந்த இரண்டு நிகழ்வுகளும் இல்லாமலும் நடக்கலாம்.

பாலியல் வன்முறைக்கும், பெண்ணின் நடத்தைக்கும் ஒழுக்கத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டும். பாலியல் வன் முறை என்பது பெண்ணின் உடல மீதான தாக்குதல் மட்டுமல்ல. பெண்ணின், உடல், மனம், ஆன்மா மீது பெண்ணின் உரிமையை ஒரேயடியாக மறுக்கும் தாக்குதலாகும்.

முத்தாண்டிகுப்பத்தில் வசந்தா என்ற பெண் காவல் நிலையத்தில் கற்பழித்து கொலை செய்யப்பட்ட வழக்கில் சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம் ஏட்டு சுந்தரமூர்த்தி, காவலர்கள் ரகமதுல்லா, குணசேகரன், காசிராஜன் ஆகியோர் புலனாய்வுப் பிரிவு ஐ.ஜி. அலுவலகத்தில் சரணடைந்தார்கள்.

ஆஸ்திரேலியாவில் சில தீர்ப்புகள் உலகின் கவனத்தை ஈர்த்தன.

ஒரு வழக்கில் ' உடலுறவு கொள்வதற்காக மனைவியுடன் சற்று முரட்டுத்தனமாக கணவன் நடந்து கொண்டதில் தவறில்லை ' என்று உச்ச நீதிமன்ற நீதிபதி டெரகபோலன் தீர்ப்பளித்தார்.

ஒரு மாதம் கழித்து ஒன்பது வயது சிறுமியை 75 வயது கிழவர் கற்பழித்த வழக்கில் நீதிபதி ஒரில்லி தண்டனை வழங்குவதற்குப் பதிலாக



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நன்னடத்தை பாண்ட் எழுதி வாங்கிக் கொண்டு விடுதலை செய்தார். " ஒன்பது வயது பெண் என்பதால் அவளுக்கு நீண்ட கால பாதிப்பு ஏதும் ஏற்படாது " என்றார் அவர்.

இந்த இரு தீர்ப்புக்களுக்குக் கடுமையான எதிர்ப்பு வந்ததால் நீதிபதி போலன் பின்பு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

## டெல்லி நீதிபதியியன் புரட்சிகர தீர்ப்பு 1

தேதிய மகளிர் கமிஷனின் செயற்பாடு பற்றி டெல்லியில் உள்ள பெண்ணுரிமை இயக்கத்தினர் மனம் உடைந்து போயிருக்கும் வேளையில் டெல்லியிலுள்ள கூடுதல் செசன்சு நீதிபதி ஒ.பி. துவிவேதி வழங்கிய தீர்ப்பு ஒன்று மிக மிகப் பெருமையுடன் பெண்ணுரிமை இயக்கங்களால் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஒரளவு நாடெங்கும் பரபரப்பாக பேசப்பட்ட ஒரு நிகழ்சியைப் பற்றிய வழக்குத்தான். 4 வருடங்களுக்கு முன் டெல்லியில் பட்டப்பகலில் ஓடும் டவுண் பஸ் ஒன்றில் கல்லூரி மாணவி ஒருவர் கற்பழிக்கப்படவிருந்ததே இந்த நிகழ்ச்சி. கற்பழிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் வேறு யாரும் இல்லை டெல்லி போக்குவரத்துக் கழகம் எனப்படும் அரசு போக்குவரத்து நிறுவனத்தின் பணியாளர்கள் தாம். அந்த பெண் டெல்லி இந்திரப்பிரஸ்தா கல்லூரியில் பயின்று வந்த மாணவி பெயர் – மோனிஷா வர்மாய அவர் துணிந்து நின்று மூன்று முரடர்களை எதிர்த்துப் போராடி தம் கற்பைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல் அந்த மூன்று பேரையும் கையு செய்யப்பட்வும், வழக்கு தொடரப்படவும் விடாமுயற்சியுடன் பாடுபட்டார். மாணவிகளும் அவருக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தினார்கள். வழக்கில் தீர்ப்பு கூறிய நீதிபதி ஒரு கருத்தை வலியுறுத்தினார் அதாவது " குற்றம் சாட்டப்பட்ட மூவரும் பொதுப்பணியின் பொறுப்பில் உள்ளவர்கள், தங்கள் வாகனங்களில் பயணம் செய்யும் பெண் பயணிகளின் கற்புக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டியவர்கள் இவர்களே கற்பழிப்பில் ஈடுபடுவது எப்படி? வேலியே பயிரை மேய்வதா? எனவே இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மற்ற பொதுச் சேவைப் பணியாளர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையவேண்டும் என்பதால் மூவருக்கும் தலா 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன் " என்று தீர்ப்பு கூறியுள்ளார்.

சம்பவம் நடந்த நான்கே ஆண்டுகளுக்குள் தீர்ப்பு பெறப்பட்டிருப்பதும் ஒரு சாதனை என்றே கருதப்படுகிறது. இப்படிப்பட்ட விரைவுடன் தீர்ப்பு கூறப்பட்டால் – இப்படிப்பட்ட படிப்பினை நல்கும் கடுந்தண்டனைகள் ஒவ்வொரு கற்பழிப்பு வழக்கிலும் குறிப்பாக, காவல் நிலைய கற்பழிப்பு வழக்கிலும் வழங்கப்படுமானால் இத்தகைய குற்றம் நிகழ்வது . நிச்சயம் குறைந்துவிடும் என்று தேசிய மகளிர் கமிஷன் வட்டாரங்களில் கூறப்படுகிறது. இதோடு மகளிர் கமிஷன் இன்னொன்றையும் எடுத்துக்கூறி வருகிறது. டெல்லி வழக்கில் தண்டனையின் அளவு 10 வருட கடுங்காவல் என்பது திருப்திகரமான தண்டனைதான். ஆனால் தண்டனை வழங்கப்படுவதற்கு 4 வருடம் ஆகிவிட்டது என்பது அதிக காலதாமதம் என்று கூறவேண்டும். சம்பவம் நடந்த ஆறு மாதங்களுக்குள்ளாக புலன் விசாரணை நடத்தப்பட்டு, தீர்ப்பும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் சரியான ஏற்பாடு ஆகும். இதற்கு என்று தனியாகவே ஒரு சட்டம் இயற்றப்படவேண்டும். " பெண்களுக்கு


படிப்பகம்

www.padippakam.com

எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கான சட்டம் " என்ற பெயரில் மத்திய அரசே சட்டம் இயற்ற வேண்டும். அப்படியானால் தான் தேசிய மகளிர் கமிஷனின் பணி பொருள்

படைத்ததாக இருக்கும்.

## 12

## சவால்களை சந்தித்த வீராங்கனைகள்

### ராஜபுத்திர வீரப் பெண்கள்

ராஜபுத்திர வீரப் பெண்களும் ஆண்களைப் போல போர்க்களத்தில் வாளேந்திப் போர் புரிந்த சம்பவங்கள் நிறையவே உண்டு எதிரிகளிடம் சிக்கும் நிலை ஏர்பட்டால் ஐப்பானிய சமுராய் வீரர்களைப் போல வயிற்றில் வாளைப் பாய்ச்சிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளுவதும் இந்தப் பெண்கள் வழக்கம்.

கோணட்வானா அரசருக்குப் பிரதான ஆலோசகராக விளங்கினார் துர்க்காவதி. செல்வாக்கு மிக்க மால்வா மன்னர் பஸ்பகதூரையே ஒரு நேரடி யுத்தத்தில் முறியடித்த துர்காவதியிடம் பெரும் காலாட்படையோடு 20,000 குதிரை வீரர்களும், 1000 பேர் யானைகளும் இருந்தன. ராணிக்குக் குறி பார்த்து துப்பாக்கியை இயக்கவும் தெரியும். காட்டில் நாட்கணக்கில் வேட்டையாடுவார்.

கணவர் இறந்த பின்பு மகன் வீர நாராயணன் சார்பில் நாட்டை ஆண்டார். இப்போது மொகலாய சிங்கம் அக்பர் தாராளமாக வரட்டும். ஒரு கை பார்க்கிறேன் என்று சவால் விட்டார்.

அக்பர் அசப்கான் தலைமையில் ஒரு பெரும் படையை கோணட்வாவுக்கு அனுப்பினார்.

கி.பி. 1564. – இல் நிகழ்ந்த இந்த உக்கிரமமான யுத்தத்தில் வில் வித்தையில் தேர்ந்த அசப்கான் எய்த அம்பு . யானை மீ துமர்ந்து சரமாரியாக ஈட்டிகளையு ம், அம்பு களையு ம் செலுத்துக் கொண்டிருந்த துர்க்காவதியின் இடது தோள்பட்டையில் பாய்ந்து அவரைப் படுகாயப் படுத்தியது. தோல்வி உறுதியாகி விட்ட துர்காவதி மொகலாய வீரர்களிடம் சிறை படக் கூடாது என்று முடிவு செய்தார். சட்டெனறு முன்னாள் அமர்ந்திருந்த யானைப் பாகனிடமிருந்த அங்குசத்தைப் பறித்துத் தன் வயிற்றில் அதைப் பாய்ச்சிக் கொண்டு மரணத்தைத் தழுவினார்.

### சிறை மீண்ட கிரண்ஜித்.

பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்க்க இன்று பாதிக்கப்பட்ட பெண்களே புறப்பட்டு விட்டனர். அவர்களுள் ஒருவர் கிரன்ஜித் அலுவாலியா அவருக்கும் தீபக்கிறகும் திருமணமாகி இருவரும் பத்து ஆண்டுகள் இல்ல றம் நடத்தினர். இரண்டு குழந்தைகளுக்கும் பெற்றோராயினர். ஆனால் கிரண்ஜித்தின் இல்லற வாழ்வு நரகவேதனையாக இருந்தது.

மனைவியை தீபக் அடிக்கடி அடித்துத் துன்புறுத்தினார். ஓர் இங்கிலாந்து பெண்ணுடன் தீபக்குக்கு தொடர்பு இருந்தது. யாரிடம் பேசினாலும் ஸ்குருடிரைவர், டெலிபோன் முதலிய கையில் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு தாக்கி வந்தார். கணவரின் அனுமதி பெற்றுப் பேசிய பின்பும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்தன. தீபக்கின் செ தால்லை பொறுக்காமல் கிரன்ஜித் நீதி மன்றம் சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com

இதை இரண்டு முறை விசாரித்த நீதி மீன்றம், தீபக்கைக் கண்டித்து இனி மனைவியை அடிக்கக் கூடாது என உத்தரவிட்டது. தீபக், மன நோய் சிகிச்சை தரும் டாக்டரிடம் செல்ல வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இதற்குப் பின்னரும் தாக்குதல் நடந்ததால் கிரன்ஜித் பிரிந்து சென்று தனியே வாழ்ந்தார். அப்பொழுது கணவருக்கு எழுதிய கடிதங்களில் தன்னைக் கொடுமை செய்யாமலிருக்குமாறும், தான் சேர்ந்து வாழவே விரும்புவதாகவும் உருக்கமாக எழுதியிருந்தார். பின் சேர்ந்தனர்.

இவர்கள் வாழ்ந்தது இங்கல்ல. லண்டன் அருகில் சஸ்ஸக்ஸ் வட்டாரத்திலுள்ள கிராலியில் கிரன்ஜித் கோபத்தின் உச்சஸ்தாயியை அடைந்தார். 1989 மே 8 – ஆம் தேதி கிரன்ஜித்துக்கு அவருடைய கனடாவிலுள்ள அண்ணன் அனுப்பிய செக்கை தீபக் கேட்டு துன்புறுத்தினார். நான் வறுமையில் வாடும் போது உங்கள்' கேர்ள் பிரண்டுக்கு ' தாராளமாய் செலவு செய்கிறீர்களே ! நியாயமா ? நான் செக்கைத் தர மாட்டேன்" என்றார்.

தீபக்கிரன் ஜித்தைக் கடுமையாக தாக்கினார். கோபத்தின் உச்சியில் கிரன்ஜித் தீபக் மீது பெட்ரோலை ஊற்றி ஒரு தீக்குச்சியைக் கொளுத்தி எறிந்தார். தீபக பைஜாமாவுடன் உடல் எரிந்த நிலையில் கதறிக் கொண்டு ஓடி அடுத்த வீட்டு புல் வெளியில் விழுந்தார். பத்து தினங்கள் கழித்து இறந்தார்.

இது திட்டமிடப்பட்டு செய்த கொலையு மல்ல. ஆத்திரத்தினால் செய்த கொலையும் அல்ல. பத்தாண்டு கால கொடுமையால் மனம் நொந்து போய் செய்த செயல் என்று அவருக்கு ஆதரவாக வாதாடியோர் கூறினார். ஒருவரின் மரணத்துக்குக் காரணமாக அமைந்த குற்றத்திற்காக திருமதி. கிரண்ஜித்திற்கு ஆயுள் தண்டனை விதித்து நீதி மன்றம் தீர்ப்பு கூறியது. அப்போது கிரன்ஜித்தின் வயது 33.

சிறைசசாலை அனுபவத்தைப் பற்றி அவர் கூறினார். . வீட்டில் எப்போதும் கிடைக்காத மகிழ்ச்சி சிறையில் கிடைத்து. எனக்குப் பிள்ளைகள் இல்லாவிட்டால் விடுதலைக்கு முயன்றிருக்க மாட்டேன். அங்கு எனக்குப் பாதுகாப்பு இருந்தது. அங்கு வெளியிலிருப்பவர்களைக் காட்டிலும் மனிதாபிமான மிக்கவர்கள் இருந்தார்கள். டைப் அடிக்க கற்றுக் கொண்டேன். அங்கு என்னைக் கொடுமைப் படுத்த யாருமில்லை என்பது முக்கியமாக இருந்தது.

பிரிட்டனில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டதால் திட்டமிட்டு செய்யப்படும் கொலைக்கும் கூட ஆயுள் தண்டனை தான் விதிக்கப்படுகிறது.

தீபக் செய்த கொடுமைகளையும், கிரண்ஜித்தின் அப்போதைய மனத் தொய்வையும் காட்டுவதற்காக மேலும் சில ஆதாரங்கள் கிடைத்தவுடன் பெண் உரிமை இயக்கத்தார், கிரன்ஜித்தை விடுதலை செய்யக் கோரி குரல் கொடுத்தனர். அவக்களுடைய வாதத்தில் ' பசை' இருப்பதாக அறிந்த அரசு தரப்பு, வழக்கை மறுபரிசீலனை செய்ய ஒப்புக் கொண்டது. இதன்படி நடந்த மேல் முறையீட்டு வழக்கில் கிரன்ஜித் விடுதலை செய்யப் பட்டார்.

கிரன்ஜித்தின் வழக்கு 3 மாதங்களாக லண்டனில் ஓல்ட் பெய்லி நீதி மன்றத்தில் நடந்தது. ஒவ்வொரு வாய்தாவின் போதும் நீதி மன்றத்திற்கு வெளியே பெண்கள் உரிமைப் பாதுகாப்பு இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. " என் கணவர் செய்த பாவங்களைக் கழுவுவதற்காக அவரைத் தீயினால் குளிப்பாட்டி விட்டேன். நான் செய்த பாவங்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கழுவுவதற்காக சிறைக்கூடத்திற்கு யாத்திரை மேற்கொண்டு விட்டேன்" என்று கிரண்ஜித் எழுதினார்.

கிரன்ஜித்தைப் போலவே கொடுமாக்குள்ளான இன்னொரு பெண்மணியான சாரா தான்டன் இப்போது சிறையில் உள்ளார். அவர் குடிகாரக் கணவனைக் கத்தியால் குத்திக் கொன்ற குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்து வருகிறார். அவரையும் விடுதலை செய்யப் பெண் உரிமை இயக்கங்கள் புறப்பட்டு விட்டன.

இந்த வழக்கின் தீர்ப்பு சட்டத்துறை வரலாற்றில் முக்கிய மைல் கல்லாகும்.

கிரன்ஜித் செய்தியை புகழ் பெற்ற 'லண்டன் டைம்ஸ்' தனது நாளேட்டின் முதல் பக்கத்தில் செப்டம்பர் 26-ம் தேதி மிகப் பெரிய படத்துடன் வெளியிட்டது. சுமார் ஐந்து பத்தி இடத்தைப் பிடித்த அந்தப்படம் கிரன்ஜித் அலுவாலியா என்ற இந்திய வம்சாவளிப் பெண்ணின் படமாகும்.

கிரன்ஜித்தின் வழக்கை Southhall Black Sisters என்ற ஆசிய பெண்கள் அமைப்பு எடுத்து நடத்தியது. இதன் தலைவி பிரக்னா படேல் (வயது 32)வழக்குரைஞர் ரோகிட்சங்வி (வயது 37). கிரஞ்சித் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போது சஞ்சய் என்ற 9 வயது மகனும் ரவி என்ற 7 வயது மகனும் உள்ளனர். கிரன்ஜித் பிரபலமாகி விட்டார். பி.பி.சி. அவரைப் பற்றிய செய்திப் படம் ஒன்றை தயாரிக்கிறது. ஒரு புத்தக நிறுவனம் அவருடைய சுய சரிதையை எழுத ஆரம்பித்துள்ளது. லண்டனில் அவருக்கு வீட்டு வாடகை குறைத்துள்ளது. மகன்களின் பள்ளிச் செலவையும், சாப்பாட்டுச் செலவையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

## 13

# உழைக்கும் மகளிர் பிரச்சினைகள்

அலுவலகத்தில் தனது நிலையை நிலை நாட்ட வேண்டுமென்றால் சற்று கடுமையாவும், திறமையாகவும் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

**சுஜாதா**

தனியார் கம்பெனி ஒன்றில் செகரட்டரியாகப் பணிபுரியும் இருபத்திரண்டு வயதுப் பெண். சம்பளம் மாதம் ரூ.800/- அவளுக்கு முக்கிய பிரச்சினை அலுவலகம் முதல் பஸ் ஸ்டாண்ட் வரை வழியில் நிற்கும் ரோட்சைடு ரோமியோக்கள் தான் !

இது பற்றி வீட்டில் புகார் மனு கொடுத்தால் நீ சம்பாதிக்கும் ரூ. 800/-க்கு இந்த பிரச்சினையெல்லாம் எதற்கு?" என்று வேலையிலிருந்து நிறுத்தி விடுவார்கள்.

போலீயில் புகார் செய்தால் " அந்த ரோமியோக்களில் பலர் பெரிய அதிகாரிகளின் மகன்கள். உனக்கு ஏனம்மா பொல்லாப்பு "? என்று அன்பாக அட்வைஸ் செய்கிறார்கள்.

வேறு நல்ல வேலை கிடைக்கும் வரைக்கும் இந்த வேலையிலேயே தொடருவது என்று முடிவு செய்து விட்டார் சுஜாதா.ரோமியோக்கள் கிண்டல் செய்தால் அம்மா, அப்பாவிடமும் சொல்லுவதில்லை. போலீஸிடமும் சொல்லுவதில்லை " என்று இடுப்பில் உள்பக்கம் சாவிக்



படிப்பகம்

www.padippakam.com

கொத்து போல் தொங்கிக்கொண்டிருக்கும் முக்காலடி நீளமுள்ள மடிப்புக் கத்தியைக் காட்டினார். " இது தான் நிரந்தர பாதுகாப்பு " என்றார்.

பெண்ணினத்துக்கு உண்மையில் இவர் சிறந்த வழிகாட்டி என்று பெண்கள் வேலை செய்யும் பெரும்பாலான இடங்கள் தனியார் கம்பெனிகளாகத் தான் இருக்கின்றன. சேல்ஸ் கேர்ல்ஸ், செகரட்டரி, டைப்பிஸ்ட், ரிசப்ஷனிஸ்ட் போன்ற வேலைகளில் இவர்களில் பலர் கம்பெனி முதலாளிகள் மற்றும் மேனேஜர்களிடம் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களின் விருப்பத்துக்கு இணங்கினால் மட்டுமே பதவி நீடிக்கும் என்ற நிலை பல கம்பெனிகளில் உள்ளது.

மேலும் பல தனியார்கம்பெனிகளில் பெரும்பாலும் ஒரே வேலை செய்யும் ஆணுக்கு ஒரு சம்பளம். பெண்ணுக்கு ஒரு சம்பளம். மேலும், பெண்களுக்கு அத்தியாவசியமான பிரசவலீவு கொடுக்கப்படுவதில்லை. " "வேலையை விட்டுப் போ " என்கிறார்கள்.

சில கம்பெனிகளில் கிளாமரான காட்சிப் பொருள்கள் என்ற வகையில் ஆண்களை விட பெண்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த அதிக சம்பளம் அழகான சேலை உடுத்தவும் லிப்ஸ்டிக், மை பூசவும், பவுடர், மற்றும் வாசனைப் பொருள் வாங்கவும் தரப்படுகிறது. இது மானங்கெட்ட சலுகை என்றாலும் வயிற்றுக் கொடுமை காரணமாக ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது.

" குழந்தையைப் பெத்தவ நீதான் . . . பொறுப்பில்லாம நீ பாட்டுக்கு வேலைக்குப் போனா எப்படி " என அங்கலாய்த்துத் தனக்கு அடிமைத் தொழில் மட்டுமே செய்யவேண்டும் என்று சொல்கிற கணவன்மார் பலர். அப்படிச் சொன்னாலும் சரி, வீட்டு வேலையைச் செய்ய கணவன் மறுத்தாலும் சரி, அவன் மீது வழக்குத் தொடரலாம் கியூபா நாட்டில் அதன் அதிபர் தான் பிடல் காஸ்ட்ரோ.

'தக தக ' என மின்னும் ரோஸ் பவுடரால் உடலை மேனா மினிக்கித் தனத்ததால் ஆண்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கனவுலகக் கன்னிகள் அதாவது சினிமா நடிகைகள் அவர்களும் பெண்கள் தான் க் அவர்கள் வெளிப் பூச்சில் ஆயிரம் பகட்டுகள் இருப்பினும் யதார்த்த வாழ்க்கை சோகமும், சோதனையும், துன்பமும், தோல்வியும், விரக்தியும் நிறைந்தது. தற்கொலை முயற்சி தற்கொலை ! இந்தக் கனவுக் கன்னிகளுக்குமா? திவ்யபாரதி, படாபட் ஜெயலட்சுமி, ஜெயப்பிரதா, சோபா, கல்பனா . . . பட்டியல் தொடர்கிறது.

அன்று இரவு அந்த படத்தின் கதாநாயகன் திவ்யபாரதியைத் தன் படுக்கை அறைக்கு அழைத்தபோது, " பக்கத்து அறையில் உங்கள் மகள் இருக்கிறாளே கை படாத ரோஜா. நீங்கள் ஏன் அவளை அனுபவிக்கக் கூடாது?" என்று மூஞ்சில் சாட்டையால் அடித்த திவ்யபாரதி ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். பெண்களைப் பொறுத்த வரையில் கொலைகள் எல்லாம் தற்கொலை எனப் பதிவாகும் அதற்காகக் கோடி வரை கை மாறும்.

இது பற்றி ஒரு துணை நடிகை சொன்னார் " அம்மாவும், அப்பாவும் பணங்காய்ச்சி மரமாச்சேன்னு அன்பா பேசு வாங்க. பொன் முட்டையிடுற வாத்தோட மனது கோணிடக்கூடுதேன்னு ' சோழா ஓட்டல் ' லேயிருந்து பிரியாணி வர வைப்பார். ராத்திரி நேர உறவுக்காக போலி மரியாதை காட்டுவார் கதாநாயக நடிகர். அவரோட ' அந்த ' அழைப்பை ஏற்கறதைத் தவிர வேறு வழியில்லை . . . காரணம், கதாநாயகர்கள் நினைச்சாத்தான் ஒரு நடிகை அவர் கூட நடிக்க முடியும். அதுக்கு விலை . . . . அவருடன்



படிப்பகம்

www.padippakam.com

' அட்ஜெஸ்ட் ' பண்ணிக்கிறது தான். அப்படி அனுசரித்துப் போகலைன்னா அடுத்த படத்தில் அவருடன் நடிக்க முடியாது. இது Professional approach. இதையும் மீறி ' லவ்வு, கிவ்வு ' மாட்டிக்கிட்டா தற்கொலை தான் ! கொலை தான் !!

" பெத்தவங்க, மத்தவங்கன்னு தன்னைச் சுத்தியிருக்கிற எல்லோருமே தனது பணத்துக்காகத்தான் என்கிற உண்மை புரியும்போது தனக்காக மட்டுமே தன்னை நேசிக்கிற ஆள் வேணும்னு நினைச்சுத் தேடறாங்க . . . அந்தத் தேடல்ல அவங்க சரணடையறது பெரும்பாலும் ஏற்கனவே திருமணமான ஒருத்தர்கிட்ட தான் !".

காதல் தோல்வியில் சாவது பெரும்பாலும் நடிகைகளே ! அவ்வாறு தற்கொலை செய்துகொன்ட ஓரே நடிகர் குருதத் ! அவர் வகிதா ரகுமானை காதலித்துத் தோல்வியுற்று தற்கொலை செய்து கொண்டார்.

கல்யாணமான நடிகை ஒருவர், சக நடிகருடன் உறவு கொண்டு தன் முதல் உறவை முறித்துக் கொள்ள நினைத்தபோது, " வேண்டவே வேண்டாம் ! அந்த தப்பை மட்டும் செய்யாதே ! அந்த நடிகரும் ஏற்கனவே திருமணம் ஆனவர். இரண்டாம் திருமணம் சட்டப்படி செல்லாது. பிரச்சனை பலவாகி, உன்னைப் பைத்தியத்தில் கொண்டு போய் விட்டு விடும் " என்று பலமான அட்வைஸ் செய்து விவாகரத்திலிருந்து காப்பாற்றினார் அந்த நடுத்தர வயது நடிகை.

ஒரு நடிகை சொன்னார்:- ஒரு சமயம், இன்று பிரபலமாயிருக்கும் ஒரு கதாநாயகன் என்னை ' அந்த ' விஷயத்துக்காகக் கூப்பிட்டார். கூப்பிட்டார் என்பதை விட ' கெஞ்சினார் ' என்பது தான் உண்மை. நான் ' ப்ளீஸ் வேணாம் நான் ஒருத்தரை சின்சியராய் லவ் பண்ணிக்கிட்டிருக்கேன்." என்றேன். அதற்கு அவர், " சரி, கல்யாணம் நடக்கலேன்னா என்ன பண்ணுவே ?" என்றார்.

" செத்துப் போவேன் " அவர் சொன்னார்" அப்படி தற்கொலை பண்ணிக்கிறதுக்கு முடிவு பண்ணிட்டா . . . ஒரு அரைமணி நேரத்துக்கு முன்னாலே கூப்பிடு. அப்போவாவது என் கடைசி ஆசையை நிறைவேற்றிக்கிறேன்."

இது தான் நிலைமை !

மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறை ஓர் ஆய்வினை நடத்தியது. பேராசிரியர் திருமதி பி.பி. பரீக் மற்றும் பேராசிரியர் எஸ்.வி. சுகாட்சி ஆகியோர் இந்த ஆய்வினை நடத்தினர்.

1975 – இல் நாட்டில் ஆயிரத்துக்குக் குறைவான பெண் இன்ஜினியர்களே இருந்தனர். 1990–இல் இது 19180 என உயர்ந்தது. இவர்களில் 86% பேரைச் சந்தித்து ஆய்வு செய்யப்பட்டது.

பெண்களை ஒதுக்குவது என்பது இன்ஜினியரிங் கல்லூரியிலேயே ஆரம்பித்து விட்டது. அவர்கள் கேட்கும் துறை அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. தொழில் துறை சம்மந்தமான பயணங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லுவதில்லை. படித்து முடித்தால் வேலை தரப்படுவதில்லை. பல கம்பெனிகளில் " பெண்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை " என்று விண்ணப்பத்தாளிலேயே அச்சிட்டு விடுகிறார்கள். சில கம்பெனிகளில் நேரடி தேர்வுக்கு வரவைத்து விட்டு " இந்த வேலையுடன் வீட்டு வேலையையும் எப்படி கவனிப்பீர்கள் ? என்பது போன்ற தேவையற்ற கேள்விகளையும் கேட்கின்றனர். B.E. படித்து முடித்த26% பெண்கள் வேலை இல்லாமல் இருக்கின்றனர். அவர்களில் சிலர் வறுமை காரணமாக தினக்கூலிக்குப் போகின்றனர். 1989 – இல் B.E. முடித்த ஒரு பெண் 1993–இல் 1200 ரூபாய் சம்பளத்துக்கு ஆபீசில் கிளார்க்காக சேர்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

வேலை கிடைத்தாலும் பெண் இன்ஜினியர்களுக்கு சொற்ப சம்பளமே தரப்பப்பட்டது. எழுத்து வேலை மட்டுமே தரப்பட்டது. மேற்பார்வை செய்வதுபோன்ற பணிகள் தரப்படவில்லை. பதவி உயர்விலும் பாரபட்சம் காட்டப்பட்டது.

இத்தனை குறைபாடுகளையும் சரி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் (A1, 924) கள்ளிக் கோட்டை விமான நிலையத்தில் தரை இறங்கியது.

சுங்க இலாகா அதிகாரிகள் அனைத்துப் பொருட்களையும் சோதனையிட்டதில் ஒன்றும் அகப்படவில்லை. திடீரென்று விமானப் பணிப்பெண்கள் மீது பாய்ந்தனர். " நீங்கள் உங்கள் உடலில் தங்கம் போன்ற பொருட்களை மறைத்து வைத்து கடத்தி வந்திருக்கிறீர்கள். நீங்கள் அபுதாயியில் ஷாப்பிங் போகவில்லையா? அங்கு தங்களையே விற்று பணம் சம்பாதிப்பவர்கள் ஆயிற்றே நீங்கள். அப்படிப்பட்டவர்கள் மலிவான பெண்கள். உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும் ". என்று கூறி ஆண்களுக்கான டாய்லெட் அறைக்கு இழுத்துச் சென்று அனைத்து உடைகளையும் கழட்டி எடுத்து விட்டு சோதனை போட்டனர். இது பற்றி பாதிக்கப்பட்ட விமான பணிப்பெண்கள் மேலதிகாரிகளுக்கு புகார் மனு கொடுத்தனர்.

## 14

# கேள்வியும், பதிலும்

### போலீஸ் செய்தி 15.8.92

கேள்வி : ஆண்களைவிட பெண்கள் படிப்பில் முன்னேறி வருவது எதைக் காட்டுகிறது?

கி.ராஜ் நாராயணன் பதில்:- பொதுவாகவே ஆண்களை விட பெண்கள் புத்திசாலிகள், தந்திரசாலிகள். பெண் நம்மை ஜெயித்து விடுவாள் என்று நாம் தான் அடக்கி வைத்திருக்கிறோம் ஒரு காலத்தில் அவர்களுடைய புகழ் ' ஓகோ ' என்று பறந்து கொண்டிருந்தது என்பது ஆய்வாளர் மட்டுமே அறிந்த சங்கதி.

ரசனையில், அனுபவிப்பில், ஞானத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவர் பெண் தான் என்று ரசிகமணி டி.கே.சி. சொல்லிச் யிருக்கிறார். பெண்களைக் கரும்பு என்றும் ஆண் வெறும் நாணல் என்றும் உவமையில் செல்லுவார் அவர்.

படிப்புக்கு மட்டுமல்ல, கலைகளுக்கும் அதி தேவதை சரஸ்வதி (எ) கலைவாணியே அவளை வெற்றி கொள்ள முடியாது; இணைந்து வாழலாம்.

### குறைந்து வரும் பெண் மக்கள் தொகை.

| மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | | 1000 ஆனுக்கு பெண் |
|---|---|---|
| 1901 | – | 972 |
| 1911 | – | 964 |
| 1921 | – | 955 |


படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 1931 | – | 950 |
| 1941 | – | 945 |
| 1951 | – | 946 |
| 1961 | – | 941 |
| 1971 | – | 930 |
| 1981 | – | 935 |

அருள் மொழி பதில் :கேள்வி :

பெண்ணுரிமை உண்மையில் எப்படிப்பட்டதாத இருக்கவேண்டும்?

பதில் : தன் வாழ்க்கையும், எதிர்காலமும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு பெண்ணே முடிவு செய்வதாக இருக்க வேண்டும்.

கேள்வி : சமீபத்தில் உங்களுக்குப் பிடித்திருந்த திரைப்படம்.

பதில் : ஒரு பெண் வைப்பாட்டியாகக் கூட வாழலாம். ஆனால் வாழாவெட்டியாக இருக்ககூடாசு? என்று உபதேசம் செய்யும் பாக்யராஜ்களுக்கு மத்தியில் ' இன்னொருத்தியோடு வாழ்ந்து விட்டு திரும்பி வந்து நான் திருந்தி விட்டேன் வா நாம் சேர்ந்து வாழலாம் என்று சொல்லும் கணவனைப் பார்த்து " நான் இன்னொருவருடன் குடும்பம் நடத்திவிட்டு வந்திருந்தால் நீ என்னை ஏற்றுக் கொள்வாயா? " என்று மனைவியைக் கேட்க வைத்த படம்.

கேள்வி : அரசியல் கட்சியில் பெண்கள் ஈடுபடுவது அவசியம் தானா?

பதில் : பெண்கள் ஈடுபடாத எந்தத்துறையும் முழுமை பெறாது அரசியலும் தான்.

## 15

# எதிர்கால திட்டத்தில் ; பல்வேறு ஆலோசனைகள்.

பெண்கள் நிலை உயர சமுதாயமும், அரசும் என்ன செய்ய வேண்டும்?

பெண்கள் நிலையை முன்னேற்ற அரசு சமூக நல்த்துறை மூலமும் பெண்கள் நல அமைப்புக்கள் மூலமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. எனினும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. மேலும் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி சில ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. இவ்வற்றுள் அரசு செய்ய வேண்டியவை, சட்டத்தில் என்ன புதுமைகள் செய்யவேண்டும், ஆண்கள் மற்றும் பெண்கள் மனோபாவத்தில் எத்தகைய மாறுதல் தேவை, சமுதாயத்தின் உணர்வில், நம்பிக்கையில் எத்தகைய மாறுதல் தேவை என்ற தெளிவான பரிந்துரைகளும் தரப்பட்டுள்ளன.

1. பெண்களை அவர்கள் குடியிருக்கும் இடத்திலேயே விசாரணை செய்ய வேண்டும்.
2. வீட்டிற்கு வெளியில் காவல் துறை விசாரணைக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் பெண் போலீஸ் தான் அழைத்து வரவேண்டும்.
3. மாவட்ட தலை நகரில் புதிதாக ஏற்படுத்தப்படும் பெண்கள் காவல் நிலைய ஆய்வர் மாவட்டம் முழுதும் உள்ள பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

சம்மந்தப்பட்ட குறிப்பாக பெண்கள் மீதான தாக்குதல் சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் வகையில் சட்டத்திருத்தம் தேவை.

4. விசாரணைக்கு எந்தப் பெண்ணை அழைத்துச் சென்றாலும் அழைத்துச் செல்லும் நாள், நேரம், அழைத்துச் செல்லப்படும் இடம், அழைத்துச் செல்வதற்குப் பொறுப்பான காவல் துறை அலுவலர் விபரம் போன்றவை அடங்கிய கையெழுத்திடப்பட்ட விபர துண்டறிக்கை வீட்டிலுள்ளவர்களிடம் அளிக்கப்பட வேண்டும்.

5. உறவினர்கள் எந்த நேரத்தில் வந்தாலும் காவல் நிலையத்தில் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

6. காவல் நிலையத்திலிருந்து எந்த நேரத்திலும், யாருடனும் பேச அனுமதிக்கப்பட வேண்டும்.

7. காவல் துறை உயர் அதிகாரிகள் முன்னறிவிப்பின்றி திடீரென காவல் நிலையங்களை தணிக்கை செய்து சட்ட விரோதமாக யாரும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

8. பெண்போலீஸ் இல்லாமல் பெண்களைக் கைது செய்யவோ, காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லவோ கூடாது.

9. எல்லா பணிகளிலும் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு செய்து அதை சரிவர அமுல் படுத்த வேண்டும்.

10. கண்டக்டர், டிரைவர், I.A.S., I.P.S., I.F.S. போன்ற பணிகளிலும் பெண்களுக்குக் கட்டாயமாக 50% ஒதுக்க வேண்டும்.

11. மனைவி கணவனால் துன்புறுத்தப் பட்டால் அவள் அதிக சிரமமின்றி நீண்ட கால நீதி மன்ற நடவடிக்கைகள் — அபரிமிதமான செலவுகள் இன்றி மண விலக்கு மற்றும் ஜீவனாம்சம் பெறும் வகையில் நீதிமன்ற நடைமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும்.

12. இலவச சட்ட உதவி என்பது போலி விளம்பரமாக மட்டுமே உள்ளது. நீதி மன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் வழக்கறிஞர்களே இதிலும் ஈடுபடுத்தப்படுவதால் அவர்கள் வழக்கமான பாணியில் தான் இதைச் செய்கின்றனர். இதனால் நிலைமை கருச் சிதைவடைகிறது ஆகவே தன்னலமற்ற அரசு ஊதியம் பெறும் வழக்கறிஞர்கள் இப்பணியில் வட்டந்தோறும் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் பணியை மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட நிர்வாக நீதிபதிகள் உன்னிப்பாகக் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

13. பெண்களுக்கு தொழிற்சாலை, விவசாயம், கட்டிடத் தொழில், கல் உடைத்தல் போன்ற பல தொழில்களிலும் ஆண்களுக்கு நிகரான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

14. காவல் நிலையங்களில் கற்பழிப்புக் கொடுமைகள், பள்ளிகள், கல்லூரிகள் போக்குவரத்து வாகனங்கள், தொழிற்கூடங்கள் அலுவலகங்கள், பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் பெண்களைக் கேலி பேசுவது தடை செய்யப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

15. பெண்களைத் தரக்குறைவாக சித்தரிக்கும் சினிமா, டிவி, நாடக காட்சிகள் தடை செய்யப்பட வேண்டும்.
16. பெண்களுக்கு சுய தொழில் செய்ய கடன் வழங்க வேண்டும். பயிற்சி மையங்கள் அமைக்க வேண்டும்.
17. கிராமப் புறத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்து பெண்களுக்கும் திருமண உதவி செய்யப்பட வேண்டும்.
18. பொது இடங்களில் பாதுகாப்புடன் கூடிய கழிப்பிட வசதி செய்யப்பட வேண்டும்.
19. பெண்களுக்குப் பயன்படும் வகையில் நூலக வசதி விரிவு படுத்தப்பட வேண்டும்.
20. பெண்களுக்கு துணிச்சலையும் நம்பிக்கையையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தும் பெண்ணுரிமை சம்மந்தப்பட்ட நூல்களை அரசு கொள்முதல் செய்து பெண்கள் மத்தியில் தாராளமாய் விநியோகம் செய்ய வேண்டும்.
21. நீதிமன்ற அனுமதியின்றி மனைவியை விட்டு வேறு பெண்ணைச் சேர்த்துக் கொள்ளுவது கொலைக்குற்றத்துக்கு ஈடானதாக அறிவிக்கப் பட வேண்டும். அவற்றை உடனடியாக காவல் துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவரும் பொறுப்பினை பெண்கள் அமைப்புக்களிடம் விடப்பட வேண்டும்.
22. பெண்களுக்கு சாதகமான சட்ட விதிகள் தாய்மொழியில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டும். பெண்களின் உரிமைகளை அவர்கள் தெரிந்து கொள்ள அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.
23. கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் பின் தங்கிய பெண்களுக்கு அரசு அளிக்கும் பாதுகாப்பு அதிகமாக்கப்பட வேண்டும். அவர்களில் படித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
24. அவர்களுக்கு எளிய நிபந்தனைகளின் பேரில் அரசு கடனுதவி வழங்க வேண்டும்.
25. ஏமாந்த பெண்ணைக் கற்பழித்து விட்டு கை விட முனையும் ஆண்மீது கொலைக் குற்றத்திற்கு நிகரான தண்டனை அளிக்கும் வகையில் சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்ட ஆண்களுக்குத் துணை போகும் பெரியமனிதர்கள் மீதும் கொலைக் குற்றத்திற்கு ஈடான குற்றம் சுமத்தப்படும் வகையில் சட்டம் வேண்டும். இது சம்ம்ந்தமான மனுக்களைப் பெற்று அதிரடி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட வேண்டும்.
27. உடல் ஊனமுற்ற பெண்கள் மேல் படிப்பு வரை படிக்க இலவச உதவி செய்யப்பட வேண்டும்.
28. உடல் ஊனமுற்ற பெண்கள் திருமணத்துக்கு அரசு ரூ. 100.00 நிதியுதவி செய்ய வேண்டும்.
29. உடல் ஊனமுற்ற பெண் பிரசவமாகும் போது அரசு மருத்துவ மனையில் ஒரு மாதம் இலவச மருத்துவ உதவி செய்ய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

30. சமீப காலமாக வரதட்சணைக் கொலை, கற்பழிப்பு க் கொலை சிறுமி அல்லது பெண்ணின் உடலை எரித்து விடுவது என்பது நடந்து வருகிறது. இதனால் தடயங்கள் அழிக்கப்படுகின்றன. ஆகையால் 10 வயது முதல் 40 வயது வரையுள்ள பெண்கள் உடலை எரிக்கு முன் உள்ளூர் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து ' சந்தேகம் ஏதும் இல்லை, எரிக்கலாம் என்று சானறு பெறும் வகையில் சட்டத்திருத்தம் செய்ய வேண்டும்.

31. பல பெண்கள் விபசார விடுதிக்கு வரக் காரணம், காதலித்தவன் குழந்தை கொடுத்து விட்டு ஊரை விட்டு ஓடுவது அல்லது திருமணம் செய்து கொள்ள மறுப்பது தான். இவர்கள் ' விதவையு ம்' அல்ல ' கணவனால் கைவிடப்பட்டவரும் ' அல்ல. இவர்களின் மறு வாழ்வு சம்மந்தமாக இது வரை சரியான முறையில் பரிசீலிக்கப்படவில்லை.

அரசு பரிசீலித்து அவர்களுக்கு தனி சலுகை அளிக்க வேண்டும்.

32. சிவகாசி, திருப்பூர் போன்ற இடங்களில் தீப்பெட்டி, அச்சகம், பனியன் போன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுமிகளுக்கு மருத்துவ மற்றும் கழிப்பிட வசதி செய்து தர தொழிற்சாலை உரிமையாளர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் ஊதியம், விடுப்பு முதலியவற்றை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும்.

33. எதிர்த் தாக்குதல் நடத்தும் பயிற்சிகளைப் பள்ளிகளில் பெண்களுக்கு அளிக்க வேண்டும்.

34. பேருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் பெண்கள் மீது தாக்குதல் நடந்தால் பொது மக்கள் வேடிக்கை பார்க்காமல் எதிர்த்து தாக்க வேண்டும்.

35. பெண்கள் மீதான தாக்குதல்கள் பற்றி விசாரிக்க மாவட்டம் தோறும் பெண் நீதிபதியைக் கொண்ட நீதி மன்றங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

36. கற்பழிப்பு வழக்குகளைப் பொறுத்த வரையில் " குற்றவாளி இளவயதுடையவர் என்பதால் அல்லது " உணர்ச்சி வேகத்தில் நடந்து விட்டதால் குறைந்த தண்டனை விதிப்பது" என்பது தடை செய்யப்பட வேண்டும்.

37. ஜீவனாம்சம், திருமண வயது வரம்பு, மணவிலக்கு, இரண்டாம் திருமணம், வரதட்சணைத் தடை போன்றவை சம்மந்தமாக எல்லா மதங்களுக்கும் பொருந்தும் ஒரே சட்டம் இயற்றப்பட வேண்டும்.

38. வரதட்சணைக் கொலை சம்மந்தப் பட்ட வழக்குகளை ' Technical flaw' காரணமாக தள்ளுபடி செய்வதைத் தடை செய்ய வேண்டும்.

39. ' Dying Declaration — ஐ நீதி மன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

40. காதல் திருமணத்துக்குக் குறுக்கே நின்று பெண்ணைச் சித்திரவதை செய்யும் பெற்றோருக்குக் கடுமையான தண்டனை வழங்க வகை செய்ய வேண்டும்.

41. பாதிக்கப்பட்ட பெண்தான் நேரடியாக புகார் தர வேண்டும் என்ற நிலை மாறி, காதலன் மற்றும் தகவல் தெரிந்த யார் மனு செய்தாலும், போலீசார் நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

காதல் திருமணங்களால் ஜாதி, மத வேலிகள் தகரும், வரதட்சணைப் பிரச்சினை ஒழியும்.

42. ஆபாச சுவரொட்டிகள் திரைப்படங்கள், விளம்பரங்கள், புத்தக அட்டைகள், புத்தகங்கள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும்.

43. பெண்களின் பொருளாதார நிலை மேம்படும் வரை விபசாரத்தை முற்றிலுமாக ஒழித்து விட இயலாது. அது வரை, இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை தரகர்களும், விபசார விடுதி உரிமையாளர்களும், போலீசாரும் சுரண்டாதபடி தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இத் தொழிலை வரையறை செய்து சட்டத்தின் பிடிக்குள் கொணர்ந்து ஒழுங்கு படுத்த வேண்டும். திருட்டுத் தனமாக பெருமளவில் நடந்து கொண்டிருக்கும் இத் தொழிலை நெறிமுறைப் படுத்த வேண்டும்.

44. வயதுக்கு வராத சிறுமிகள் மீது பாலியல் பலாத்காரம் பற்றிய செய்திகள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. ' Penetration is sufficient to constitute the sexual intercourse necessary to the offence of rape" என்கிறது. I.P.C. 375. ஆகையால் சிறுமிகள் மீதான வன்முறை ' Rape ' ஆகாது.
எனவே சிராய்ப்பு, இரத்தக் காயம், வீக்கம், செய்கை, மிரட்டல் போன்ற பல்வேறு தடயங்களின் அடிப்படையில் தண்டிக்க வகை செய்ய வேண்டும்.

45. அரேபிய ஆசாமிகளுக்கு முஸ்லீம் பெண்கள் விற்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும். குறிப்பாக ஐதராபாத் முஸ்லீம் சிறுமிகளுக்கு சுய - வேலைவாய்ப்புக்குத் தாராள கடனுதவியும், திருமண நிதி உதவியும் வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும்.

46. திருமண செலவுகளைக் கட்டுப் படுத்த ' Orissa Legislation on Expenditure on Marriage Bill 1993, " அரியானா அரசு சட்டம் 38/ 1976 ஆகியன வந்துள்ளன. இதன்படி திருமணம் நிச்சயதார்த்தம் இரண்டும் சேர்த்து ரூ. 5000/- க்கு அதிகமாகக் கூடாது போன்ற சட்டத்தை மத்திய அரசும், அனைத்து மாநில அரசுகளும் கொண்டு வரவேண்டும்.

47. வரதட்சணை சாவுகள் திருமணமான பத்து ஆண்டுகளுக்குள் எப்போது நடந்தாலும், அந்த வரதட்சணைப் பேரத்தில் ஈடுபட்ட கணவர் தரப்பைச் சேர்ந்த அனைவரையும் திருமண தரகரையும் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

48. திருமண வயதை எய்தி விட்டதாக சான்று ஒப்படைத்தால் மட்டுமே திருமணத்ததைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் பட வேண்டும். மத குருக்கள் நடத்தும் திருமணத்திலும் இது கட்டாயமாக்கப் பட வேண்டும்.

49. விதவை திருமணம் நடந்தால் அரசு அப்பெண்ணுக்கு திருமண உதவியாக ரூ. 5000/- வழங்க வேண்டும்.

50. பெண்களை மாலை 6 மணி முதல் மறு நாள் காலை 6.00 மணிக்குட் பட்ட நேரத்தில் காவல் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

## முடிவுரை.

இந் நூலின் நோக்கம் பெண் ஆணை விட உயர்வானவள் என்று கூறுவது அல்ல. முதல் பதிப்பு வெளியான போது பல ஆண் நண்பர்கள், "சார் " ' ஆணுரிமைப் போர்' எப்போது வெளியிடப்படுன?" என்று கேட்டார்கள். நானும் ' தேவை ஏற்பட்டால் ' என்றேன்.

ஆணை மட்டம் தட்ட ஏற்பட்ட நூல் அல்ல இது. மட்டம் தட்டப் பட்டுள்ள பெண்ணை உயர்த்துவது ஒன்றே இந்நூலின் குறிக்கோள் !

கல்யாணம் என்பது ஒரு ஒப்பந்தம். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து வாழ்ந்து இன்பத்தைப் பகிர்ந்து உண்டு, பிள்ளைப் பெற்று, ஒரு சமூக அங்கமாக வாழ்வது என்று அவர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஓர் ஒப்பந்தம். இது, அவர்கள் கூட்டாக அனுசரிக்க வேண்டிய உறுதி. இதில் யாரும் உசத்தி இல்லை யாரும் தாழ்ச்சியும் இல்லை. ஆனால் அவர்கள் பிரியவும் உரிமை உள்ளவர்கள் ஆகிறார்கள். கணவனின் தாலியோ, அல்லது மனைவி என்கிற பதவியோ தனக்குச் சேர்ந்திருக்கிறது எனபதற்காக, அந்தப் பெண் அவன் செய்யு ம்கொடுமைக்கு அடங்க வேண்டிய அவசியம் இல்லை. அவன் செய்யும் துரோகத்துக்கு அடிபணிய வேண்டிய கட்டாயம் இல்லை. அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்று, வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். இதில் ' கற்பு ' என்பது எது? கற்பு என்பது ஒரு ' மன ஒழுங்கு ' அது ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்க வேண்டிய ' கடமைப் பாடு '.

**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை வாழ்க !**

❋ ❋ ❋



படிப்பகம்

www.padippakam.com

## நன்றியோடு நினைவு கூற :

இந்நூல் எழுத விவரச் சேர்க்கைக்குப் பயன்பட்ட பின்வரும் நூல்களையும், நூலாசிரியர்களையும், பத்திரிகைகளையும், நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

1. வரலாறு படைத்த வழக்குகள் — சிவலை இளமதி
2. இந்திய வரலாறு — ஈ.எம்.எஸ்
3. யுகாக்கினி — இன்குலாப்
4. விடுதலைப் போரில் விடிவெள்ளிகள் — ஆர். நல்லகண்ணு
5. இந்திய விடுதலைப் போர் 1857–1947 — எம்.ஏ.ரஹீம்
6. பகத்சிங்கும்,, புரட்சி தோழர்களும் — சிவவர்மா
7. பெண்ணடிமை தீர. — செ. கணேசலிங்கன்
8. காலந்தோறும் பெண்மை — ராஜம் கிருஷ்ணன்
9. Demystification — Nandita Haksar
10. பகத்சிங்கும், இந்திய அரசியலும் — சுப. வீரபாண்டியன்
11. சும்மாவா வந்தது சுதந்தரம் — டாக்டர் கோ. செல்வம்
12. ஓர் இந்திய கம்யூனிஸ்ட்டின் நினைவலைகள் — ஈ.எம்.எஸ்.
13. Indian Struggle for freedom Govt of west Bengal
14. மற்றும் கவிஞர் வைரமுத்து, மேத்தா, மற்றும் பலர் கவிதைகள்
15. வலசை து. ஜெயராமனின் ' அண்ணல் அம்பேத்காரின் ஒன்றுசேர் ' ' பெண்ணுரிமைக்கு பேரறிஞர் அம்பேத்கார் '
16. Indian Express, 'The Hindu' தீக்கதிர், குமுதம் மகளிர் சிந்தனை. நக்கீரன் செம்மலர், இளைஞர் முழக்கம், போலீஸ் செய்தி குங்குமம்

    தராசு தினமணி, தினமணி சுடர் கட்டுரைகள், செய்திகள்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


எங்கள் வெளியீடுகள் :

- பெண்கள் மீதான தாக்குதலும் பெண்ணுரிமைப் போரும்
- அரசு ஊழியர்களும், அடிப்படை உரிமைகளும்
- சிரிப்பு மருந்தும் சிந்தனை விருந்தும்

ஒரு புத்தகம் விலை ரூ. 10 மட்டுமே.
தபாலில் பெற ரூ. 12 M.O செய்யவும்.

மூன்று புத்தகங்களும் சேர்த்து வாங்குவோர் ரூ.30 மட்டும் M.O. செய்தால் போதும்.
(தபால் செலவு இலவசம்)

M.O. அனுப்ப வேண்டிய முகவரி :-
' காஸ்ட்ரோ வெளியீடு '
11F 8, மேலப்பாளையம்,
செங்கம் 606 701
தி.ச.மாவட்டம்.


படிப்பகம்